20 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 20 பாலம் 03 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் FEBRUARY 01, 2010

# திடகாத்திரமான நிலையில் கனேடிய நிதி நிறுவனங்கள்

உலகிலேயே மிகவும் திடகாத்திரமான நிலையில் கனேடிய நிதி நிறுவனங்கள் உள்ளதாக உலக பொருளாதார மன்றமும் (World Economic Forum) மூடியின் முதலீட்டாளர் சேவை நிறுவனமும் (Moody's Investor Service) தெரிவித்துள்ளதாக கனேடிய பிரதமர் ஸ்ரீபன் காப்பர் சுவிற்சலாந்திலுள்ள டேவேஸ் நகரில் (Davos) நடந்த உலக பொருளாதார மன்றத்தின் மாநாட்டில் கலந்து கொண்டு பேசும் போது, ஜனவரி மாதம் 28, 2010 ஆம் திகதி தெரிவித்து உள்ளார்.



பேராசிரியர் ஸ்சுவாப் (Professor Schwab) இனால் கடந்த நாலு தசாப்தங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு தனது முதலாவது மாநாட்டை 1971 இல் நடத்திய உலக பொருளாதார மன்றம் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிற்பகுயில் சுவிற்சாலந்திலுள்ள டேவேஸ் நகரில் இவ்வருட மாநாட்டை நடத்துவதற்காக கூடியது. இதில் கனடாவின் சார்பில் கனேடிய பிரதமர் ஸ்ரீபன் காப்பர், கனேடிய நிதி அமைச்சர், ஜிம் பிளாறேற்றி, வெளிவிவகார வியாபாரத்துறைக்கு பொறுப்பான அமைச்சர் பீற்றர் வான் லோன், மற்றும் கனேடிய நிதி நிறுவனங்களுக்கான ஆணையாளர் மார்க் கார்னி ஆகியோரைக் கொண்ட குழு பங்குபற்றியது.

கனேடியப் பிரதமர் மேலும் தெரிவிக்கையில் உலக நாடுகள் தற்போது பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து போராடி வருகின்றன. மிகப் பெரிய கடன்பளு (Large Current Account Imbalances), பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகளில் ஏற்பட்டுள்ள வயது முதிர்ந்தோரின் சனத்தொகை அதிகரிப்பு, கொடுமைகள், பயங்கரவாதம், மக்களின் வறுமை மற்றும் நாட்டை வளப்படுத்த இயலாமை போன்ற பல்வேறு பிரச்சினைகள் உலகில் இருந்தாலும் நாங்கள் உலக நாடுகளின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற ஏதாவது செய்யும் முயற்சியில் இருந்து பின்தங்கவே கூடாது என்றார். மேலும் அவர் கூறுகையில் கடந்த November 2008இல் வாஷிங்டனிலும், ஏப்பிரல் 2009இல் இலண்டனிலும் நடைபெற்ற G-20 நாடுகளின் மாநாட்டில் உலக பொருளாதார மந்த நிலைக்கும் (Global Recession), பல நாடுகளில் ஏற்பட்ட நிதி நிலைமையில் ஏற்பட்ட சரிவிற்கும் (Financial Collapse) நிவர்த்தி செய்யும் முகமாக பல திட்டங்கள் எடுக்கப்பட்டன.

இம் மாநாடுகளில் எனக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தை கூற வேண்டும். உலக நாடுகள் எல்லாவற்றிற்கும் பொதுவான ஒரு பிரச்சினை ஏற்படும் போது அவர்கள் எல்லோரும் தங்களுக்குள் இருந்த போட்டி (Rivals) முன்னாள் பகமை எதிரிகள் (Former Enemies) என்ற நிலைப்பாடுகள் எல்லாவற்றையும் விட்டு விட்டு அப்பொதுப் பிரச்சினைக்கு எதிராக எவ்வாறு முகம் கொடுப்பது என்று ஆராய்ந்தார்கள். அவர்கள் எல்லாரும் தங்கள் கோட்பாடு வேறுபாடுகள் (Ideological Differences) தங்கள் பழைய விரோதங்கள் (Old Enmities) எல்லாவற்றையும் புறந்தள்ளி இந்த சுயாதீனமான 20 நாடுகளினதும் (Sovereign States) தலைவர்கள் எல்லாரும் ஒரு பொதுவான (Common) ஒருங்கிணைந்த திட்டத்தை (Synchronized Action) எடுத்தார்கள். யாராவது ஒருவர் வேறு ஒரு உலகத்தில் இருந்து இந்த மாநாடுகளுக்கு வந்து பார்த்திருந்தால் இத்தலைவர்களில் சிலர் கடந்த பல தசாப்தங்களாக ஒருவருக்கு ஒருவர் சேறு பூசி விரோதம் பாராட்டியவர்கள் என நிச்சயமாக நினைத்துக் கூட பார்த்திருக்க முடியாது. தற்போது உலக நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலையின் இறுதிப் பகுதியில் இருந்து மீண்டு

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

RBC Royal Bank
Switch your Mortgage to RBC And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee • No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments
Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி<
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

SATHYA SAIRAM DRIVING SCHOOL
• உங்களுக்கு பாஷை ஒரு பிரச்சினையா?
• பரீட்சை கேள்விகள் விளங்காததனால் வாகன எழுத்து பரீட்சையில் அல்லது வீதிப்பரீட்சையில் சித்தியடைய முடியவில்லையா? கவலை வேண்டாம்.
• உங்கள் வாகனம் சம்பந்தப்பட்ட எந்த பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டுமா?
அழையுங்கள் - 416-831-5217

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை
• 52 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 19 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

VLAMBARAM, GTA SQUARE, 5215 FINCH AVENUE EAST, #201, TORONTO, ON M1S 0C2, CANADA TEL: 416-282-8059, FAX: 416-282-4978, e-mail: vlambaram@sympatico.ca, Web: www.Vlambaram.com

# கனவுகள்

கனவுகளை எப்படி நனவாக்க வேண்டும் என்பது பலபேருக்குத் தெரிந்திருப்பதில்லை. அதைத் தெரிய வைப்பதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கம் என்று சென்ற முறை குறிப்பிட்டிருந்தோம். அதன் அடிப்படையில், தற்சமயத்துக்குப் பொருத்தமான RRSP மற்றும் TFSA ஐப் பற்றி இந்த முறை ஆராய்கின்றோம்.

வழக்கம் போல் கனடிய பெரிய வங்கிகள் விளம்பரம் மற்றும் நேரடித் தொடர்பின் வழியாக உங்களை RRSP யில் சேமிக்கும்படி இந்த நேரத்தில் தூண்டுகின்றன. உங்களுக்கு ஈடுபாடு இருந்தாலும் இல்லையானாலும் உங்கள் சேமிப்பில் வங்கிகளுக்கு ஈடுபாடு இருக்கின்றது. ஓய்வு காலத்துக்கு என்று மிகப் பெரிய தொகை தேவை என்று பயமுறுத்துவது வங்கிகளின் வாடிக்கை. அது இம்முறையும் தொடர்கின்றது. அதில் புதுமை ஒன்றும் இல்லை. வேறு என்னதான் புதிது?

ரொக்கப் பரிசுகள் (பரிசுச்சீட்டு முறையில்) அதிக ஏர்மைல்கள், குறிப்பிட்ட காலத்துக்கு (மட்டும்) கூடுதல் வட்டி என்பன போன்ற கவர்ச்சி கரமான ஈர்ப்புக்களே இம்முறை புதுமை என்று சொல்லலாம். பலபேருக்கு அடிப்படையே புரிவதில்லை. எதற்காக என்ன செய்கின்றோம் என்பதையும் விளங்கிக் கொள்வதில்லை. வங்கிகளும், ஊடகங்களும் ஏற்படுத்தும் மாயையில், மக்கள் தவறாக செயல்படுவது வாடிக்கையாக இருப்பதைப் பார்க்கின்றோம்.

TFSA சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பின், பலரும் என்னால் இரண்டுக்கும் முழுதாக சேமிக்க முடியவில்லை என்றால் எதில் பணத்தைப் போடுவது என்ற கேள்வியை எழுப்புகின்றார்கள். இக்கட்டுரை முடிவில் அவர்களுக்கு விடை கிடைக்கும்.

இதுதான் சரி அல்லது அதுதான் சரி என்று எல்லோருக்கும் பொருந்துமாறு ஒரு பதிலைக் கூற முடியாது. பதில் அவரவரின் சொந்த சூழ்நிலைகளைப் பொறுத்தே அமையும்.

முதன்முறையாக வீடு வாங்குவோர், RRSP யில் பணத்தைச் சேமித்து வரலாம். வரிகளையும் குறைத்துக் கொள்ளலாம். முதல் முறை வீடு வாங்குவோர் தனிநபராயிருந்தால், ஏற்கனவேயுள்ள RRSP யில் இருந்து 25,000 டொலர் வரை (கடனாகப்) பெற முடியும். இதுவே தம்பதியராய் இருந்தால் 50,000 டொலர் வரை RRSP யில் இருந்து எடுத்துக்கொள்ள முடியும்.

மற்றபடி ஏறத்தாழ ஒரு பொதுவிதியைச் சொல்ல வேண்டும் என்றால் இப்படிச் சொல்லலாம்.

வரிகளாகும் வருமானம் 40,000 டொலர்களுக்குக் குறைவாக இருந்தால் முதன்மைச் சேமிப்பு TFSA இல் இருப்பது நல்லது. வருமானவரி கூடுதலாகக் கட்டுபவராயிருந்தால் முதன்மைச் சேமிப்பு RRSP யில் இருப்பது நல்லது. RRSP யில் சேமிப்பதனால் திரும்பக் கிடைக்கும் வரிக்கான காசோலையை TFSA சேமிப்புக்குப் பயன்படுத்தலாம்.

RRSP என்பது வரி செலுத்துவதைத் தள்ளிப் போடுகின்றது. RRSP யில் பணம் போடும்போது உங்களுக்கு வரியில் சேமிப்புக் கிடைக்கின்றது. திரும்ப RRSP யிலிருந்து பணத்தை எடுக்கும் போது வரி செலுத்துகின்றீர்கள். குறைவாக வரி செலுத்தும் வாய்ப்பு வருமானம் குறைவாக இருக்கும் போது நிகழ்கின்றது. அதனால் பணத்தை எடுக்கும் காலம் வருமானம் குறைந்த காலமாக கற்பனை செய்து கொள்ளப்படுகின்றது. இந்தக்கற்பனை எல்லோருக்கும் பொருந்துமா? பொருந்ாது என்றே சொல்ல வேண்டும். பணத்தை எடுக்கும் காலத்தில் வருமானம் கூடுதலாக இருந்தால் அரசுக்குக் கூடுதல் வரி கொடுப்பீர்கள் என்று சொல்லவும் வேண்டுமா?

மேலும் RRSPமற்றும் அதன் மறுபிறப்பான RRIF (71வயதுக்குப் பிறகு) சேமிப்பும் அதனால் கிடைக்கும் வருடாந்திர வருவாயும் பெடரல் அரசின் சில சலுகைகளை வருவாய் அடிப்படையில் பெறுவதற்கும் தடையாக இருக்கக் கூடும். உதாரணத்துக்கு உறுதி செய்யப்பட்ட வருவாய் குறைந்தோர்க்கான உபரித்தொகை Guaranteed Income Supplement (GIS) முதியோருக்கான பாதுகாப்பு ஊதியம் Old Age Security (OAS) போன்றவற்றைச் சொல்லலாம். RRSP யிலிருந்து முதன்முறைவீடு வாங்குவது மற்றும் படிப்பு அல்லாத மற்ற காரணங்களுக்காகப் பணத்தை எடுக்கும் போது RRSP யில் திரும்பப் பணத்தைப் போட முடியாது.

TFSA யோ, RRSP ஐப் போன்று பணத்தைச் செலுத்தும் போது வரிச்சலுகை ஒன்றும் தருவதில்லை. ஆனால் கூடுதல் வருவாய்க்கு பணத்தை எடுக்கும் போது வரி ஒன்றும் கட்டத் தேவையில்லை. RRSP யிலோ பணத்தை எடுக்கும் காலத்தில் நீங்கள் வரி செலுத்துகின்றீர்கள் என்பதை மறந்து விடக்கூடாது. அதே சமயத்தில் TFSA யிலிருந்து எடுத்த பணத்தை மறு ஆண்டோ, அல்லது அடுத்துவரும் எந்த ஆண்டில் வேண்டுமானாலும் திருப்பிச் செலுத்தலாம். உங்களின் வருடாந்திர சேமிப்புத் தொகையான 5000 டொலர்களை இது எந்த விதத்திலும் பாதிக்காது. மேலும் அரசின் சலுகைகளை OAS, GIS மற்றும் GST Tax Credit போன்றவற்றைப் பெறுவதற்கும் உங்களின் TFSA சேமிப்பு தடையாக இருக்காது. (RRSP சேமிப்பு தடையாக இருக்க வாய்ப்பு உள்ளது என்று முன்னர் பார்த்தோம்)

## - துறவி -

முடிவு இதுதான். TFSA திட்டமிடப்பட்ட மற்றும் திட்டமிடப்படாத எல்லா சந்தர்ப்பங்களிலும் நன்மையைத் தரவல்லது. உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப நீங்கள் அனுகூலமாக எல்லா சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்த முடியும்.

கூடுதல் வருவாய் உள்ளோர் முதலில் RRSP யில் பணத்தைச் சேமித்து அதனால் ரெவின்யு கனடாவிலிருந்து வரக்கூடிய காசோலையை TFSA சேமிப்புக்குப் பயன்படுத்தலாம். RRSP ஆ TFSA ஆ என்ற கேள்வி உங்களால் இரண்டுக்கும் சேமிக்க முடியாத போதே எழுகின்றது. உங்களால் இரண்டுக்கும் சேமிக்க முடியும் என்றால், நல்லது, சேமியுங்கள். குறைந்த வருமானம் உள்ளோருக்கும், வருமானத்தைப் பொறுத்தே RRSP சேமிப்பு ரெவின்யு கனடாவிடமிருந்து ஒரு சிறிய காசோலையைப் பெற்றுத் தரலாம். ஆனால் அதே நேரத்தில் அத்தகைய சிறிய சேமிப்பு, பின்னாளில் அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய வருவாய் சம்பந்தப்பட்ட சலுகைகளுக்குத் தடையாகவும் அமையலாம் என்பதையும் மறந்து விடக்கூடாது. இது குறிப்பாக விரைவில் ஓய்வு பெறப் போகிறவர்களுக்குப் பொருந்தும். கடைசியாக எல்லாவற்றையும் கலந்து ஆராய்ந்து சொல்வது இதுதான்.

வருமானம் 40,000 க்கு குறைவாக இருப்பவர்கள் முதலில் கவனம் செலுத்த வேண்டியது TFSA. பிறகு RRSP. RRSP யில் பணம் கட்டாமல் விடும்போது பின்னாளில்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்



## வாசகர்களின் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram, 5215 Finch Ave. E. #201, Scarborough, ON M1S 0C2
2. Fax: 416.282.8059
3. email: vlambaram@sympatico.ca

ஆசிரியர்
விளம்பரம் பத்திரிகை

கனம் ஐயா,

தங்கள் பத்திரிகை (விளம்பரம்) படிக்கும் போது அதில் வரும் செய்திகளையும் தகவல்களையும் பற்றிய நல்ல ஆதரவை வழங்க வேண்டும் என்ற ஆவலைத் தங்கள் "நேயர் கடிதம்" பகுதி மூலம் பூர்த்தி செய்தமைக்கு முதற்கண் நன்றிகள்

வாசகன் என்ற வகையில் சுருங்கக் கூறுவதாயின் விளம்பரத்தில் வரும் தகவல்களைப் படிக்கும் போது மன ஆறுதல் தருவதோடு பல்வேறுபட்ட விடயங்களை அறியும் வாய்ப்புக்கள் நிறையவே உண்டு. குறிப்பாக என்னைக் கவர்ந்த விடயம் "தமிழ் நாட்டுச் சுற்றுலா தலங்கள்." இவற்றைப் படிக்கும் போது, மூன்று காலங்களையும் அறிந்து இரசிக்கக் கூடியதாய் அமைகின்றது. இப்படியான கட்டுரைகளை எல்லாம் சேர்த்து புத்தக வடிவில் அமைத்தால் அநேகம் பேர் பல்வேறு விடயங்களை அறிந்து பயன் பெறமுடியும் என்ற எண்ணம் செயல் வடிவம் பெறும் என்று வாழ்த்துகிறேன்.

நன்றிகள்!
பூர்வீகன்

விளம்பரம்
VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

**ஜெனிஷா ரெயிலஸ் & டிசைன்ஸ்**
***Jenisha Tailors & Designs***
Saree Blouses, Salwar Kameez, Party-Frocks,
Saree pleetting, Bridal Dressing, Facial, Threading
போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய அழையுங்கள்
குறித்த நேரத்தில்
குறைந்த செலவில் நிறைந்த சேவை

416.298.6917 / 416.802.1039/ 519.748.0553
1560 Brimley Road, #216, Brimley & Ellesmere / 920 Marlmeadow Crt., Kitchener, ON

# கனடாவின் கதை - 14

## புதிய பிரான்ஸ் - 1604 - 1763

1604இல் தோல் வியாபாரத்தின் ஏகபோக உரிமை பியர்குகா சீயர்டுகா மொன்சுக்கு வழங்கப்பட்டது. இவர் சென் குறொக்ஸ் ஆற்றுவாய்க்கருகே உள்ள ஒரு தீவுக்குடியிருப்புக்கு பிரயாணத்தை மேற்கொண்டார். இவரது தளபதிகளுள் சாமுவேல் டி சாம்ப்ளெயின் என்ற புவியியல் ஆய்வாளரும் இருந்தார். இவர் தற்போதைய அமெரிக்காவின் வடகிழக்குக் கரையோரப் பகுதியைச் சென்று பார்த்தார். இவரது தலைமையில் சென் குறெக்ஸ் குடியிருப்பு போட்றோயலுக்கு மாற்றப்பட்டது. (தற்போதைய அனாப்பொலிஸ் றோயல், நோவாஸ்கோசியா). அத்துடன் மேற்கு நோவா ஸ்கோசியாவிலுள்ள அனாப்பொலிஸ் நதிப்படுகையி லும் (பண்டி(Bundy) வளைகுடாவிற்கு எதிரே) ஒரு புதிய குடியிருப்பு ஆரம்பிக்கப்பட்டது. இதுவே பிரான்சின் வெற்றிகரமான குடியிருப்பாகும். இதை அக்காடியா என அழைத்தனர். 1607 இல் டிகாஸ்ற் என்பவரின் தோல் வியாபார ஏகபோக உரிமை இரத்து செய்யப்பட்டது. இதனால் போட் றோயல் குடியிருப்பில் தற்காலிக தேக்கம் ஏற்பட்டது. எனவே சம்ப்ளெயின், டிகாஸ்ற்றை இசையவைத்து சில குடியிருப்பாளரை சென்லோறன்ஸ் குடியிருப்புக்கு கொண்டு சென்றார். இதுவே கனடாவின் கியூபெக்கில் 1608 இல் பிரான்சின் முதலாவது நிரந்தரக் குடியிருப்பாகும். அக்காடியா எனப்படும் இது மெதுவாக வளர்ந்து 1713 இல் 5,000 மக்களைக் கொண்டிருந்தது.

1608 இல் சாம்ளெயினால் நிறுவப்பட்ட கியூபெக் நகரம் புதிய பிரான்சின் தலைநகரமாகியது. இந்தப் பிரெஞ்சுக் குடியிருப்பில் மக்கள் கடும் இன்னல்களுக்கு ஆளாயினர். இதனால் மக்கள் தொகை மெதுவாகவே அதிகரித்தது. நகரத்தின் பரிபாலனத்தில் சம்ப்ளெயின் முக்கிய கரிசனையோடு கண்காணித்தார். உட்புறத்திலுள்ள பகுதிகளுக்கும் ஆட்களை அனுப்பி ஆய்வுகள் செய்தார். 1609 இல் சம்ப்ளெயின் வாவியைக் கண்டு பிடித்தார். 1615 இல் சிம்கோ வாவிக்கருகிலுள்ள ஹியூறோன் தேசத்துக்கு ஒட்டாவா ஆற்றுக்கூடாக நிப்சிங் வாவிக்கூடாக ஜோஜியன் வளைகுடாவுக்கூடாக வள்ளத்தில் சென்றடைந்தார். இவ்வாறான பயணங்களின் போது இவர், இறக்குவாக் கூட்டாட்சிக்கு எதிராக ஹியூறோனியர் நடாத்திய போரில் உதவி புரிந்தார். இதனால் இறக்குவா மக்களின் பரம எதிரியாக பிரெஞ்சுக்காரர் நடத்தப்பட்டனர். 1629 இல் ஆங்கிலேயப்படையிடம் சமப்ளெயினும் அவரது பாதுகாப்புப் படையினரிடமும் சரணடைந்தனர். அவரும் கைது செய்யப்பட்டு இங்கிலாந்துக்கு கொண்டு செல்லப்பட்டார். இவ்வேளை இங்கிலாந்தும் பிரான்சும் சமாதானம் செய்து கொண்டு கியூபெக் குடியிருப்பு பிரான்சுக்கு திருப்பிக் கொடுக்கப்பட்டது. சம்ப்ளெயின் ஐரோப்பாவிலிருந்து திரும்பி 1633 இல் கியூபெக் வந்து புதிய பிரான்சின் தேசாதிபதியானர்.

புதிய பிரான்சின் கரையோரக் குடிகள் கொட் (Cod) எனப்படும். மீன் வகையின் வியாபாரத்தில் கூடியளவு தங்யிருந்தனர். ஆனால் சென்லோறன்ஸ் குடியிருப்புக்கள் வேளாண்மையில் தங்கயிருந்தனர். பிரெஞ்சு வியாபாரிகள் கனடாவின் உட்பகுதிகளுக்கு (தற்கால கியூபெக், ஒன்ராறியோ, மனிற்றோபா, அமெரிக்காவின் மத்தியமேற்கு, மிசிசிப்பிப் பள்ளத்தாக்கு) ஆகிய இடங்களுக்குச் சென்று துப்பாக்கிகள், துப்பாக்கி மருந்துகள், புடவை, கத்திகள், கெற்றில்கள் ஆகியவற்றை கொடுத்து பீவர் தோல்களை பெற்றுக் கொண்டனர். தோல் வியாபாரத்தினால் புதிய பிரான்சின் குடியிருப்புக்கள் தொடர்ச்சியாக வாழக் கூடிய நிலை ஏற்பட்டது. எனினும் சிறிதளவு தொகையினரே இதனால் பயன் பெற்றனர். மேலும் குடியிருப்புக்கு அடியத்திவாரமான வேளாண்மையை இவர்கள் கைக்கொள்ளவில்லை. இதனால் குடியிருப்பு வளர்வதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே இருந்தன. எனினும் சில புதிய குடிவரவாளர் கனடாவுக்கு வந்தனர். 1759 இல் புதிய பிரான்சில் ஏறக்குறைய 65,000 மக்களிருந்தனர். புதிய குடிவரவாளரின் வருகைக் குறைவோடு வேறு பல இன்னல்களையும் புதிய பிரான்சு எதிர்நோக்கியது. பிரான்ஸ் நாடு இக்குடியிருப்புக்களை ஆதரிப்பதற்கு போதிய பொருளாதாரத்தையும் அக்கறையையும் கொண்டிருக்கவில்லை. குடியிருப்புக்கள் தம்மை தாமே பார்த்துக்கொள்ளுமாறு விடப்பட்டன. எனவே இவைகளின் பொருளாதாரம் ஆரம்பநிலையிலேயே இருந்தது. மேலும் இவர்கள் வாழ்வதற்குப் போதுமானவளவு விவசாயத்திலே ஈடுபட்டிருந்தனர். அத்துடனும் இவர்கள் இறக்குவாப் பழங்குடியினருடன் தொடர்ச்சியான போரில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வாறான பிரச்சனைகளுக்கு மத்தியிலும் புதிய பிரான்சு மெதுவாக வளர்ந்தது. 1634இல் சென்லோறன்சுக்கப்பால் றொய் றிவியறெஸ் என்ற இடத்தைச் நிறுவினர். மே 18, 1642இல் போல் டி சொம்டி என்பவர் மொன்றியல் என்ற இடத்தைச் நிறுவினார். ஆரம்பத்தில் வில்லா மறியி எனப்பட்ட இக்குடியிருப்பு ஒரு மதப்பிராசார நிலையமாகவே ஆரம்பிக்கப்பட்டது. இது கனடாவின் ஒரு முக்கிய பெரிய நகரமாக மாறும் என யாரும் எதிர்பார்க்கவில்லை. சொம்டியோடு இங்கு வந்த தலைவர்களுள் ஒருவர் ஜீன் மான்ஸ். இவர் வில்லா மறியியில் முதலாவது வைத்தியசாலையான ஹோட்டல் டியூவை ஆரம்பித்தார். மொன்றியல் மதப்பிரசார நிறுவனமாக ஆரம்பித்ததில் பிரான்சிலிருந்த மதப்பிரசார நிறுவனமொன்று பெரும் பங்கு வகித்தது. கியூபெக் ஆரம்பித்த 40 ஆண்டு காலப்பகுதியில் ஹியூறோன் நாட்டில் பல மதப்பிரசார நிலையங்கள் நிறுவப்பட்டன. ஒன்றாரியோ வாவியின் தெற்கிலும் கிழக்கிலும் இருந்த இறக்குவாக்குடியினர் ஹியூறோன் வாசிகளுக்கு எந்நேரமும் தாக்குதல் நடத்தலா மென்ற அச்சத்தை விளைவித்தனர். 1648 இல் இறக்குவாவினர் ஹியூறோனியாவைத் தாக்கிப் பல ஹியூறோனியரையும் பிரெஞ்சு மிஷனரிமாரையும் கொன்றனர். இவ்வாறான போரினால் புதிய பிரான்சின் வளர்ச்சி தடைப்பட்டது. பிரெஞ்சுக் குடியிருப்புக்களும் இறக்குவாக் குடிகளும் புதிய பிரான்சிலும் அயல் பகுதிகளிலும் பல போர்களில் ஈடுபட்டனர்.

பிரான்சில் பன்னெடுங்காலமாக இருந்த பிரபுத்துவ முறை (Feudal System) குடியிருப்புக்களிலும் பிரபுத்துவ முறை (Feudal System|) குடியிருப்புக் களிலும் பின்பற்றப்பட்டது. பிரபுக்களுக்கு அரசன் நிலங்களைப்பங்கிட்டு கொடுத்தான். பிரபுக்கள், போர்க்காலங்களில் மன்னனுக்கு ஆதரவாகவும் விசுவாசமாகவும் நடப்பதென்ற உறுதிமொழியை வழங்கினர். பிரபுக்கள் தமது நிலங்களில் விவசாயம் செய்யும் உரிமையைக் குடியானவர்களுக்கு வழங்கினர். குடியானவர்கள் பிரபுக்களுக்கு வரிசெலுத்து முகமாக ஆண்டுதோறும் குறிப்பிட்ட நாட்களுக்குப் பிரபுக்களுக்கு வேலை செய்வதோடு பிரபுக்களின் ஆலைகளில் தமது தானியங்களை அரைக்கவேண்டுமெனவும் விதிக்கப்பட்டது. புதிய பிரான்சின் குடியிருப்புக்களில் மக்கள் தொகை குறைவாக இருந்ததால் குடிகள் இதனை வரவேற்ற னர். பிரபுக்கள் ஆலை கட்டுவதையும் அவர்கள் ஆதரித்தனர். பணப்புழக்கம் குறைவாக இருந்ததால் கோழிகள், வாத்துகள், பண்டைய பொருட்களை மக்கள் வரியாகச் செலுத்தினர். பிரபுக்களும் மக்கள் விவசாயிகளாக இருப்பதை விரும்பினர். ஏனெனில் பெருமளவில் நிலம் இங்கே கிடைத்தது.

கியூபெக் குடியிருப்புக்களில் பிரான்சைப் போன்று உயர் அதிகாரி தேசாதிபதியாக இருந்தார். இவர் அரசரால் நியமிக்கப்பட்டார். இவர் ஏகபோக அதிகாரங்களைக் கொண்டிருந்ததால் தான் நிர்வகிக்கும் குடிமக்களைக் காட்டிலும் அரசனுக்கே கூடிய விசுவாசியாக இருந்தார். 1665 இல் நிதி பரிபாலனத்துக்கும் நீதி நிர்வாகத்துக்கும் பொறுப்பாக ஓர் உயர்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்




படம் - (1718) 2 கிலோமே டி லாயில் என்பவரால் வரையப்பட்ட ஒன்ராறியோவின் கீழ்ப்பகுதி.

**- துறையூரான் -**


DISCOUNTS UP TO 30% ON CAR INSURANCE
STATE FARM INSURANCE
Li Chen, Agent
http://www.licheninsurance.ca
Bus: 416-431-6800
Mano Selvam
Auto Insurance Representative
Bus:416-431-6800
தமிழில் உரையாடுவோம்
1200 Markham Road, Suite# 123, Scarborough, ON M1H 3C3
Intersection: Markham Road & Ellesmere Road
State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# அமைதியுடன் நிகழ்த்தும் யுத்தம்

## உங்கள் உள்தன்மையிலேயே அமைதியைக் கொண்டு வருகிற தகுதி இல்லாதபோது வெளி உலகில் அமைதியைக் கொண்டு வருகிற வாய்ப்பு இல்லை.



### சத்குரு வாசுதேவ்

அன்பு, பரிவு ஆகியவற்றின் சக்திகளும் கோபம், வெறுப்பு ஆகியவற்றின் சக்திகளும் இந்த உலகில் இயங்கிக்கொண்டே இருக்கின்றன. இது ஒரு சிஷா விளையாட்டுப்போல. இதில் எந்த முனையில் நீங்கள் ஏற நினைக்கிறீர்கள் என்பதுதான் கேள்வி. மிக மோசமான ஒரு சூழலின் எல்லையிலே இருக்கிற பட்சத்தில் ஆன்மீக செயல் முறைகளை தீவிரப்படுத்துவதுதான் மிக நல்லது. ஏனெனில் அதுதான் உலகெங்கும் ஒரு சமநிலையை ஏற்படுத்தும்.

> தொடர்புகளுக்கு: 416.300.3010
> website: www. ishafoundation.org
> www. ishayoga.org


உங்கள் வாழ்க்கை அனுபவத்துக்குள் வராதவற்றை எல்லாம் நீங்கள் நம்பத் தொடங்குகிற போது கருத்து மோதல் ஏற்படுவது இயற்கை. இன்று நீங்கள் ஒரு அமைதியான மனிதராக இருக்கிறீர்கள். நாளை உங்கள் நம்பிக்கைகளை நிதர்சனம் எதிர்க்கிற போது நீங்கள் எதிர்த்து நின்று போராடுகிறீர்கள்.

ஒரு நம்பிக்கைக்குள் போவதில் என்ன புத்திசாலித்தனம் இருக்கிறது? ஒரு நம்பிக்கைக்குள் போவதால் என்ன ஆதாயம் இருக்கிறது? உங்கள் அகங்காரத்திற்கு அது சுகமாக இருக்கிறது. அவ்வளவுதான். எனக்குத் தெரியாது என்று சொல்வது உங்கள் அகங்காரத்திற்கு ஒரு பெரிய இழப்பு. எனக்குத் தெரியும் என்று சொன்னால் தான் உங்கள் அகங்காரம் வளரும். ஒருகுறிப்பிட்ட சூழலில் எனக்குத் தெரியாது என்று சொல்லுகிற போது யாருடனும் நீங்கள் போராட முடியாது, மோதலை மேற்கொள்ள முடியாது. மிக எளிய அற்புதமான மனிதராக நீங்கள் திகழ்கிறீர்கள்.

உங்கள் தன்மையிலேயே நீங்கள் அமைதியைக் கொண்டு வராதபோது உலகெங்கும் அமைதிையக் கொண்டுவருவதற்கு வாய்ப்பு இல்லை. இந்தச் சின்னஞ்சிறிய மனதை நீங்கள் அமைதயாக்குவீர்களேயானால், அமைதி மயமாக்க முடியாமல் போனால் உலகத்தில் எப்படி அமைதியை உருவாக்கப் போகிறீர்கள். இந்த உலகம் என்று நீங்கள் எதைப் பார்க்கிறீர்களோ அது உங்கள் சிறிய மனதின் ஒரு பெரிய வெளிப்பாடு. மனதின் பெரிது படுத்தப்பட்ட பிம்பம் தான் உலகம். உங்கள் மனக்குள் நிகழ்பவை தான் இந்த உலகத்துக்குள்ளேயும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

யோக அறிவியல் என்பது உள்நோக்கிப் பார்ப்பதற்கான ஒரு வழி. எந்த நிலைப்பாட்டையும் எடுக்காமல் நேரடியாக உள்நோக்கிப் பார்க்கிற வழி. உள்நோக்கிப் பார்க்கிற போது எந்த ஒரு அடயாளத்தோடும் உங்களைத் தொடர்பு படுத்திக் கொள்ள முடியாது. உங்களுக்கென்று ஒரு அடையாளத்தை நீங்கள் உண்டாக்குகிற போது எல்லாக் கதவுகளும் அடைபடுகின்றன. நீங்கள் எண்ணுவதும், உணர்வதும் இப்போது உங்கள் அடையாளங்களைச் சார்ந்தவையாவே இருக்கிறது.

உதாரணத்திற்கு இந்தியன் என்கிற ஒரு அடையாளம் உங்களுக்கு இருக்கிறது. ஒரு சூழ்நிலை தேவையாகிறபோது உங்கள் உணர்வுகளும், உங்கள் பதில்வினைகளும் அதற்கேற்ப இருக்கின்றன. தேச நலன் கருதி ஒரு விநாடியில் செய்வது நல்ல விஷயம்தான். ஆனால் நீங்கள் எதிர்வினையாற்றாமல் அந்த சூழலுக்கு என்ன செய்யவேண்டுமோ அதனை இயல்பாகச் செய்ய முடியும். ஆனால் உங்களுக்கு அடையாளம் வருகிற போது உங்களால் எதிர்வினையாற்றத்தான் முடிகிறது. இன்னொரு கோணத்தில் உங்களால் யோசிக்க முடிவதில்லை. இன்னொரு மனிதனுடைய நிலைப்பாட்டிலிருந்து ஒன்றைப் பார்க்க முடிவதில்லை. எங்கே சிக்கல் தோன்றுகிறது என்று ஆராய்ந்து பார்க்கிற பொறுமை உங்களுக்கு இல்லை. வெறுமனே எதிர்வினையாற்றுகிறீர்கள். நீங்கள் செய்கிற செயல் உங்கள் புத்திசாலித்தனத்திலிருந்து வரவேண்டுமே தவிர எதிர்வினை சார்ந்ததாக இருக்கக்கூடாது. புத்திசாலித்தனத்தோடு ஒன்றபைப் பார்த்தால் ஒரு விஷயம் எப்படி இருக்கிறதோ அதை எந்த அடையாளமும் சாராமல், எந்த சார்பும் இன்றி சரியாகப் பார்ப்பீர்கள். ஒரு அடையாளத்தோடு ஒன்றைப் பார்க்கத் தொடங்குகிற போது உங்கள் பார்வையிலே பேதம் கலந்து விடுகிறது. உங்கள் அடையாளங்களத் தொலைத்விட்டு உண்மையான அமைதியை உணர்வதற்கு தியானம் ஒரு சிறந்த வழி. நீங்கள் அமர்ந்து தியானம் செய்கிற போது வேறு எதுவும் அங்கே இருப்பதில்லை. இருத்தல் மட்டுமே நிகழ்கிறது. வேறேவும் அங்கே இல்லை. அமைதி என்றால் ஒன்றுமற்ற தன்மை. அமைதி என்பதை நீங்கள் உருவாக்க முடியாது. அமைதி என்பது எப்போதும் இருக்கிறது. அதுதான் அடிப்படையான இருப்பு. மேற்பரப்பில் நிகழ்பவை எல்லாம் தொந்தரவுகள், தொல்லைகள். அமைதி ஒரு கடல் போன்றது. அதன் மேற்பரப்பிலே அலைகள் எழலாம். ஆனால் ஆழ்கடல் அமைதியாகவே இருக்கிறது. அந்த தன்மையோடு நீங்கள் தொடர்பிலிருந்தால் உண்மையான அமைதியை நீங்கள் உணர்வீர்கள்.

15 Years of EXPERIENCE
Maths - Science
English

Classes in Progress
For All Grades
K.G, Gr.1 to Gr 12
Scarborough / Markham

Mr & Mrs Sharma - 416-666-5515 / 416.724.9996

# திடகாத்திரமான நிலையில் கனேடிய நிதி நிறுவனங்கள்

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பொருளாதார வளர்ச்சியில் வந்து கொண்டு இருக்கிறோம் இம்மாநாடுகளில் எடுக்கப்பட்ட திட்டங்களில் மூன்று முக்கியமானவை. நிதி நிறுவனங்களை வழி நடத்தும் விதி முறைகளை மீளமைத்தல் (Financial Sector Reform), அரச பண உதவியில் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் புனரமைப்பு செயற்திட்டங்களை வகுத்தல் (Stimulus Programs), மற்றும் உலக நாடுகளுக்கு இடையேயான வியாபாரத்தை விருத்தி செய்யும் முறைகளை வகுத்தல் (Global Trade And Growth Strategies).

மேற்கூறிய மூன்று திட்டங்களில் முதலாவதான நிதி நிறுவனங்களை வழி நடத்தும் விதிமுறையை மீளமைத்தற்கு உரிய தேவை கனடாவிற்கு இல்லை என்பதை நான் இங்கு பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன். கனடாவின் நிதி நிறுவனங்களில் ஒரு பெரிய பிரச்சினைகளும் ஏற்படவில்லை. கனடிய நிறுவனங்களின் விதிமுறைகள் மிகவும் சிறப்பாக இருந்ததே இதற்குக் காரணம். உலகிலேயே மிகவும் திடகாத்திரமான நிலையிலே கனேடிய நிதி நிறுவனங்கள் தற்போது இருப்பதாக உங்களது இந்த உலக பொருளாதார மன்றமும், மிகவும் அண்மையில் பிரசுரிக்கப்பட்ட மூடியின் முதலீட்டாளர் சேவை நிறுவனத்தின் அறிக்கையும் சுட்டிக்காட்டுகின்றன. ஒரு கனேடிய நிதி நிறுவனமும் பொருளாதார சரிவிற்கு வரவும் இல்லை, அவற்றை அரச உதவிப்பணம் கொடுத்து மீட்க வேண்டிய தேவையும் கனேடிய அரசிற்கு ஏற்படவில்லை. உலக நாடுகளின் நிதி நிறுவனங்களுக்கு ஏற்பட்ட சரிவால் தற்போது கனடாவின் நிதி நிறுவனங்கள் உலகின் மிகப்பெரிய நிதி நிறுவனங்களாக மாறி உள்ளன. கனேடிய நிதி நிறுவனங்கள் முற்றுமுழுதாக தனியாருக்கு சொந்தமானவை. அவை கனேடிய அரச உதவியை எதிர்பார்க்காமல் மிகவும் திடகாத்திரமாக உலகின் மிகப்பெரிய நிதி நிறுவனங்களாக தற்போது மிளிர்கின்றன.

G-20 நாடுகளின் மாநாட்டில் எடுக்கப்பட்ட இரண்டாவது திட்டமான அரசபண உதவியில் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் புனரமைப்பு செயற்திட்டங்களை வகுத்தல், கனடாவில் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. நாங்கள் தொடர்ந்தும் இம்முறையில் பல செயற்திட்டங்களை நடத்துவோம். இதனால் எமது கடன்பளு அதிகரித்தாலும் இது பொருளாதார மந்த நிலை ஏற்படும்போது செய்ய கூடிய ஒரு நல்ல திட்டமாகவே கருதப்படுகிறது.

கனேடிய அரசு G-20 மாநாட்டில் எடுத்த தீர்மானப்படி இரண்டு வருடங்களுக்கான அரச பண உதவியில் பொருளாதார புனரமைப்பு செயற்திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்திய பின்னர் அடுத்த ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் இருந்து கடன்பளுவை குறைப்பதற்கான முறைகளை ஆராய்வோம். கனடாவே உலகின் தொழில்துறையில் முன்னேறிய பொருளாதார வளர்ச்சியடைந்த G-7 நாடுகளில் மிகவும் குறைந்த கடனை வைத்திருக்கும் நாடு ஆகும்.

இறுதியாக G-20 மாநாட்டில் எடுத்த மூன்றாவது தீர்மானமான உலக நாடுகளுக்கு இடையேயான வியாபாரத்தை விருத்தி செய்யும் முறைகள் பற்றிப் பார்ப்போம். இங்கு இருக்கும் ஒவ்வொருவருக்கும் தெரியும் உலக நாடுகளுக்கு இடையேயான வியாபாரத்தில் ஏற்பட்ட வளர்ச்சிதான் உலகநாடுகள் எல்லாவற்றிற்கும் பணவரவை கொண்டு வந்தது என்று இதனால் உலகநாடுகளுக்கு இடையேயான வர்த்தக தொடர்பை வளர்க்க வேண்டும். அதற்கு முதலில் தம் நாட்டு உற்பத்தியை மட்டுமே வாங்க வேண்டும் (Protectionism) என்ற மனப்பான்மையை உடைக்க வேண்டும்.

G-20 நாடுகளின் மாநாட்டில் எடுத்த தீர்மானப்படி பல நாடுகள் தம் நாட்டு உற்பத்தியை மட்டுமே வாங்க வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தாமல் விட்டதாலேயே 1929 ஆம் ஆண்டில் ஏற்பட்டது போன்ற மிகப் பெரிய பங்குச் சந்தையின் சரிவை தடுக்க கூடியதாக இருந்தது.

கனடா, நம்நாட்டு உற்பத்தியை மட்டுமே வாங்க வேண்டும் என்னும் கொள்கைக்கு எதிராக எங்கள் வியாபாரச் சந்தையை ஒரு திறந்த வியாபார சந்தையாக (Open Market) வைத்திருப்பதோடு மட்டும் அல்லாமல் சுதந்திர வர்த்தக முறையை (Free Trade) ஊக்குவிக்கும் நாடுகளில் முதன்மையான நாடாகவும் திகழ்கிறது. (Leader in Promoting Free Trade).

நாம் அரசபண உதவியில் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் புனரமைப்பு செயற்திட்டங்களை வகுக்கும் போது அத்திட்டத்தில் பலன் அடைபவர்கள் கட்டாயமாக உள்ளூர் உற்பத்தியை மட்டும்தான் வாங்க வேண்டும் என்று சட்டம் போடவில்லை.

கனடா கடந்த 2006 ஆம் ஆண்டிற்குப் பிறகு மேலதிகமாக எட்டு நாடுகளுக்கு இடையே சுதந்திர வர்த்தகத்தை (Free Trade Agreements) ஏற்படுத்தும் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளது. இன்னும் ஆறு நாடுகளுக்கு இடையேயான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது. இவற்றுள் ஒன்றாக ஐரோப்பிய ஒன்றியமும் இருக்கிறது. (European Union) நாங்கள் தொடர்ந்தும் "சுய உற்பத்தியை மட்டுமே வாங்க வேண்டும்" என்ற கொள்கையையும், "மற்றநாடுகளின் உற்பத்தி பொருள்களிற்கு வரிவிதிக்கும்" கொள்கையும் எதிர்த்தே வந்திருக்கிறோம். இன்னும் எதிர்த்து வருவோம்.

இப்பிரச்சினைகள் நிறைந்த உலகில் தற்போது, முன்னர் எப்போதும் இல்லாத மாதிரி உலகநாடுகளுக்கு இடையேயான ஒற்றுமை தேவை. (International Cooperation) என்பதை நாம் நன்றாகவே உணர்ந்துள்ளோம்.

உலக பயங்கரவாதம் எம் எல்லோரையும் சேர்ந்தே தாக்குகின்றது, மீண்டும் கடற்கொள்ளையர்கள் எமது முக்கிய கடற்பிரயாண பாதைகளில் கொள்ளை அடிக்கிறார்கள், சுற்றுப்புற சூழலின் வெப்பம் அதிகரித்தல், எமது காலநிலையை பாதிக்க தொடங்கியுள்ளது, அணு ஆயுதங்களை வைத்திருக்கும் வல்லரசுகளுக்கு இடையேயான பகைமை தணிந்திருந்தாலும் அணு ஆயுதங்கள் மற்றைய நாடுகளுக்கு பரவி உள்ளதால் உலக நாடுகளின் பதட்டம் இன்னும் தணியவில்லை.

இவ்வாறான சிக்கல் நிறைந்த பிரச்சினைகளை எந்த ஒரு நாடும் தனியே நின்று சமாளிக்க முடியாது. இதற்கு உலக நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பும் சினேக மனப்பான்மையும் கூட்டுறவும் தேவை. முதலில் நாம் எல்லோரும் சேர்ந்து இலகுவாக முன்னேற்றம் செய்யக் கூடிய இடம், மூன்றாம் உலக நாடுகளின் வறுமையை குறைக்க முயற்சித்தல் ஆகும். அங்கு தாய்மார்களதும், குழந்தைகளதும் இறப்பு வீதம் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு அதிகமாக உள்ளது. ஒவ்வொரு வருடமும் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட பெண்கள் கர்ப்பகாலத்தில் இறக்கிறார்கள். கிட்டத்தட்ட தொண்ணூறு இலட்சம் சிறுவர்கள் தமது ஐந்தாவது பிறந்த தினத்தைக் கொண்டாட முன்னர் இறந்து விடுகிறாகள் என்பது உங்களுக்குத் தெரியுமா? இந்த எண்ணிக்கைகள் எமக்கு பயங்கர அதிர்ச்சியையும் கவலையையும் தருகின்றன. இதில் பலர் இறப்பது மிகவும் இலகுவான சிறிய சுகாதார வசதிகள் கிடைக்காமல் தான் என்பது எமக்கு மிகவும் வெட்கம் தரக்கூடிய விடயமாகும்.

இவர்களது தேவை உலகநாடுகளால் மிகவும் இலகுவாக பூர்த்தி செய்யக்கூடியவை. இவர்களுக்கு பெரும்பாலும் தேவைப்படுவது துப்பரவான குடிநீர் அல்லது தொற்று நோயை தடுக்க தேவையான அடிப்படை மருந்து ஆகும். இவ்வாறான மிகவும் சிறிய தேவையை கூட எம்மால் பூர்த்தி செய்யாமல் இருப்பது மிகவும் கொடுமை இவைகள் எல்லாம் ஒரு தாளில் எழுதிய வெறும் சொற்கள் அல்ல. இது உண்மையான பசி, உண்மையான துன்பம், உண்மையான மக்கள் இறக்கிறார்கள்.

கனடா இதனை மிகவும் பாரதூரமான விடயமாக பார்க்கிறது. இதற்கு உதாரணமாக நாங்கள் ஆபிரிக்க நாடுகளுக்கு செய்யும் உதவிகளை இவ்வருடம் இரண்டு மடங்காக்கி உள்ளோம். இப்படியான பிரச்சினைகளை யும் மனித அவலங்களையும் தடுக்க முதலில் தேவை, உலகநாடுகளின் ஒத்துழைப்பே. அண்மையில் ஹெயிட்டியில் ஏற்பட்ட அவலம் போன்ற அவலம் ஒரு நாட்டில் ஏற்படும்போது அதற்கு உதவி செய்ய உலக நாடுகள் ஒற்றுமையாக ஒத்துழைக்க வேண்டும்.

G-8 நாடுகளின் தலைமைப்பொறுப்பை தற்போது வகிக்கும் கனடா, உலகின் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் இருக்கும் பெண்கள், குழந்தைகளின் சுகாதார வசதியை மேம்படுத்த முன்னிற்கும். G-8 இலுள்ள மற்ற நாடுகளும் கனடாவின் இந்த முயற்சிக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளன.

இவ்வாண்டு June மாதம் கனடா G-20 இன் மாநாட்டை ரொறொன்ரோவிலும் G-8 இன் மாநாட்டை மஸ்கொக்கா (Muskoka) விலும் நடத்துகிறது. இதில் கனடாவின் தலைமையில் 'மீட்புப்பணியும் புதிய ஆரம்பமும்' என்ற தலைப்பில் (Recovery and New Beginnings) கருத்துரையாடல்கள் நடைபெறும்.

கனடாவில் நடைபெறவுள்ள G-20 மற்றும் G-8 மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் பல விடயங்கள் உள்ளன. உலகில் தற்போது நடைபெற்றுவரும் பொருளாதார மீட்பு முயற்சிகளும் நிதி நிறுவனங்களின் திடகாத்திர தன்மையை மீட்கும் பணிகள் பற்றியும் எல்லாநாடுகளுடன் கலந்துரையாடுவோம். G-8 நாடுகளில் உலகில் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு உதவி வழங்கும் தீர்மானத்தினை அமல்படுத்துவது பற்றியும் எல்லா நாடுகளுடனும் கலந்துரையாடுவோம்.

*நன்றி: கனேடிய பிரதமர் அலுவலகம்*
*Thank You: Office of the Prime Minister*

**சிவ ஞானநாயகன்**
vlambaram@sympatico.ca



**விற்பனையாகின்றது குறமகளின்**

- **கூதிர்காலக் குலாவல்கள்**
- **அகணிதன் அல்லது நதியின் பிழையன்று**

என்ற இரு குறுநாவல்கள் அடங்கிய நூல்

கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்
தொலைபேசி இலக்கம்: 416.282.8059
**GTA Square - 5215 Finch Ave. E., #201**
**Middlaefield & Finch**

# அவுஸ்திரேலிய ஓபன்

## விளையாட்டுத் தகவல்கள் 276

நான்கு கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்னில் திங்கள்கிழமை தொடங்குகிறது.

ஆடவர் பிரிவில், 15 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற ஸ்விட்சர்லாந்து வீரர் ரோஜர் ஃபெடரர் பட்டத்தை வெல்வார் என எதிர்பார்க்கப்படும் வீரர்களில் முதலிடத்தில் உள்ளார். அவருக்குப் போட்டியாக ரபேல் நடால், நோவக் ஜோகோவிக், ஜுவான் மார்ட்டின் டெல் போட்ரோ, ஆன்டி முர்ரே, நிகோலே டேவிடென்கோ உள்ளிட்ட வீரர்கள் களம் இறங்குகின்றனர்.

மகளிர் பிரிவில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் முன்னிலையில் உள்ளார். ஓய்வு பெற்றதாக அறிவித்து மீண்டும் களம் கண்டுள்ள பெல்ஜியம் வீராங்கனைகள் கிம் கிளைஸ்டர்ஸ், ஜஸ்டின் ஹெனின் ஆகியோர் சவாலாக உருவெடுத்துள்ளனர். கரோலின் வோஸ்னியாக்கி, எலினா டெமன்டீவா, மரியா ஷரபோவா, நா லி போன்றவர்களும் முன்னணி வீராங்கனைகளுக்கு கடும் நெருக்கடி தரவல்லவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சானியா, பூபதி, பயஸ்: மகளிர் ஒற்றையர் பிரிவில் சானியா மிர்சா தனது முதல் ஆட்டத்தில் பிரான்ஸின் அரவானே ரேசாயுடன் திங்கள்கிழமை விளையாடுகிறார். இதுதவிர மகளிர் இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவிலும் சானியா பங்கேற்கிறார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில், லுகாஸ் லூஹியுடன் லியாண்டர் பயஸம், மேக்ஸ் மிர்ன்யியுடன் மகேஷ் பூபதியும் இணைந்து விளையாடுகின்றனர்.

### இறுதிச் சுற்றில் ஆன்டி முர்ரே

ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் இறுதிச் சுற்றுக்கு பிரிட்டன் வீரர் ஆன்டி முர்ரே தகுதிபெற்றார்.

நடைபெற்று முடிந்த ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் அரையிறுதி ஆட்டத்தில் ஆன்டி முர்ரேவும், குரோஷியாவின் மரின் சிலிச்சும் மோதினர். முதல் செட்டை மரின் சிலிச் எளிதாகக் கைப்பற்றினார். ஆனால் அதன்பிறகு முர்ரேவின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் சிலிச் திணறினார். தொடர்ந்து மூன்று செட்களையும் முர்ரே வென்றார். இறுதியில் 3-6, 6-4, 6-4, 6-2 என்ற செட் கணக்கில் முர்ரே வெற்றிபெற்று இறுதிச் சுற்றுக்குள் நுழைந்தார். மற்றொரு அரையிறுதியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரும், பிரான்ஸின் சோங்காவும் மோதுகின்றனர்.

மகளிர் ஒற்றையர்: மகளிர் ஒற்றையர் முதல் அரையிறுதி ஆட்டம் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் மற்றும் சீனாவின் லி நா இடையே நடைபெற்றது. இருவரும் கடுமையாக மோதினர். இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுவிடுவார் என அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட லி நா, நூலிழையில் தனது வெற்றிவாய்ப்பை நழுவவிட்டார். 7-6, 7-6 என்ற செட் கணக்கில் அவரை வீழ்த்தி செரீனா இறுதிச் சுற்றுக்குத் தகுதிபெற்றார். மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின் மற்றும் சீனாவின் ஜெங் ஜி இடையே நடந்தது. இந்த ஆட்டம் விறுவிறுப்பில்லாமல் ஒருதரப்பு ஆட்டமாக நடந்து முடிந்தது. இதில் 6-1, 6-0 என்ற செட் கணக்கில் ஜஸ்டின் ஹெனின் எளிதாக வென்றார்.

ஆடவர் இரட்டையர்: ஆடவர் இரட்டையப் பிரிவுக்கான அரையிறுதி ஆட்டத்தில் கனடாவின் டேனியல் நெஸ்டர் மற்றும் செர்பியாவின் நெனாட் ஜிமோன்ஜிக் ஜோடி குரோஷியாவின் இவோ கார்லோவிக் மற்றும் செர்பியாவின் டுசன் வேமிக் ஜோடியை 6-4, 6-4 என்ற செட் கணக்கில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. மற்றொரு அரையிறுதிப் போட்டியில் அமெரிக்காவின் பாப் பிரேயன் மற்றும் மைக் பிரேயன் ஜோடி, ஜெர்மனியின் மைக்கேல் கோஹிமான் மற்றும் பின்லாந்தின் ஜர்க்கோ நீமினென் ஜோடியை 6-1, 6-4 என்ற செட் கணக்கில் வீழ்த்தி இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது.

மகளிர் இரட்டையர்: மகளிர் இரட்டையர் அரையிறுதியில் அமெரிக்காவின் வில்லியம்ஸ் சகோதரிகள், அமெரிக்காவின் லிசா ரேமண்ட் மற்றும் ஆஸ்திரேலியாவின் ரென்னே ஸ்டப்ஸ் ஜோடியை 6-3, 7-6 என்ற செட் கணக்கில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றனர்.

மற்றொரு அரையிறுதியில் ஜிம்பாப்வேயின் காரா பிளாக் மற்றும் அமெரிக்காவின் லிஸல் ஹூபர் ஜோடி ரஷியாவின் மரியா கிரிலென்கோ மற்றும் போலந்தின் அக்னிஸ்கா ரத்வன்ஸ்கா ஜோடியை 6-1, 1-6, 6-3 என்ற செட் கணக்கில் வென்று இறுதிச் சுற்றுக்குள் நுழைந்தது.

### வீனஸ் வில்லியம்ஸ் அதிர்ச்சி தோல்வி

பெண்கள் ஒற்றையர் கால் இறுதியில் 6-ம் நிலை வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா) 16-வது இடத்தில் இருப்பவரான நாலீ (சீனா) மோதினார்கள். முதல்செட்டை வீனஸ் எளிதாக வென்றார். ஆனால் அடுத்த செட்களில் சீன வீராங்கனை மிகவும் அபாரமாக விளையாடினார். இதனால் வீனஸ் அதிர்ச்சி கரமாக தோற்று அரைஇறுதி வாய்ப்பை இழந்தார்.

நாலீ 2-6, 7-6, (7-4), 7-5 என்ற செட் கணக்கில் வீனசை வென்று அரைஇறுதிக்கு தகுதி பெற்றார். ஏற்கனவே சீனாவை சேர்ந்த செலுங் அரை இறுதிக்கு தகுதிக்கு பெற்று இருந்தார். கிராண்ட்சிலாம் போட்டிகளில் இரண்டு சீன வீராங்கனைகள் அரை இறுதிக்கு தகுதி பெற்று இருப்பது இதுவே முதல் முறையாகும். லீ அரைஇறுதியில் செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) அல்லது விக்டோரியாவை (பெலாரஸ்) சந்திக்கிறார்.

### செரீனா, ஹெனின் இறுதிக்குத் சுற்றுக்கு தகுதி

மெல்பர்னில் நடந்து வரும் ஆஸ்ட்ரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரின் இறுதிச் சுற்றுக்கு அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்டின் ஹெனின் முன்னேறியுள்ளனர். அரையிறுதிப் போட்டியில் சீன வீராங்கனை லி-னாவை எதிர்த்து செரீனா விளையாடினார். இருவருமே சிறப்பாக விளையாடியதால் ஆட்டத்தில் அனல் பறந்தது. முதல் செட்டை 7-6 (7-4) என்ற புள்ளிக்கணக்கில் செரீனா போராடி வென்றார்.

இதையடுத்து நடந்த 2வது செட் ஆட்டத்திலும் கடுமையான போட்டி நிலவியது. டை-பிரேக்கர் வரை சென்ற இந்த செட்டை 7-6 (7-1) என்ற புள்ளிக்கணக்கில் வென்று இறுதிப்போட்டிக்கு செரீனா முன்னேறினார்.

### ஹெனின் அசத்தல் வெற்றி

மற்றொரு அரையிறுதிப் போட்டியில் சீன வீராங்கனை ஷெங்-ஜி உடன் மோதிய ஹெனின் மிக அபாரமாக விளையாடி 6-1, 6-0 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லாம் தொடரின் அரையிறுதிக்கு சீன வீராங்கனை 2 பேர் முன்னேறியது இதுவே முதல் முறை என்ற போதிலும், இருவருமே அரையிறுதிச் சுற்றில் வெளியேறியதால் சீன ரசிகர்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர்.

### ஜுனியர் உலகக் கோப்பை: இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியா-பாகிஸ்தான்

நியூஸிலாந்தில் நடைபெற்றுவரும் 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்துக்கு ஆஸ்திரேலியாவும் பாகிஸ்தானும் தகுதிபெற்றுள்ளன.

பாகிஸ்தான் - மேற்கிந்திய தீவுகள் இடையே நடைபெற்ற முதல் அரையிறுதிப் போட்டியில் 4 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வென்று இறுதி போட்டிக்குள் நுழைந்தது. முதலில் ஆடிய மேற்கிந்திய தீவுகள் அணி 50 ஓவர்களில் 212 ரன்கள் எடுத்தது. பின்னர் ஆடிய பாகிஸ்தான் 48.3 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 213 ரன்கள் எடுத்து வெற்றிபெற்றது. அந்த அணியின் ஹமத் ஹாசம் அவுட்டாகாமல் 92 ரன்கள் எடுத்தார். மற்றொரு அரையிறுதியில் இலங்கை - ஆஸ்திரேலியா அணிகள் மோதின. முதலில் ஆடிய இலங்கை அணி 48.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 205 ரன்கள் எடுத்தது. பின்னர் ஆடிய ஆஸ்திரேலியா 48.3 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 206 ரன்கள் எடுத்து வெற்றிபெற்றது. ஆஸ்திரேலிய வீரர் மார்ஷ் 97 ரன்கள் எடுத்து அவுட்டானார்.

### தன்னம்பிக்கை நாயகன்

கென்யாவைச் சேர்ந்த ஹென்றி வான்யோக் 1974 மே 10-ல் பிறந்தவர். சிறுவயது முதலே ஓட்டப் பந்தய வீரனாகும் வேட்கையுடன் வளர்ந்தவர். 5 ஆயிரம் மீ., மற்றும் 10 ஆயிரம் மீ. ஓட்டங்களில் முத்திரை பதித்தவர்.

இந்த துடிப்பான இளைஞருக்கு 21 வயதில் (1995) வந்தது கடும் சோதனை. ஒரு நாள் படுக்கைக்குப் போனவர் அடுத்த நாள் எழுந்தபோது பக்கவாதத்தால் பார்வை பறிபோனது. வாழ்க்கையே சூனியமாகிவிட்டது போன்ற உணர்வு. மருத்துவமனையில் அவருக்கு ஸ்வெட்டர் பின்ன பழக்கப்படுத்தப்பட்டது. சிறிது சிறிதாக அவருக்கு தன்னம்பிக்கை கிடைத்தது. பார்வையிழந்தபோதும் ஓட்டத்தில் பங்கேற்க முடிவு செய்து தனது சிறுவயது நண்பர் ஜோசப் கிபுன்ஜா உடன் ஓடிவர பயிற்சி செய்யத் தொடங்கினார். விரைவிலேயே மாரத்தான் ஓட்டத்தில் பங்கேற்கும் அளவுக்கு திறமை பெற்றார்.

சிட்னியில் 2000-ல் நடைபெற்ற வலுவிழந்தோருக்கான ஒலிம்பிக் போட்டியில் 5 ஆயிரம் மீ. ஓட்டத்தில் சாதனை படைத்து (15 நி. 46.29 வி) தங்கம் வென்றார்.

கென்ய ஓட்ட வீரர்கள் பொதுவாக ஓரிரண்டு போட்டிகளில் கவனம் செலுத்துவர். ஆனால், ஹென்றியோ மாரத்தான், பாதி மாரத்தான், 10 கி.மீ. சாலையோட்டம், 10 ஆயிரம் மீ., 5 ஆயிரம் மீ., 1,500 மீ. என அனைத்திலும் முத்திரை பதித்து வருகிறார்.

2004 ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் 5 ஆயிரம் மீ. மற்றும் 10 ஆயிரம் மீ. ஓட்டங்களில் உலக சாதனையுடன் தங்கம் வென்றார்.

2005 ஹாம்பர்க் மாரத்தானில் 2 மணி 31 நி. 31 விநாடிகளில் இலக்கை எட்டியது இன்றளவும் பார்வையற்ற வீரர்களுக்கான உலக சாதனையாக இருந்து வருகிறது. 2006 நவம்பரில் நடைபெற்ற நியூயார்க் மாரத்தானில் 121-வது இடம் பிடித்தார். இதில் 38,368 பேர் பங்கேற்றனர்.

வெறும் சாதனையாளராக இல்லாமல் தனக்கு நம்பிக்கை அளித்த மருத்துவமனையின் வழியிலேயே பார்வையற்றவர்களுக்கு ஸ்வெட்டர் பின்ன கற்று தந்து கொண்டிருப்பதுடன் அறக்கட்டளை நிறுவி பலரது அறுவைச் சிகிச்சைக்கு உதவி அளித்து பார்வை அளிக்கச் செய்தார். இவரல்லவோ தன்னம்பிக்கை நாயகன்!

### ஆஸ்திரேலியா சாதனை வெற்றி

பாகிஸ்தானுக்கு எதிரான 3-வது கிரிக்கெட் டெஸ்டில் ஆஸ்திரேலியா 231 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. இதையடுத்து, 3 ஆட்டங்கள் கொண்ட தொடரை 3-0 என ஆஸ்திரேலியா கைப்பற்றியது. தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிராக ஆஸ்திரேலியா பெற்றுள்ள 12-வது டெஸ்ட் வெற்றி இது. வங்கதேசத்துக்கு எதிராக இலங்கை தொடர்ந்து 12 டெஸ்டுகளில் வென்ற சாதனையை ஆஸ்திரேலியா சமன் செய்துள்ளது.

ஹோபார்ட்டில் தொடங்கிய இந்த டெஸ்டில், 438 ரன்கள் என்ற வெற்றி இலக்குடன் 5-ம் நாள் ஆட்டத்தை திங்கள்கிழமை தொடர்ந்த பாகிஸ்தான் 206 ரன்களுக்கு சுருண்டது.


சுருக்கமான ஸ்கோர்:

ஆஸ்திரேலியா: 519-8 டிக். (பாண்டிங் 209, கிளார்க் 166) ரூ 219-5 டிக். (காடிச் 100, பாண்டிங் 89).

பாகிஸ்தான்: 301 (சல்மான் பட் 102, காடிச் 3-34) ரூ 86.2 ஓவர்களில் 206 (குர்ரம் மன்சூர் 77, சிடில் 3-25, ஹெரிட்ஸ் 3-30).

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியது.


பாகிஸ்தான் அணிக்கு எதிரான சர்வதேச ஒருநாள் போட்டித் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியுள்ளது. நடைபெற்ற



எஸ். கணேஷ்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# மாறுகின்ற அல்லது மாறாத அடமானக் கடனா சிறந்தது?

## *Variable or Fixed Mortgage*

அடமானக் கடன் நிச்சயமாக அதிகரிக்கப்போகின்றது. எப்பொழுது? எந்நேரமும். எவ்வாறான அடமானக்கடனை தெரிவு செய்வதன் மூலம் எமது எதிர்கால கடன்பழுவை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும். மாறுகின்ற அடமானக்கடன் வட்டி வீதமா (Variable Mortgage) அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு மாறாமல் இருக்கும் (Closed Mortgage) வட்டிவீதமா தெரிவு செய்வது சிறந்ததாக இருக்கும்.

இருவிதமான கடன்பெறும் முறையிலும், நன்மையும் உள்ளது, தீமையும் உள்ளது. முதலில் குறிப்பிட்ட காலத்திற்கு மாறாமல் இருக்கும் (Fixed Rate) அடமானக் கடனைப்பற்றிப் பார்ப்போம். இன்றைய காலகட்டத்தில் (February 1st, 2010) சரித்திரத்திலேயே அதிகுறைந்த வட்டிவீதத்தை பெறக்கூடியதாக உள்ளது என்பது உண்மை.

அனேகமான ஆதனம் வாங்குபவர்கள் ஐந்து வருடத்தின் மாறாத கடனைப் பெறுகிறார்கள். இருந்தும் சிலர் ஏழு வருடம், 10 வருடங்களிற்கான அடமானக் கடனையும் பெறுகின்றார்கள். 10 வருடத்திற்கான கடனைப் பெறும் சிலர் இந்த வகையான அடமானக்கடன்தான் சிறந்தது எனவும் தமது நியாயத்தை தெரியப்படுத்துகின்றார்கள்.

எது சரி-பிழை? இரண்டும் சரியாக இருக்கலாம். இதனை எவ்வாறு நியாயப்படுத்தலாம் என அடமானக்கடன் பெற்றுக்கொடுக்கும் நிபுணரிடம் கேட்கும் போது, ஒவ்வொருவருடைய தனிப்பட்ட கடன் செலுத்தும் தகைமையையும், அவர்களுடைய வருமானம் மற்றும் செய்யும் தொழில்களினால் அவர்களுக்கு கஷ்டம் வந்தால் தாங்கக்கூடிய மனப்பான்மை போன்றவற்றிலும் தங்கியுள்ளது என கூறியுள்ளார்.

இன்றைய காலகட்டத்தில் (பெப்ரவரி 01, 2010) Variable Mortgage 1.95% இற்கும் ஐந்து வருட Fixed rate 3.79% இற்கும் 10 வருட Fixed rate 5.3% இற்கும் பெறக்கூடியதாக உள்ளது.

ஒருவர் 10 வருட அல்லது ஐந்து வருட Fixed Mortgage எடுக்கும் போது இன்றைய அதிகூடிய ஆதனவிலையில், அதிகமான மாதாந்த கட்டுப்பணத்தை கொடுப்பனவு செய்ய வேண்டியுள்ளது. இதே சந்தர்ப்பத்தில் Variable கடன்பெற்றால் மாதாந்த கடன் கொடுப்பனவில் ஐந்து வருட நிரந்தர அடமான கொடுப்பனவின் அரைப்பகுதியை விட குறைவாகவே கொடுப்பனவு செய்யக்கூடியதாக இருக்கின்றது. 10 வருட மாதாந்த அடமானக்கடன் 5.3%, ஐந்து வருட கடனுடன் ஒப்பிடும்போது அதிகமாகவே காணப்படுகின்றது. மேலுள்ள இரண்டு கொடுப்பனவு களிலும் இதுவே அதிகமாகும்.

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 313**

கடந்த 10 வருடத்தின் சராசரி ஐந்து வருட அடமானக்கடனை ஆராயும் போது 6.78% ஆகக் காணப்படுகின்றது. ஆதாரம் - (Bank of Canada - Data) பொதுவாக நிதி நிறுவனங்கள் 1.5% வரையான கழிவை வழங்குகின்றன. எனவே இதனுடன் 1.5% ஆன கழிவு பெறும்போது சராசரி அடமான வட்டிவீதம் 5.3% ஆகக் காணப்படும். இன்றைய 10 வருட வட்டிவீதமும், கடந்த ஐந்து வருட சராசரி அடமானக்கடன் வட்டிவீதமும் சமனாகவே காணப்படுகின்றன. இருந்தபோதிலும் இன்றைய அடமானக்கடனின் சூழலில், 10 வருட வட்டிக்கொடுப்பனவு, ஐந்து வருட மாதாந்த கொடுப்பனவுடன்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்


**HomeLife GTA Realty Inc., Brokerage***

Independently owned & operated

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

1711 McCowan Rd. #206, Toronto
Tel.: 416.321.6969

145 Traders Blvd # 29, Mississauga
Tel.: 905.712.2666

**NEWER 2 BEDROOM CONDO. FOR SALE**

***KENNEDY / ELLESMERE / BIRCHMOUNT***



- 2 Bedroom, excellent condition unit for sale in a highrise condo. for sale
- Laminated floor, ceramic floor
- 1 parking, • 1 locker included.
- 24 hours security guard, swimming pool, recreation place.
- Hydro, water, gas included in the maintenance fee.
- 2 full washrooms • Fridge, stove, washer, dryer, built in dishwasher, sakura fan.

**CONDO. FOR SALE - SCARBOROUGH**

***MCLEVIN & NEILSON (Mayfaif Buildings)***

- 2 Bedroom corner unit
- 1265 sqft
- Laminated, ceramic floor
- 2 parking, 1 locker included.
- Laminated floor, Ceramic floor
- Price $184,900
- 24 hours security, swimming pool, in a separate building
- Close to doctors, pharmacy, mall, ttc, highway....

***Party Rental Business for Sale***

- Brimley / Progress
- Lots Of Rental Items Meant For Variety Of Functions / Occasions.
- Gross Rent $2800/Month Plus Utilities.
- Asking Price $99,000 Plus Stock

**Condo. sale - Mississauga**

- ***Dundas / Hurontario***
- 1 bedroom condo.
- Renovated kitchen
- Laminated floor
- 1 parking, locker
- Unobstructed view
- maintenance fee only $322
- Asking $149,900

***Commercial Building unit for sale***

- Markham Rd. / Major Mackenzie
- 1,233 Sq.Ft.
- Prime location, visible Strip Plaza
- Suitable Uses Restaurant/Retail (Currently running as a bakery business.
- Asking $349/sqft

***Commercial/Retail for Lease***

- 5215 Finch Ave E, Middlefield & Finch
- Rent $950 Gross Lease
- Lowest Rent To Afford Any Bussiness, Great Opportunity!
- Only few units left on the mainfloor
- Underground And Surface Parking
- Don't miss

**Nantha Aiyadurai**

Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்




Relocation Service

OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

நாள்: 14.11.2009, சனிக்கிழமை
இடம்: சிவபூமி முதியோர் இல்லம், சுழிபுரம்
தலைமை: செஞ்சொற்செல்வர் திரு. ஆறு திருமுருகன்

# சிவபூமிக் கனிகள்

சிவபூமி அறக்கட்டளைப் பணிப்பாளர் சபைத் தலைவர் செஞ்சொற்செல்வர்
ஆறு திருமுருகன் அவர்களே!
இம் முதியோர் இல்லத் தொண்டர்களே!
அனுபவக் கனிகளாக விளங்குகின்ற பெரியோர்களே!

உங்களைக் காணவும் உரையாடவும் உடன் இருந்து உணவு அருந்தவும் நல்லதொரு வாய்ப்பை அளித்த அருமை நண்பர் ஆறு திருமுருகன் அவர்களுக்கு எனது மனைவியும் நானும் நன்றியுடையவர்களாக இருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உரையாற்றச் சொல்லுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இருந்தாற்போல கூட்டத்தைக்கூட்டி, உங்கள் முன் என்னை நிறுத்தியிருக்கின்றார் தலைவர். இவ்விதம் இடையிடையே கூட்டங்கள், மற்றும் கலை விழாக்கள் வைத்து உங்கள் பொழுதை உவப்பாக்குவதாகவும் சில சமயங்களில் உங்களைச் சுற்றுலாக்களுக்கு அழைத்துச் செல்வதுண்டு என்றும் அவர் சொன்னார். இவற்றிலிருந்து முதியோர் இல்லத்தை அவர் முறையாக நடத்திவருவது தெரிகிறது. அதாவது, முதியோருக்குத் தங்கியிருக்க இடவசதியும் உண்ண உணவும் மட்டும் கொடுத்தாற்போதாது, அவர்களுக்கு மகிழ்வூட்டும் நிகழ்ச்சிகளும் இடைக்கிடை வழங்கப்படல் வேண்டும் என்கின்ற எண்ணம் உன்னதமானது, உளவியல் சார்ந்தது.

ஒவ்வொரு அறைக்கும் எங்களை அழைத்துச் சென்று உங்களுக்கு அறிமுகஞ் செய்து வைத்தார். ஐம்பத்திரண்டு முதியவர்கள் தனித்தனி அறைகளில் மிகுந்த வசதியாக இருப்பதைக் கண்டு மனநிறைவு பெற்றோம். கொழும்பில் ஒரு முதியோர் இல்லத்தைப் பாரத்துவிட்டுத்தான் வந்திருக்கிறோம். அங்கு இவைபோன்ற வசதிகளை நாம் காணவில்லை. அவ்வகையில் நீங்கள் கொடுத்துவைத்தவர்கள் என்று சொல்லலாம்.

அதுமட்டுமல்லாது இவ்வில்லத்தின் சுற்றுப்புறம் கண்ணுக்குக் குளிர்ச்சி அளிப்பதாகவும் நீங்கள் வெளியே வந்து ஆறுதலாகப் பேசி மகிழ்ந்திருக்கக்கூடிய ஒரு பூங்கா போலவும் இருக்கின்றது. இதிலிருந்து உங்களை எவ்வளவுக்கு மகிழ்ச்சியாக வைத்திருக்க முடியுமோ அவ்வளவுக்குச் சிவபூமி அறக் கட்டளைப் பணிப்பாளர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள் என்பது நன்கு தெரிகின்றது.

இல்லத்திற் சேருவதற்குப் பலர் விண்ணப்பித் திருந்தபோதிலும் இடமின்மை காரணமாக அவர்களைச் சேர்த்துக்கொள்ள முடியவில்லை என்றும் செஞ்சொற் செல்வர் கவலைப்பட்டார்.

ஒரு முதியவரிடம் எனக்கு முன்னாற் சென்ற செஞ்சொற்செல்வர் திரு. ஆறு திருமுருகன் அவர்களைச் சுட்டி 'உவரைத் தெரியுமோ?' என்று சும்மா கேட்டேன். அவர் என்னை ஒருமாதிரியாகப் பார்த்துவிட்டு, 'தெரியுமாவா? அவர்தான் எங்கள் கடவுள்' என்று பதில் அளித்தார்.

அவருடைய பதில் என் நெஞ்சத்தைத் தொட்டது. கேள்வியைச் சிவபெருமானே கேட்க வைத்தாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. அந்த ஒரு கேள்வியால் எந்த அளவுக்கு நீங்கள் செஞ்சொற்செல்வரை மதிக்கிறீர்கள், எந்த இடத்தில் அவரை வைத்துப் போற்றுகிறீர்கள் என்பதை அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. உண்மைதான். கடவுள்தான் ஆறு திருமுருகன் என்கின்ற தொண்டர் மூலம் பலவிதமான சமூக சேவைகளையும் சமயப் பணிகளையும் செய்விக்கின்றார் என்பதை அந்தப் பெரியவர் நன்கு உணர்ந்திருக்கின்றார்.


முதியோர் இல்லச் சுற்றுப் புறம்

செஞ்சொற்செல்வர் உங்களை நடமாடும் கோயில்களாகக் காண்கிறார். உங்களுக்குச் சேவை செய்வதன்மூலம் அவர் இறைவனை மகிழ்ச்சிப்படுத்துகின்றார். இதனையே திருமூல நாயனார்,

படமாடக் கோயில் பகவர்க் கொன்றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயில் பகவர்க் கதாமே

என்றார். மக்கள் சேவை மகேசன் சேவையல்லவா?

எமது சமயம் ஒரு தொண்டுச் சமயம். 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்றார் அப்பர் பெருமான். அவர்வழி பலவிதமான மக்கள் பணிகளைச் செய்து காட்டியவர் துர்க்காதுரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். அவரைத் தொடர்ந்து மக்கள் பணிதான் சிறந்த மகேசன் பணி என்பதனை நடைமுறையிற் காட்டிக் கொண்டிருப்பவர் செஞ்சொற் செல்வர் அவர்கள். அவர் இறைவன் எமக்குத் தந்த நன்கொடை, பெரியோர்களே! இதனையே அந்தப் பெரியவர் எனக்கு உணர்த்தியிருக்கின்றார்.

உங்களுக்கு எந்தக் குறையுமில்லை. நீங்கள் நல்ல இடத்திலே இருக்கிறீர்கள். அந்த நல்ல இடந்தான் சிவபூமி. சிவபூமியில் போட்டி பொறாமைகள் இல்லை. சண்டை சச்சரவுகள் இல்லை. பந்தபாசப் பொறுப்புகளிலிருந்து விடுபட்டு, கவலைகளுக்குக் கதவுகளை அடைத்து அமைதியாக, நிம்மதியாக இவ்வளவு காலமும் சீரோடும் சிறப்போடும் வாழவைத்த இறைவனுக்கு நன்றிசொல்லி வாழும் வாழ்க்கைதான் சிவபூமி வாழ்க்கை. நீங்கள் வெளியுலகத்தில் வாழ்ந்த காலத்தில் ஒன்றை அவதானித்திருக்கலாம். முதியவர்களை இளைஞர்கள் மதிப்பது குறைவு. முக்கியமாகத் தமிழர் மத்தியில் இத்தகைய பண்புக் குறைவை நான் அவதானித் திருக்கிறேன். அநுபதிகளிலே ஒரு பேருந்தில் நான் பயணஞ் செய்த போது, அந்த வண்டியில் ஒரு மூதாட்டி ஏறினார். எந்த இளைஞரும் எழுந்து அந்த அம்மையாருக்கு இடம் கொடுக்கவில்லை. கடைசியில் அந்த அம்மையார் நடத்துநரை - அதாவது கண்டக்டரை இருக்க இடம் கேட்டார். அவர் சொன்னார், "உன்னாலை நிற்க முடியாட்டில் ஒரு காரையல்லோ ஆச்சி நீ பிடிச்சுக்கொண்டு போயிருக்க வேணும். பஸ்ஸிலை ஏன் ஏறினனி?"

கனடாவில் முதியவருக்குப் பெருமதிப்பு உண்டு. பேருந்துகளிலோ தொடர் வண்டிகளிலோ வயோதிபர்களைக் கண்டால் இளைஞர்கள் எழுந்து இடம் கொடுத்து உதவுவார்கள். பொதுசன வண்டிகளில் முதியவர்களுக்கென்று தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. முதியவருக்கு அங்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.

ஏவா மக்கள் மூவா மருந்து என்று பாடினார் அவ்வையார். அதாவது, குறிப்பறிந்து பணி களைச் செய்யும் இளைஞர் முதியவர்களை மூப்படையாது வைத்திருக்கத் தக்க மருந்து போன்றவர் என்கின்றார். அப்படித்தான் முற்காலத்தில் எமது இளைஞர்கள் வாழ்ந்தார்கள். அதனை "யான்கண்டனையர் என் இளைஞரும்" என்று சொல்லி வைத்தார் சங்க காலத்துப் பிசிராந்தையார் என்ற புலவர்.

இந்தக் காலம் சங்க காலமன்று. இது சங்கட காலம். நீங்கள் வெளியிலிருந்தால் இங்கு அனுபவிக்கும் மதிப்பையும் சுகத்தையும் அனுபவிக்க முடியாமலும் இருந்திருக்கும்.

நீங்கள் சாதாரணமானவர் அல்லர் - முற்றிப் பழுத்த கனிகள். காய்களைவிடக் கனிகள் சுவையானவை என்பதை எல்லோரும் அறிவார்கள். அனுபவ அறிவைப்போன்ற சிறந்த அறிவு வேறொன்றும் இல்லை.

கனடாவிலே tvi என்ற தொலைக்காட்சியிலே கலங்கரைவிளக்கம் என்ற நிகழ்ச்சி ஒன்றைச் சிலகாலம் நடத்தினேன். அதிலே கற்றறிந்த முதியவர்களை அழைத்து அவர்களது கருத்துக்களை, அனுபவங்களை நேயர் களுடன் பகிர்ந்துகொள்ள வைத்தேன். முதியவர்கள் சமுதாயத்துக்குக் கலங்கரை விளக்கைப் போன்றவர்கள். ஒரு வித்தியாசம் என்னவென்றால், கலங்கரை விளக்கங்கள் ஓய்வதில்லை. ஆனால் நீங்கள் ஓய்வு பெற்றுவிட்டீர்கள்.

நீங்கள் இன்று சமுதாயத்திலிருந்து ஒதுங்கியிருந்தாலும் உங்கள் சேவைகள் ஏதோ ஒரு வகையில் சமுதாயத்துக்குப் பயன்பட்டிருக்கும் - பயன்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நினைத்து நீங்கள் பெருமை கொள்ளலாம். உங்களிற் பலர் ஆசிரியர்களாக இருந்திருக்கிறீர்கள். எவ்வளவு மாணவரை உருவாக்கியிருப்பீர்கள்? இன்னும் சிலர் வேறு பல பெரும் பதவிகளில் இருந்து பலருக்கு வழிகாட்டிகளாக இருந்திருப்பீர்கள். பெண்கள் சிலர் தொழில் எதுவுமே பார்க்கவில்லையென்றாலும் குடும்பப் பொறுப்புகளைச் செவ்வனே செய்து பிள்ளைகளை நல்ல நிலைக்குக் கொண்டுவந்திருப்பீர்கள். அத்தகைய நல்ல சேவைகளை உங்களுக்குள்ளே பகிர்ந்து கொள்வதன்மூலம் உங்களுக்கு மனநிறைவு ஏற்படும். அத்தகைய இரைமீட்பு உங்களுக்கு நல்ல பொழுதுபோக்காகவும் அமையும்.

மனநிறைவுதான் ஆரோக்கியத்துக்கு அச்சாணி போன்றது. மனச்சுத்தம், மனமகிழ்ச்சி, மனத்துணிவு, மனக் கட்டுப்பாடு, மனம்போல வாழ்வு போன்ற தொடர்கள் நம்முன்னோர் எவ்வளவுதூரம் மனத்துக்கு முதன்மை அளித்தார்கள் என்பதைக் காட்டுவனவாக உள்ளன. ஏனெனில் எமது வாழ்வின் நடவடிக்கைகள் அனைத்துக்கும் மனந்தான் அடிப்படையாகின்றது. எமது வாழ்வின் நன்மைக்கும் தீமைக்கும், உயர்வுக்கும் தாழ்வுக்கும் மனமே காரணமாகின்றது.

மனமெனுந் தோணிபற்றி என்று பாடினார் அப்பர்பெருமான். வாழ்க்கையே மனம் என்னும் தோணியிலேதான் ஓடுகின்றது. அதனை மதியெனும் கோலால் வலித்துச் செலுத்துவதே எங்கள் வேலையாகின்றது. மதி நன்றாக இருந்தால் வாழ்க்கையும் நன்றாகும். அது தீயதாக இருந்தால் வாழ்க்கை பாழாகும்.

மனத்துக்கு வயது கிடையாது. உடலுக்குத்தான் வயது. மனத்தைப் பொறுத்த அளவில் நாங்கள் எல்லோருமே இளைஞர்தாம். ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் நடந்தவைகளை நினைத்துப் பார்க்கையில் ஏதோ நேற்று நடந்தவைபோல இருக்கும். அதற்குக் காரணம் மனம் அப்படியே மூப்படையாமல் இருப்பதுதான்.


முதியோர் இல்ல வழிபாட்டறை

மனப்பான்மை சரியாக இருந்தால் வாழ்க்கையும் சரியாக இருக்கும். ஒரு பேருந்து வீதி பள்ளமும் திட்டியுமாக இருந்ததால் ஏறி இறங்கி, சரிந்து நிமிர்ந்து சென்றது. அதன் குலுக்கத்தைத் தாங்கிக்கொள்ள முடியாத இரண்டு மூன்றுபேர் ஐயோ, அப்பா, ஆத்தை என்று புலம்பத் தொடங்கினர். இடையில் ஒரு வாலிபனும் இளம் பெண்ணும் ஏறினார்கள். அவர்கள் புதுமணத் தம்பதிகள். பேருந்தின் குலுக்கம் அடிக்கடி அவர்களைக் கட்டிப்பிடிக்க வைத்தது. அவர்களுக்கு அது ஆனந்தமாக இருந்தது.

இவ்விதம் உங்களுடைய வாழ்க்கையும் உங்கள் மனம்போலவே நடந்திருக்க வேண்டும். இப்பொழுதும் அப்படித்தான் நடந்துகொண்டிருக்கிறது. இந்த இல்லத்துக்கு நீங்கள் விரும்பித்தானே வந்திருக்கிறீர்கள். நல்ல இடத்துக்கு - சிவபூமிக்கு வந்திருக்கிறீர்கள். நீங்கள் புண்ணியம் செய்தவர்கள். உங்களுக்கு ஒரு குறையுமில்லை. உங்களுடன் கடவுள் இருக்கிறார் - தொண்டுக்கென்றே பிறந்த ஆறு திருமுருகன் உருவத்தில்.

வாழ்த்துக்கள். வணக்கம்.


கவிஞர் வி. கந்தவனம்

றிப்ளக்ஸ்
REFLEX
COPY & DIGITAL PRINTING
B/W & Color Copies
Color & B/W Prints - Booklets - Binding
Scanning - Color B.Card & Flyers
POSTERS & BANNERS
1109 Bay St., Toronto - Tel: 416-975-9674
அச்சுத் தொடர்பிற்கு JOE (416)558-8905
BAY & BLOOR (BAY SUBWAYக்கு அருகாமையில்)
OPEN 7 DAYS



வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...
Elaguppllai (Mike) Srinathan B.Sc
Sales Representative
Dir: 416-276-1225 Off: 905-470-9800
Email: esrinathan@trebnet.com
RE/MAX
SOLD
Kennedy/Eglinton
$164,800
Luxury Rainbow Village Condo With 24 Hrs Gate House Security, Day Care Facility And Close To All Amenities.
Markham Ellesmere
$319,000
Detached Bungalow Bed rooms 3+1, Washrooms 2 Solid Brick Bungalow In A Very Desirable Area..2 Min. To Kg School; 5 Min To Sec. School
16th Ave/Markham Bypass
$339,900
Townhouse, 2 Story Bed rooms 2+1, Washroom 3 Immaculate Townhouse - Walk To New Shoppes In Cornell
Mccowan/Steeles
$349,900
Link 2 story, Bed rooms 3+1, Washrooms 3 This Has Been Updated.Seperate Entrance To Finished Basement With One Bdrm,Kitchen
Burr Oak & Ninth Line
$419,000
Detached 2 Story Bedrooms 3, Washrooms 3, Across The Street From Public School,Large Bedrooms,
16th/9th Line
$429,000
Detached 2 Story, Bedrooms 3, Wasroom 3 Walking Distance To School & Public Transportation Double Car Garage
Morningside / Old Finch
$438,800
Detached 2 Story, Bed rooms 4 Washromss 3, Approx. 1900 Only 7 Years Old! Approx. 2800 Sq.Ft., 4 Large Bedrooms
Mccowan / Highglen
$439,900
Detached 2 Story, Bed rooms 3+2 Washrooms 4. Steps To Schools, Park, Bus & Shopping. Finished Bsmt Had 2 Bdm & 1X4 Pc Wash-
Markham & Steeles
$444,900
Detached 2 Story, Bed rooms 4+2, Washrooms 4 2 Min.To Ttc & SteelesClose To Shopping And Schools, Second Floor Balcony
Ninth Line/Kenilworth/Hwy 7
$449,000
Detached 2 story, Bed rooms 4 Washrooms 3, High Demand Location Closer To All Amenities 2 Minutes To Markham/Stoufville Hospital
Middlefield/Denison
$449,900
Detached 2 Story, Bedrooms 4+2, Washrooms 3, Home Approx. 2400 Sqft. Near Schools
Middlefield/14th
$459, 900
Link 2 Story, Bed rooms 4+1, Washrooms 4 Aprox.2100 Sqft Of Luxury,Approx 10 Yrs Old, Enclosed Front Porch
Markham/Major Mackenzie
$469,500
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, 4 Bedroom Brick Home Full Of Luxury Upgrades Prof.Finished Interlock
Finch/Neilson
$475,000
Detached 2½ Story, Bedrooms 3+1 Washrooms 4,3.5 Years New All Brick Home, Separate Entrance To Basement With Large Bed-
Mccowan/14th Ave
$ 529,900
Detached 2 Story, Bedrooms 5+2, Washroom 4 Corner Lot, Finished Bsmt With Sep. Ent. + 2 Bedroom + Kitchen + 4Pc Bathroom
9th Line/16th Ave
$549,900
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 4, Only 2 Years New 4 Bedroom Home Approx 2900Sqft With 3 Full Baths
Markham Road/14th Ave
$639,000
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 5 3400 Sq.Ft, Two Ideally Built Basement Apartments Bring Rental Income
9th Line/14th Ave
$928,800
Detached Bungalow, Bedrooms 4+1 Washrooms 4, Built'spacious Bungalow In Prestigious'legacy'community Fin.Bsmt W/Br,Rec
Harwood S. Of Tounton
$325,000
Detached 2 Story Bed rooms 3, Washrooms 3 Upgrated Whith Hardwood Floor And Modern Apliances, Quiet Neghborhood
Markham & Eglinton
$329,900
Townhouse 2 Story Bed rooms 3, Washrooms 2, No Maintenance Fee, New Flooring , Minutes To All Amenities , Close To Schools
Hoover Park/Weldon
$309,900
Townhouse. Bed rooms 3, Washrooms 2, Beautiful Mattamy Freehold Open Concept Home. Gorgeous Kitchen
Hwy 7/East Beaver Cr
$544,900
Heart Of Richmond Hill. Well-Known Sheraton Parkway Mall. Was A Restaurant Unit.Space Can Also Be Used For Retail/Office Purpose
Sales of Business
Shell
$525,000 For Sale
Sale Of Business Without Property Gas Stations. Full Service Gas Station On A Very Busy Highway 41
RE/MAX
Realtron Realty Inc. Brokerage
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7
'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'

# பாரிச வாதம் (Apoplexy/Stroke) மாரடைப்பு (Heart Attack)

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

இருதய வழுவல் - Heart Failure போன்றவை குருதி அமுக்கத்தினால் ஏற்படும் அல்லது நோய்களினாலும் ஏற்படலாம். சிறுநீரக வியாதி, இயக்கு நீர் (Hormones) அதி செயல்பாடு, இரத்தக்குழாய்களில் நோய் மற்றும் பரம்பரையாகவும் வருமெனவும் அறிய முடிகிறது. எனவே, தங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் மேற்கூறப்பட்ட வியாதிக-ளால் பீடிக்கப்பட்டிருப்பின் தாங்களும் அதனால் பாதிப்படையாமல் இருக்க முன்கூட்டியே தங்கள் வைத்தியர்களிடம் விபரம் கூறி பரீட்சித்துக் கொள்ள வேண்டும். அத்துடன் எம்மைக் காப்பாற்றிக்கொள்ள முன்கூறிய பயிற்சிகளை கையாள்வதுடன் உண்ணும் உணவில் சமச்சீர் உணவுடன் நீக்க வேண்டியவற்றை நீக்கி சேர்க்க வேண்டியவற்றை சேர்த்து பாவித்து வருதல் வேண்டும். தசைப்பற்றுள்ள அதாவது கொழுத்த அல்லது பருமனுடையவர்களுக்கு கொழுப்புச்சத்தும் எடையும் கூடிக் காணப்படுவதுண்டு. இந்நிலையில் இருந்தால் எடையைக் குறைக்க முன் கூறியவற்றை எடுத்து வருதல் வேண்டும். மேலும் பப்பாளிக்காயின் தோலைச்சீவி துண்டாக்கி துவரம் பருப்புக்கூட்டி கறிப்பாகம் செய்து இடையிடையே உணவுடன் பாவிக்கலாம். முன் கூறப்பட்ட பயிற்சிகளையும் செய்து வருவது நன்று. ஆனால், மெல்லிய தேகமுள்ளவர்களுக்கு இந்நோய் எற்படாது என்ற எண்ணம் தவிர்க்கப்படல் வேண்டும். இவர்களும் உணவு பற்றி வயதுக்கேற்ற வகையாக எடுத்தல் வேண்டும். கொழுப்புச்சத்து எவருக்கும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படாது பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

குறைந்த இரத்த அழுத்த நிலை (L.P) பெரும்பாலும் அதிக இரத்தம் வெளியேறுதல், அதிர்ச்சி, இரத்தச்சோகை, உண்ணா நோன்பு போன்ற நிலைகளில் ஏற்படலாம். எனவே நாளாந்தம் சமசீர் உணவு முக்கியம். அதில் கொழுப்புச்சத்து பெறக்கூடியவற்றை சேர்த்து தகுந்தளவில் எடுத்து வருதல் வேண்டும். எனவே, இது ஒரு தற்காலிக நிகழ்வாகும். நாளடைவில் யாவும் நிவர்த்தி பெறும். எள்ளு, நல்லெண்ணெய், இறைச்சி போன்றவை



அளவுக்கேற்ப எடுக்கலாம். எள்ளில் 45% வீதம் கொழுப்புண்டு. இருதய நோய் ஏற்படாது தடுக்கும் வலுவுண்டு. உயிர்ச்சத்து A, புரதச்சத்து காணப்படுவதாக ஆராய்ச்சி நூல்கள் கூறுகின்றது.

பெரும்பாலும் அதி இரத்த அழுத்தம் ஏற்படாதிருக்க முக்கிய கவனிப்பு. நிறை (எடை) அவதானிக்க வேண்டும். சீனி, சர்க்கரை, ஐஸ்கிறீம், சொக்லேட், இனிப்பு தவிர்த்தல் வேண்டும். வெண்ணெய், நெய், பட்டர், மாஜரீன், சீஸ், பொரியல்கறியல், கருவாடு, ஊறுகாய், மோர் உப்பு மிளகாய், மது, புகைப்பிடித்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

மனப்பழு, மனப்பதட்டம், கவலை, கோபம் என்பன ஏற்படாமல் இருத்தல் வேண்டும். ஓய்வு முக்கியம். நித்திரை நன்றாக அமைய வேண்டும். உடற்பயிற்சி, நடைப்பயிற்சி, துவிச்சக்கர வண்டியோட்டம் ஏதாவது குறிப்பிட்டளவு கையாள்வது நன்று. அமைதி, யோகாசனம், தியானம், சாந்தியாகம் என்பனவற்றை உரியவரிடம் சென்று கையாள வேண்டும்.

**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013



**என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்**



**Interest Rate going up soon best time to buy Real Estate**

**3 bedroom Condo. Markham / Eglinton Low Maintenance**

*A few Bungalow houses near Universities London, Waterloo, Hamilton, Peterborough Good investment for your children*

Gas Stations 4 million litres / year in Peterborough, Oshawa, Hamilton with 6/49, good income

Home Based Business for *Senior Care*
Over 65 years old with *Property*
*100 Acres Farm with Income North of Markham*
*5 year plan 3.9% interest* **Power of Sale**
*Properties with Tenant's Pay the cost What's your Risk?*

வீடும் வியாபாரமும் *Business Zoning*
**Future long term Investment**

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு

அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.

## கனவுகள்

02ஆம் பக்கத்தொடர்ச்சி

கூட கட்ட வாய்ப்பு உள்ளது. வருமானம் கூடும்போது அந்த கூடுதல் வாய்ப்பைப் பயன்படுத்தி RRSP மூலமாக வரிகளைக் குறைத்துக் கொள்ளலாம். அல்லது வேலையிழப்பு போன்றவற்றின் காரணமாக ஒரு பெருந்தொகை கிடைத்தாலும், RRSP ஐ ஒரு கருவியாகப் பயன்படுத்தி வரிகளைக் குறைத்துக் கொள்ள வாய்ப்பு உள்ளது. அல்லது இதே போலத்தான் ஓய்வு காலம் வரை வருமானம் இருக்கப் போகின்றது என்று வைத்துக் கொண்டால் OAS, GIC போன்ற அரசின் பணச் சலுகைகள் கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது.

வருமானம் 40,000 லிருந்து 81,000 க்குள் உள்ளவர்கள் ஓய்வு பெறும் காலத்தில் வருமானம் கூடுதலாக இருக்குமா அல்லது குறைவாக இருக்குமா என்று யோசித்துப் பார்த்து முடிவு செய்ய வேண்டும். ஓய்வு காலத்தில் வருமானம் தற்பொழுதை விட கூட இருக்குமானால், முதலில் கவனம் செலுத்த வேண்டியது TFSA இல்தான். இல்லையேல் RRSP.

81,000 க்கு மேல் வருமானம் உள்ளவர்கள் RRSP யில் முதலில் கவனம் செலுத்தி, அதனால் வரும் வரிமிச்ச காசோலையை TFSA க்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆக TFSA எல்லாத் தரப்பினருக்கும் நன்மையைத் தருகின்றது.

கடன்வாங்கி RRSP யில் போட நினைத்தால் இருமுறை யோசித்து முடிவு செய்யுங்கள். ஓராண்டுக்குள் அக்கடனைச் செலுத்த முடியாது என்றால், கடன்வாங்காமல் இருப்பதே நல்லது. மேலும் கடன் வாங்கும்போது கொடுக்கும் வட்டியை விட முதலீடு செய்த பணத்தால் அதிக இலாபமும் கிடைக்க வேண்டும். புரியாத ஒன்றில் காலைவிடாதீர்கள்.

இந்த எளிய ஆலோசனைகளைப் பின்பற்றினால் வளமான வாழ்வை நோக்கி நீங்கள் நகர்ந்து கொண்டிக்கிறீர்கள் என்று அர்த்தம். கடைசியாக ஒன்று உங்கள் கணக்காளர் அல்லது வரி ஆலோசகரை கலந்தும் ஆலோசித்து உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ற முடிவை எடுங்கள்.

இக்கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ள விரும்பினால் மின்அஞ்சல் முகவரி vlambaram@sympatico.ca

# வியாபார நிறுவனம் இலாபம் ஈட்டுவதற்கு திட்டமிடல் அவசியமா?

## வியாபார நிறுவனம் ஒன்று நிலைத்திருப்பதற்கும் இலாபம் ஈட்டுவதற்கும் நிறுவனச் சூழலும் சரியான திட்டமிடலும் அவசியமாகும்.

தமிழர்களாகிய நாம் தாய் மண்ணைவிட்டு பல்வேறு நாடுகளிலும் புலம் பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். புலம் பெயர் நாடுகளில் நம்மவர் பலர் கல்வி மான்களாகவும், பெருவர்த்தகர்களாகவும், தொழில் வழங்குனர்களாகவும் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குவது எம் எல்லோருக்கும் பெருமை சேர்க்கும் விடயம் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

கனடா நாட்டிலும் பெருமளவிலான எம்மவர்கள் பெரும் வர்த்தக நடவடிக்கைகளிலும், கைத்தொழில், மற்றும் சிறு வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு பெரும் இலாபம் ஈட்டுபவர்களாக எம்மவர்க்கு பெருமை சேர்த்து வருகின்றனர்.

இருப்பினும் சில வர்த்தக நிறுவனங்கள், சிறுமுதலீட்டாளர்கள் சரியான நிறுவனத் தந்திரோபாயங்களை கைக்கொள்ளாமை யாலும், உகந்த திட்டமிடலை மேற்கொள்ளாமையாலும் இலாபம் ஈட்டமுடியாதவர்களாக, நிலைத்திருக்க முடியாதவர்களாக, இடைநடுவில் வர்த்தக நடவடிக்கையை கைவிடுபவர்களாக அல்லது நட்டமடைபவர்களாக மாறிவிடுகின்றனர்.

ஒரு வியாபார நிறுவனம் நிலைத்திருப்பதற்கும், இலாபம் ஈட்டுவதற்கும் பல்வேறு காரணிகளின் சாதக பாதக நிலைமைகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. அந்த வகையில் நிறுவனத்தின் சூழல், மற்றும் திட்டமிடல் என்னும் விடயங்கள் மிகமுக்கியமானதாகக் காணப்படுகின்றன.

நிறுவனத்தின் சூழல் பற்றிய சரியான பார்வை இல்லாமையால் சிறு முதலீட்டாளர்கள், சிறுவர்த்தக நிறுவனத்தினர் வியாபார நடவடிக்கையில் தோல்வியைத் தழுவுகின்றனர். நிறுவனத்திற்கும் சூழலுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுவதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். நிறுவனத்தைச் சூழ்ந்துள்ள, நிறுவனத்துடன் தொடர்புடைய காரணிகள் யாவும் சூழற்காரணிகள் என்ற பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. சூழலில் ஏற்படும் மாற்றங்கள் நிறுவனத்திலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. நிறுவனத்திற்குத் தேவையான உள்ளீடுகள் சூழலில் இருந்து பெறப்படுவதுடன் நிறுவனத்தின் வெளியீடுகள் சூழலிற்கு வழங்கப்படுகின்றன. இந்த வகையில் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் நிறவனத்தின் செயற்பாட்டின் மீது தாக்கத்தினை எற்படுத்துகின்றன. உதாரணமாக மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பானது உற்பத்திச் செலவினை கூட்டி இறுதியில் வெளியீட்டின் பெறுமதியினை உயர்த்தி பொருளின் விலையினை அதி-கரிக்கச் செய்கின்றது. விலை அதிகரிப்பானது விற்பனை, இலாபம் என்பவற்றின் மீது தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. இதனால் சூழலில் எற்படும் மாற்றங்களை நன்கு விளங்கிக்கொள்வதன் மூலம் நிறுவனத்தை சரியாக வழிநடாத்தி இலாபம் ஈட்டமுடியும்.

இக்கட்டுரையினூடாக நோக்கவிருக்கும் சூழற்காரணிகளை இரண்டு வகையாக வகுக்கலாம். அதாவது நிறுவனத்துடன் நேரடியாகத் தொடர்புடைய காரணிகள், மறைமுகமாகத் தொடர்புடைய காரணிகள். நேரடியாகத் தொடர்புடைய காரணிகள் குறித்த சூழல் காரணிகள் எனவும், மறைமுகமாகத் தொடர்புடைய காரணிகள் பொதுவான சூழல் காரணிகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

உதாரணமாக வினியோகஸ்தர்கள், வாடிக்கையாளர்கள், போட்டிநிறுவனங்கள் என்பன நிறவனத்துடன் நேரடியாகத் தொடர்புபடுவதால் இவற்றை குறித்த சூழல் காரணிகளுக்குள் அடக்கலாம். நாட்டின் பொருளாதார நிலைமை, அரசியல் காரணிகள், தொழில் நுட்பக்காரணிகள், சமூகக் காரணிகள் என்பன நிறுவனத்துடன் மறைமுகமாகத் தொடர்புபடுவதால் இவற்றை பொதுவான சூழல் காரணிகள் எனும் வரையறைக்குள் அடக்கலாம். இவ்விரு காரணிகளும் பொதுவாகவே நிறுவனத்தின் செயற்பாட்டிற்கு சாதகமாகவோ அன்றி பாதகமாகவோ அமையலாம்.

உதாரணமாக வினியோகஸ்தர்கள் உள்ளீடுகளுக்கான விலையினை அதிகரிக்கும் போது உற்பத்திச் செலவு அதிகரிக்கின்றது. இதனால் நிறுவனம் பொருட்கள் சேவைக்கான விலையினை அதிகரிக்கவேண்டியிருக்கும்.

இவ்வாறு விலை அதிகரித்தால் பொருட்கள் சேவைக்கான கேள்வி பாதிப்படையும். இதனால் நிறுவனத்தின் விற்பனை, இலாபம் என்பன குறைவடையும். இது நிறுவனத்தின் வளர்ச்சியினைப்பாதிக்கும். இவ்வாறான பாதிப்பின் காரணமாக நிறுவனம் சந்தைை-யவிட்டு வெளியேறுதலுக்குக்கூட காரணமாக அமையலாம்.

மற்றொரு சந்தர்ப்பத்தில் வினியோகஸ்தர்கள் உள்ளீடுகளுக்கான விலையினைக் குறைக்கும் போது உற்பத்திச் செலவு குறைவடைகின்றது. இதனால் பொருட்கள், சேவைகளை குறைந்த விலையில் நிறுவனம் வழங்கலாம். இதனால் கேள்வி, விற்பனை, இலாபம் என்பன அதி-கரிக்கும்.

சூழற்காரணிகள் நிறுவனத்திற்கு அச்சுறுத்தலாகக் காணப்படும்போது அதனை எதிர்வு கொள்ளக்கூடிய முறையில் நிறுவனம் திட்டங்களை வகுத்தல் வேண்டும். அதேபோல் சூழல் காரணிகள் சாதகமாகக் காணப்படும் போது அதனைச் சாதகமாகப் பயன்படுத்தக் கூடியவாறு திட்டங்களை தயாரிக்கவேண்டும்.

## - ஜெயக்குமார் -

அதாவது நிறுவனம் தனக்குச் சாதகமான சூழல் காரணிகள் காணப்படும் போது அவற்றை சரியாகப் பயன்படுத்த வேண்டியதுடன், அச்சுறுத்தலாகக் காணப்படும் சூழல் காரணிகளை எதிர்வு கொள்ளக்கூடிய நிலையிலும் தயார்ப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு சாதக, பாதக சூழல் காரணிகளை ஏற்றுக்கொள்வதற்கு நிறுவனம் போதிய பலத்தினை (strengths) கொண்டிருத்தல் வேண்டும்.


சூழல் காரணி சாதகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் உற்பத்தியினை அதிகரிப்பதற்கான திட்டத்தை நிறுவனம் தயாரிக்க முற்படும். கூடுதலான உற்பத்தி அதிகரிப்பை மேற்கொள்வதற்கு போதிய பலத்தினை நிறுவனம் கொண்டுள்ளதா? என்பது பற்றி மதிப்பீடு மேற்கொள்ள வேண்டும். மதிப்பீட்டின்போது உதாரணமாக இயந்திர உபகரண அளவுகள், ஊழியர் படை என்பவற்றின் பலம், பலவீனம் என்பவை தொடர்பாக உள்ளக ஆய்வு ஒன்றின் மூலம் சரியான மதிப்பிடலை மேற்கொள்ள வேண்டும்.

சூழல் காரணிகளின் சாதகமான, அச்சுறுத்தலான தன்மைகளை ஆய்வு செய்யும் போது அது சூழல் ஆய்வு எனவும், நிறுவனத்தின் பலம், பலவீனம் என்பனபற்றி ஆய்வு செய்யும் போது அது உள்ளக ஆய்வு எனவும் அழைக்கப்படும். இவ்விரு ஆய்வுகளும் இணைந்து SWOT ஆய்வு அதாவது SWOT Analysis (Strengths, Weaknesses,Opportunities and Threats) என அழைக்கப்படுகின்றது.

நிறுவனங்கள் பொருத்தமான திட்டத்தினை தயாரிப்பதற்கு முன்பு, நிறுவனம் சூழற்காரணிகளால் எதிர்நோக்கப்படும் சாதகமான காரணிகள், அச்சுறுத்தலான காரணிகள் என்பவற்றையும், நிறுவனங்களின் பலங்கள் பலவீனங்கள் என்பவற்றையும் ஆய்வு செய்து அதனூடாக திட்டங்களை தயாரிப்பதற்கும் பலவீனங்களை கண்டறிந்து அவற்றினை நீக்குவதற்கும் மேற்படி SWOT ஆய்வு மிகமுக்கியமானதாகப்படுகின்றது.

உதாரணமாக : நிறுவனத்தின் பலம் (Strengths) எனும் போது மூலதனம், பயிற்றப்பட்ட ஊழியர்கள் பலவீனம் (Weaknesses) எனும் போது திறனற்ற

தொடர்ச்சி 34ஆம் பக்கம்



# முதுகு வலிக்கு சித்த யோகா மருத்துவம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

சென்ற இதழில் முதுகு வலிகள் பற்றியும் அதன் தன்மைகளையும் பற்றிப் பார்த்தோம். எனினும் அதன் காரணங்களையும் சரியான தீர்வுகளையும் பற்றி இங்கு ஆராய்வோம்.


முதுகு வலிக்கான காரணத்தை அறியுமுன்னர் முள்ளந்தண்டின் இடையிலுள்ள குருத்தின் (Intervertebral Disc) அமைப்பைப்பற்றி அறியவேண்டும். இது முள்ளந்தண்டு



Utanasana Flat Back

எலும்புகளுக்கு இடையில் சிறு தட்டுப் போன்ற குருத்தெலும்புகளாகும். இதன் நடுப்பகுதி கசிவுள்ள திரவம் போன்றது. அனைத்து திசைகளிலும் சமமான அழுத்தம் பரவச் செய்யக்கூடியது. சுற்றியுள்ள பகுதி இழைப்படலங்களால் ஆனது. வயதாக ஆக நடுப்பகுதியிலுள்ள கசிவுத் திரவத்தின் தன்மை குறைந்து குறிப்பிட்ட அழுத்தம் தருவதால் முதுகுவலிக்குரிய குணங்கள் ஏற்படும்.

### முகுது வலிக்கான காரணங்கள்



### குழந்தைகளுக்கு

1. முள்ளந்தண்டானது பக்கவாட்டில் வளைந்திருப்பது
2. கால்கள் சற்று வளைந்திருப்பது
3. உயிர்சத்து (Vitamin) D குறைவு படுதல்

### ஆண்களுக்கு

1. தொடர்ந்து நீண்டதூரம் வாகனம் ஓட்டுதல்
2. அதிக பாரத்தை தூக்கும் வேலைகள்
3. சரியான முறைப்படி நடக்காமை, உட்காராமை
4. போதிய உடற்பயிற்சியின்மை
5. வாயுத்தொல்லை, குளிர்ந்த உணவுகளை உண்பது
6. சிறுநீரக கற்கள் (Kidney Stone) இருத்தல்
7. உடல் உறவில் அதிகம் ஈடுபடுதல்
8. அதிக உடல் எடை

### பெண்களுக்கு


1. மாதவிடாய் காலங்களில் அதிக இரத்தம் போவதால் முகுது வலி அதிகமாகும்.
2. அதிகமான கருத்தடை மாத்திரைகள், கருவிகள் பாவிப்பது.
3. கர்ப்ப காலங்களினால் நடையில் மாற்றம்



ஏற்படுவதால் முதுகு வலி அதிகமாகும்.
4. உடல் எடை கூடுதல்

### பிற காரணங்கள்

1. பிறவியிலேயே எலும்பின் அமைப்பில் மாறுபாடு
2. முள்ளந்தண்டு எலும்பு விலகுதல், முறிதல்
3. நோய் கிருமிகளின் தாக்கம்
4. நீண்டநேரம் கடும் குளிரில் நிற்றல்
5. மன அழுத்தம்



### முகுதுவலி வராமலிருக்க கடைப்பிடிக்க வேண்டியவை

1. வாயுப்பதார்த்தங்களான வாழைக்காய், உருளைக்கிழங்கு, கடலைப்பருப்பு, அவித்த முட்டை போன்றவற்றை உணவில் விலக்க வேண்டும்.

2. சரியான வேளைக்கு உணவு உண்ண வேண்டும்.

3. குளிர்ச்சியான உணவை தவிர்க்க வேண்டும்.

4. புளிப்பு, துவர்ப்பு போன்ற சுவைகளை உணவில் குறைக்க வேண்டும். அத்துடன் கல்சியம் சத்துள்ள உணவு, கடல் உணவுகளையும் அதிகம் சேர்க்க வேண்டும்.

5. உடல் எடையை தனது வயது,



உயரத்திற்கேற்ப வைத்திருத்தல்.

6. பாரங்களை தூக்கும்போது பாதுகாப்பு விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்.

### முள்ளந்தண்டினை உறுதியாக்கும் யோகாசனங்கள்

யோகாசனங்களை எடுத்துக்கொண்டால் அவற்றுள் அநேகமானவை முள்ளந்தண்டை வலுப்பெறச் செய்யக்கூடியவை. அவற்றுள்

1. விபரீத கரணி (Adventure Pose)
2. பட்ஸிமொத்தாசனம் (Forward Bend)
3. சலபாசனம் (Locust Pose)
4. பிறையாசனம் (Star Pose)
5. சக்கராசனம் (Wheel Pose)
6. ஒட்டக ஆசனம் (Camel Pose)

போன்றவற்றை ஒரு யோகாசன நிபுணரின் உதவியுடன் முறைப்படி பழகி வரும்போது முதுகு வலியிலிருந்து நிவாரணம் பெறுவதோடு வரும் நாட்களில் இதுபோன்ற வலிகளின் கொடுமையின் தாக்கத்திற்கு ஆளாகாமல் உறுதியான உடல் வலுவுடன் வாழலாம் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

அத்துடன் வர்ம சாத்திர முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்களை பாதிக்கப்பட்ட பகுதிகளில் நன்கு ஒத்தடம் பிடித்து அதன் மேல் தேய்த்து வருவதாலும் முகுது வலிக்கு முடிவு காணலாம்.






N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
**416.289.2033** *after 7:00pm*


## MOHAN
## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



## YOGA - MEDITATION CLASSLESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham*** - செல்வ சோதி - ***416.289.2033***

# எதிர்காலத்தைத் தொலைப்பவர்கள்

## ஓடும் நீர் உறைவதில்லை 95

இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்வியல் நகர்வானது படிப்படியான முன்னேற்றத்தை அடைய வேண்டும் என்பதில் மிகவும் அக்கறை கொண்டுள்ளான். இந்த அக்கறையும் அதற்கான நடத்தைகளும் மனிதனுக்கு மனிதன் வேறுபட்டாலும் முன்னேற்றம் அவசியம் என்ற எதிர்பார்ப்பில் மனிதர்கள் அனைவரும் ஒரு பொதுமைக்குள் அடங்கிவிடுகிறார்கள். நமது ஒவ்வொரு நகர்வும் முன்னேற்றத்திற்கான நகர்வு என்ற எதிர்பார்ப்பில் நமது நாளாந்த நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டாலும் நமது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு அவை பெறுபேறுகளைத் தருகின்றனவா என ஆராயும் போது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெரும்பாலானவர்களுக்கு அந்தப் பெறுபேறுகள் சாதகமானவையாக அமைவதில்லை என்பது நடைமுறையில் நாம் அறிந்து கொள்ளக்கூடியவிடயமாக அமைகின்றது.

நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்க்கையானது சிறப்பாக அமையவேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருப்பினும் இந்தச் சிறப்புக்கான அடித்தளமாக அமைவது எது என்பதில் தெளிவற்றவர்களாகவே இருக்கின்றோம். சிறந்த வாழ்வியல் நோக்கம் முக்கியமானது எனச் சிலர் கூறுகிறார்கள். சிறந்த திட்டமிடல் அவசியம் என வேறு சிலர் கூறுகிறார்கள். இன்னொருவகையினர் திட்டமிடல் மட்டும் போதாது அதைத் தரமான முறையில் நடைமுறைப்படுத்தவேண்டும் என்கிறார்கள். இலக்கு ஒன்றை வைத்து இறுதிவரை செல்ல வேண்டும் என்பவர்கள் இன்னொருவகையினர். இவற்றையெல்லாம் நாம் உன்னிப்பாக நோக்கும் போது ஒரு சிறந்த வாழ்க்கையை நாம் மேற்கொள்வதற்கு எதிர்காலம் பற்றிய பார்வை அவசியம் என்பது வலியுறுத்தப்படுவதை அவதானிக்கலாம்.

இப்போது நமது வாழ்க்கையின் சிறப்புக்கு எதிர்காலம் பற்றிய தெளிவான பார்வை அவசியம் என்பதை மையமாக வைத்து எதிர்காலத்துக்காக வாழ்க்கையை நகர்த்த வேண்டிய தேவைப்பாடு ஒன்று உள்ளது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதாக அமைவது இயற்கையானதாக இருப்பினும் இங்கு நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் இந்த 'எதிர்காலம்' என்பது என்ன என்பது தான். இதற்கு நாம் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பனபற்றிய சிறியபார்வை ஒன்றை மேற்கொள்வோம்.

முதலில் இறந்தகாலம் என்பது பற்றிப் பார்ப்போம். நம்மால் நகர்த்தப்பட்ட காலத்தின் அளவு இறந்தகாலம் அல்லது கடந்தகாலம் அல்லது முடிந்தகாலம் எனக் கணித்துக்கொள்கிறோம். இந்தக் கால அளவு நமது உயிர்வாழ்காலப்பகுதிக்கும் முற்பட்ட காலப்பகுதியாக அமைந்துள்ளதும் கவனிக்கப்பட வேண்டியதே. இங்கே நமது வாழ்வியல் நகர்வில் நமது கடந்தகாலம் என்பது நமது பிறப்பில் இருந்து இற்றைவரை நம்மால் நகர்த்தப்பட்ட கால அளவு என்பதாகும். இந்தக் கால அளவானது நமது வாழ்க்கையில் பல்வேறு விடயங்களை நம்மீது பதிவு செய்து விடுகின்றன. வெற்றி-தோல்வி, இன்பம்-துன்பம், நட்பு-பகை, இலாபம்-நட்டம், உறவு-பிரிவு, அதிஷ்டம்-துரதிஷ்டம் எனப் பல விடயங்களின் பதிவாக இந்த இறந்தகாலம் அமைந்து விடுகின்றது. இந்தப்பதிவுகள் ஒவ்வொன்றும் இரண்டு பக்கங்களைக் கொண்டிருக்கின்றன என்பதை மிகவும் ஆணித்தரமாக நாம் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் அதாவது உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது கடந்த காலமானது உடல் முதிர்ச்சி ஒன்றைத் தவிர வேறு எதையும் நிலையானதாகக் கொடுப்பதில்லை. அதாவது ஏற்றம்-இறக்கம், இன்பம்-துன்பம், வெற்றி-தோல்வி என ஒன்றுமாறி ஒன்றாக இடம்பெறுபவையாக அமையும். எந்த ஒரு மனிதனும் பிறப்பிலிருந்து தற்போது வாழும் காலம்வரை இன்பத்தை மட்டுமே பெற்றவனாக இருப்பதில்லை. நிச்சயமாகத் துன்பத்தையும் சந்திக்கவேண்டியே இருந்திருக்கும். இங்கு மிகவும் தெளிவாக நாம் புரிந்துகொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் இந்த ஏற்றஇறக்கங்களும் சாதகமான-பாதகமான விடயங்களும், வெற்றியும்-தோல்வியும், இன்பமும்-துன்பமும் நமது வாழ்வியல் நகர்வின் அடிப்படைகளாக அமைகின்றன என்பதே.

**KG Master**-kgmaster@rogers.com

இப்போது இந்த இறந்தகாலத்தில் இடம் பெற்ற விடயங்கள், அவை நிகழ்ந்த போது இறந்த காலமாக அமைந்திருக்கவில்லை என்பதையும் நாம் மனதில் கொள்ளல் வேண்டும். இங்கே இவ்வாறு நான் கூறுவதன் நோக்கம் வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவரும் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய ஆனால் அறிவீனத்தால் அதைப்புறக்கணித்துவிடுகின்ற ஒரு காலத்தைப் பற்றிய சிறப்புத்தன்மையை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே. நமது கடந்த கால நிகழ்வுகள் பல தற்போது நமது நினைவுகளாக மாற்றப்பட்டுள்ளன. அந்த நிகழ்வுகள் நினைவுகளானதால் அவை இறந்த காலமாக வகைப்படுத்தப்பட்டுவிடுகின்றன. இப்போது நமது தற்கால நினைவுகள் அதாவது கடந்த கால நிகழ்வுகள் அவை நிகழ்ந்த போது நிகழ்காலத்தில் மட்டுமே நிகழ்ந்திருக்கும் என்பது தான் உண்மை. இதனால்தான் நமது வாழ்வியல் நகர்வில் நிகழ்கால நிகழ்வுகள் படிப்படியாக இறந்தகால நிகழ்வுகளாக்கப்பட்டுத் தற்கால நினைவுகளாகிவிடுகின்றன. அதாவது நிகழ்வுகள் அனைத்தும் நிகழ்காலத்தில் மட்டுமே இடம்பெறுகின்றன. அவ்வாறு இடம்பெறும் ஒவ்வொன்றும் நிகழ்ந்தவுடன் இறந்தகாலமாகி விடுகின்றது. நமது வாழ்வில் இந்த அமைப்புமுறையானது மிகவும் முக்கியமான தகவல் ஒன்றை நமக்கு முன்வைத்துக் கொண்டிருக்கின்றது. அது என்ன என்பதை வலியுறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அடுத்து எதிர்காலத்தை நோக்குவோம். இந்த எதிர்காலம் என்பது என்ன? உண்மையில் இது ஒரு காலமா? இறந்தகாலம் நாம் வாழ்ந்து கழித்தகாலம். நிகழ்காலம் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும்காலம். அப்படியாயின் எதிர்காலம் நாம் வாழப்போகும் காலமா? நாம் எதிர்காலத்தில் வாழ்வோம் என்பது உத்தரவாதமளிக்கப்பட்ட ஒன்றா? அல்லது எதிர்பார்ப்பா? அல்லது கற்பனையா? நாளை என்பது எதிர்காலமானதால் நாளை என்பது எப்படியானது என்பதை எப்படி நாம் தெளிவுபடுத்த முடியும். தெளிவற்ற, உத்தரவாதமளிக்கப்படாத, கற்பனையான காலமான எதிர்காலம் எமது வாழ்வில் எந்தவகையான நிகழ்வுகளையும், அதனால் விளையும் நினைவுகளையும் தரப்போகின்றது என்பது கூட நமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதல்லவா? பொருளாதாரம், திட்டமிடல், பௌதீகவிளைவுகளை எதிர்பார்ப்பாகக் கொண்ட ஒழுங்குமுறைகளுக்கு ஒரு அனுமானமான அடிப்படையில் கணிப்பிடப்படும் காலம்தான் எதிர்காலம் எனப்படுகின்றது. அதாவது இதுவரை நிகழாத நிகழ்வுகள் பற்றிய எதிர்பார்ப்பின் அடிப்படையில் அமையும் காலம் தான் எதிர்காலம்.

ஆனால் நமது வாழ்க்கை என்பது வாழ்க்கை நிகழ்ந்து கொண்டிருக்கின்ற காலத்தில் மட்டும் தான் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது என்பது தான் வாழ்வியலின் மிகவும் உன்னதமானதும் அந்தரங்கமானதுமான விடயமாகும். நாம் கணப்பொழுது கணப்பொழுதாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு உயிர்மூச்சும் நமது உண்மையான வாழ்தலை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. இப்போது நாம் உள்ளிழுத்து வெளிவிடும் மூச்சு அடுத்த மூச்சு உள்ளிழுக்கப்பட்டதும் இறந்தகாலத்துக்கு தள்ளப்பட்டுவிட்டது. அந்தக் கணப்பொழுது பின்தள்ளப்பட்டு இந்தக் கணப்பொழுதில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்தக் கணப்பொழுதும் பின்தள்ளப்பட்டு விடும். ஆனால் எதிர்காலம் என நாம் கருதும் காலத்தின் எந்தக் கணப்பொழுதையும் நாம் முன்கூட்டியே வாங்கிவிடமுடியாது. இதனால்தான் எதிர்காலம் என்பது நமது எதுவுமே இல்லாத காலம் மட்டுமே.

இப்போது நமது வாழ்வியலில் முக்கியமான ஒருவிடயத்தை அறிந்து கொள்கிறோம். நாம் ஒவ்வொரும் நிகழ்காலத்தில் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பது தான். அதாவது நமது வாழ்க்கை நிகழ்காலத்தின் சொந்தம் மட்டுமே. முன்னர் நிகழ்ந்த நிகழ்காலங்கள், இறந்தகாலங்களாகிவிட்டன. இன்று என்பது நிகழ்ந்து முடிந்ததும் 'நேற்று' என்றாகி விடுகின்றது. ஆனால் இன்று ஒரு பொழுதும் நாளையாக முடியாது. அதுமட்டுமல்ல நேற்றாகிவிட்ட இன்று கூட, மீண்டும் இன்றாகவும் முடியாது. நாளையாகவும் முடியாது. இதனால் எப்பொழுதும் நமது வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்துபவை இறந்தகாலமும் நிகழ்காலமும் மட்டுமே.

நாளை என்பதும், எதிர்காலம் என்பதும் கற்பனையான காலம் வாழ்வியலில் நாளை என்று ஒன்று இல்லை. அரசியல், சமூக பொருளாதாரத் திட்டமிடலுக்காகக் கற்பனையில் அளவிடப்படும் காலம் மட்டுமே எதிர்காலம். வாழ்வியலில் எதிர்காலம் என்று ஒன்று இல்லை. இதை நாம் தெளிவாகப் புரிந்து கொண்டால் அதாவது நமது வாழ்க்கையில் இரண்டு காலங்கள் மட்டும் உள்ளன. ஒன்று நிகழ்கின்ற காலம் மற்றையது நிகழ்ந்து முடிந்த காலம். இங்கே ஒரு முக்கியமான வாழ்வியல் உண்மை ஒன்று வெளிப்படுகின்றது. அதாவது வாழ்வது தான் வாழ்க்கை. வாழ்ந்ததுமல்ல வாழப்போவது மல்ல. ஏனெனில் நமது நிகழ்கால நிகழ்வுகளின் தொடர்ச்சியே நமது வாழ்வியல் நகர்வாக அமைந்து விடுகின்றது.

இப்போது எதிர்காலம் என்று ஒன்று இல்லை என்பதற்கான விளக்கத்தைப் பார்ப்போம். நாம் எதிர்காலம் எனக்கணிப்பவை எல்லாம் நிகழ்காலத்தின் தொடர்ச்சி மட்டுமே. நாளை என்பது இன்றின் தொடர்ச்சி ஆகி மீண்டும் அது இன்றாகி விடுகின்றது. இதனால் தான் எதிர்கால விளைவுகள் என நாம் எதிர்பார்ப்பவை அனைத்தும் நிகழ்காலத்தின் நிகழ்வுகளாக மட்டுமே அமையமுடியும். இந்த சிறப்பான உண்மையை நாம் புரிந்ததும் எதிர்காலத்தை நாம் எவ்வாறு எமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளலாம் என்பது புலனாகிவிடும்.

எதிர்காலத்தைத் தமக்குச் சொந்தமாக்குபவர்கள் நிகழ்காலத்தைச் சொந்தமாக வைத்திருப்பவர்கள் மட்டுமே. ஏனெனில் எதிர்காலம் என்பது நிகழ்காலத்தின்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு; வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*நன்றியுடன் KG Master*

அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹாராஜியின் உரைகள்

On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

On TV

Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219



# ரொரன்ரோ நகரசபை எல்லைக்குட்பட்ட தேவைகள், பிரச்சனைகளுக்கு இலவசமாக தீர்வு தேவையா? அழையுங்கள் 311 தொலைபேசி இலக்கம்

## கனடிய தகவல் தொடர் 118

ஒன்றிணைக்கப்பட்ட ரொரன்ரோ நகர எல்லையினுள்

1. வசிப்பவர்கள்
2. வர்த்தகம் செய்பவர்கள் மற்றும் வர்த்தகம் ஆரம்பிக்க விரும்புவர்கள்
3. நகரத்திற்கு புதிதாக வருகை தந்தவர்கள்
4. நகரம் தொடர்பான தகவல்களை நகரத்திற்கு வெளியே இருந்து தொலைபேசி யினூடாக அழைத்து அறியவிரும்புவர்கள் (நகரத்திற்கு வெளியே இருந்து அறிய விரும்புவர்கள் அழைக்க வேண்டியது 311 இலக்கம் அல்ல (416) - 392 - 2489 ஆகும்).




போன்ற யாவரும் தங்களின் தேவைகள் பிரச்சனைகளுக்கு நகரசபை அதிகார வட்டத்தினுள் தீர்வு காண வேண்டுமாயின் அழைக்க வேண்டிய **ஒரே தொலைபேசி இலக்கம் - 311 என்பதாகும்.** மிக விரைவான பதில்கள் துரித கதியில் வழிகாட்டல்கள் யாவும் அற்புதமான முறையில் கிடைக்கும் என்பதனை அறிந்து கொண்டீர்களா?

சுமார் நூறு தொடர்பு நிலையங்கள் தற்போது நகரில் இயங்கிகொண்டுள்ளன.

1. ஒரு கிழமைக்கு சராசரி 48,000 அழைப்புக்களுக்கு தற்போது இந்நிலையங்கள் பதில் வழங்கிகொண்டு செயல்படுகின்றன.

அழைப்புக்கள் சம்பாஷணைகள் யாவும் ஒலிப்பதிவில் போவதால் அழைப்பு இலக்கம் - (Reference number) ஒன்று தருவார்கள். அதே இலக்கத்தினை குறிப்பிட்டு தங்கள் அழைப்பினை தொடர்ந்தும் இன்னொரு நாளில் தொடரலாம்.

2. இச்சேவை என்பது நகரசபையினால் இலவசமாகவே வழங்கப்படுகின்றது. கட்டணம் எதுவும் இவ் சேவை வழங்கும் இடத்தில் சேவைகளுக்காக அறவிடப்படுவதில்லை.

3. மொழி என்பது ஒரு பிரச்சனையாக எவருக்கும் இருக்கமாட்டாது. பல்லின மக்கள் வசிக்கும் ரொறொன்ரோ நகரில் 180 மொழிகளில் சேவை வழங்குவார்கள். ஆங்கிலமொழியில் திறமையான பரிட்சயம் இல்லாத நம்மவர்கள் "ரமிழ்" (Tamil) என குறிப்பிட்டால் போதும். தமிழ் மொழியில் சேவை வழங்கும் உத்தியோகத்திற்கு இணைப்பு தொடர்புபடுத்தப்படும்.

ரொறொன்ரோ நகரசபையின் அதிகாரத்தினுள் உள்ள சேவைகளாக இருத்தல் வேண்டும். சில நேரங்களில் கனடா மத்திய அரசு, மாகாண அரசின் அதிகார எல்லைக்குள் உட்பட்ட சேவையாக இருந்தால் அந்தந்த பகுதிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு ஆலோசனை வழங்கலாம். ஆனால் ரொறொன்ரோ நகரசபையின் அதிகார வட்டத்தினுள் உள்ள பிரச்சனைகள் தேவைகளாக இருந்தால் அதனை தீர்ப்பதற்குரிய முழுமையான வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் இவ் அழைப்பின் போது கிடைக்கும்.

உதாரணமாக பொதுவாக ரொறொன்ரோவில் வசிக்கும் மக்களுக்கு பின்வரும் கேள்விகள் எழலாம்.

1. எங்கள் பகுதியில் நாம் கட்டி வைக்கும் குப்பைகள், பொருட்கள் போன்றவற்றினை எப்போது எடுத்துச் செல்வார்கள்?
வெளியே வீச என வைத்த கட்டில், மெத்தை, கழியலறை உபகரணங்களை எதற்காக வெளியே வைத்தபோதும் எடுத்துச் செல்லப்படவில்லை.?

வெளியே வைத்த உபயோகமற்ற குளிர்சாதன பெட்டி, அடுப்பு, போன்றவற்றினை யார் வந்து எடுத்துச் செல்வார்கள்?

உபயோகமற்று குப்பையில் வீசும் உபகரணங்களை எந்த விதிகளின் அடிப்படையில் ரொறொன்ரோ நகரசபை எடுப்பது வழமையாகும்?

2. ரொறொன்ரோவின் தொடர்மாடிகளில் வாடகைக்கு குடியிருப்பவர்களின் தேவைகள் சரியாக நிறைவேற்றப்பட வில்லையெனில் அதனை எங்கு முறைப்பாடு செய்து நடவடிக்கை எடுப்பது?

3. ரொறொன்ரோ நகர சபை அதிகாரத்தினுள் இயங்கும் அம்புலன்ஸ், பொலிஸ், தீயணைப்பு படை பிரிவுகளின் சேவையில் அதாவது சந்தேகங்கள் முரண்பாடுகள் என வந்தால் அதனை எப்படி கையாள்வது?

4. தங்களின் வீடு என்ற ஒரு சொத்துக்காக செலுத்தும் நகரசபையின் வரியில் (Property Tax) நகரசபை செய்த மதிப்பீட்டில் சந்தேகமாய் உள்ளது. இதனால் அதிக பணம் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளேன் போல் தெரிகின்றது. இதற்கு எப்படி தீர்வு காணலாம்?

5. அடுத்தவர் வளர்க்கும் நாய் ஒன்று தீடீர் என கடித்து விட்டால் எங்கே முறைப்பாடு செய்து? எப்படி நட்டஈடு பெறுவது?

தங்கள் வீடுகளுக்குள் சில இடங்களில் பிராணிகள் மிருகங்கள் உள்ளே வந்து விட்டால் அதனை அகற்ற முடியாத நிலமை ஏற்பட்டால் அடுத்து என்ன செய்வது?

பக்கத்து வீட்டு நாய் அடிக்கடி சத்தம் போட்டு குரைத்து நிம்மதியினை குழப்பினால் எங்கே முறைப்பாடு செய்வது?

6. ரொறொன்ரோ நகர எல்லைக்குள் வர்த்தகம் தொழில் செய்ய விரும்புவோர் அதற்குரிய அனுமதிப்பத்திரத்தை எங்கே? எப்படி பெறுவது?

7. நகரசபையினால் நடைமுறைப்படுத்தும் குழந்தைகள் பராமரிக்கும் நிலயங்களில் சேவைகளை எப்படி? எங்கே பெறுவது?

8. நகரசபையின் நீர் குழாய்களின் (City's sewer system) ஏற்படும் தாக்கங்கள் காரணமாக தங்கள் வீட்டு நீர் குழாய்களில் ஏதாவது வெடிப்புக்களை உருவாக்கி அது பெரும் பாதிப்பினை உருவாக்கினால் நகரசபையின் உதவியுடன் எவ்வாறு அதனை நிவர்த்தி செய்வது?

9. குறிப்பிட்ட துறைகளில் திறமையுள்ளவர்கள் உட்பட ரொறொன்ரோவில் வசிப்பவர்கள் பொதுவாக தொழில் ஒன்றினை தேடி தமக்கு ஒருவர் பெற்று கொள்ள விரும்பினால் அதனை எப்படி பெற்று கொள்வது?

10 வருமானம் குறைந்தவர்கள் நகரசபையின் உதவியுடன் விலை மலிவான குடியிருப்புக்களை எங்கே தேடி எப்படி விண்ணப்பித்து பெற்றுக்கொள்வது?

வீடுகளில் ஆண்களினால் துன்புறுத்தப்படும் பெண்கள், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட நிலையில் துன்புறுத்தப்படும் பிள்ளைகள் புகலிட, வதிவிடம் எங்கே? எப்படி? தேடி பெறுவது?

11. தங்கள் வீட்டு எல்லைகளில் வேலி போடும் போது (Create the line of fence) பக்கத்து வீட்டுகாரனுடன் ஒரு உடன் படிக்கைக்கு வரமுடியவில்லையானால் அதனை எப்படி தீர்ப்பது?

12. ரொறொன்ரோ நகர எல்லைக்குள் இயங்கும் நூலகங்கள் தொடர்பான தகவல்கள்?

13. நகர சபையினால் வழங்கப்படும் முதியோருக்கான சேவைகளை எங்கே? எப்படி பெறலாம்?

15. ரொறொன்ரோ நகரத்திற்கு உல்லாச பிரயாணியாக வருகை தந்தவர் தேவையான தகவல்களை எப்படி பெறுவது? எங்கேயெல்லாம் சுற்றி பார்க்கலாம்? என்ற விபரங்களை வழங்கும் தகவல் இடம் எது?

16. தங்கள் வீட்டு வளவுகளில் மரங்கள் ஏதாவது நாட்ட விரும்பினால் சில இடங்களில் நகரசபையே அதனை இலவசமாக செய்துவிடும். வீட்டின் முன்னால் உள்ள மரங்களை அகற்ற வேண்டுமானாலும் அது நகரசபையின் எல்லைக்குள் இருந்து அதில் தாங்கள் அவர்களின் அனுமதியின்றி கை வைத்தால் நட்டஈடு கொடுக்க வேண்டி வரும்

இத்தகைய விடயங்களில் எழும் கேள்விகளுக்கு எங்கே எப்படி விடை தேடுவது?

ரொறொன்ரோ போக்குவரத்து சேவை தொடர்பான தகவல்களை எங்கே எப்படி பெறுவது?

மேற்குறிப்பிட்டவை உதாரணத்திற்காக ஒரு குறிப்பிட்ட கேள்விகள் மட்டுமே (Sample Questions) இப்படி பல ஆயிரக்கணக்கான கேள்விகள் எழலாம்.

இயன்றவரை சரியாக பதில்களும் வழிகாட்டல்களும் வழங்க என நகரசபை பல மில்லியன் டொலர்கள் செலவில் தகவல் பிரிவினை ஏற்படுத்தியுள்ளது. இலகுவான முறையில் தகவல்களை பெற்று ஒவ்வொருவருக்கும் உள்ள தேவைகள், பிரச்சனைகளுக்கு இலகுவாக தீர்வு காணுங்கள். **அழைக்க வேண்டியது இலகுவான ஒரு தொலை பேசி இலக்கம் - 311**

***பின் குறிப்பு***

*கனடாவின் ஏனைய நகர சபைகளிடம் இத்தகைய சேவைகள் இருக்கலாம். அதற்கு அந்தந்த நகரசபை பிரிவுகளுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.*



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

REAL ESTATE
வகுப்புகள்
ரொறொன்ரோவில் இலவச ஆதனவியல் (Real Estate) வகுப்பு நடைபெறுகின்றது.
தொடர்புகளுக்கு: Vanessa - 416.321.6969



# சினிமா விமர்சனம் - ஆயிரத்தில் ஒருவன்

நடிப்பு: கார்த்தி, ரீமாசென், ஆண்ட்ரியா, பார்த்திபன், இசை: ஜிவி பிரகாஷ், ஒளிப்பதிவு: ராம்ஜி, இயக்கம்: செல்வராகவன், தயாரிப்பு: ரவீந்திரன்

பலவிதங்களில் இந்தப் புதிய 'ஆயிரத்தில் ஒருவனை' தமிழுக்கு புதுசு எனலாம். அடிவாங்கி, தோல்வியடைந்து, ஆற்றாமை உணர்வுகளால் அடிக்கடி அழும் எதார்த்த நாயகன் வரும் முதல் தமிழ் படம், யதார்த்தத்துடன் மாந்திரீகங்களும் இணைந்த முதல் தமிழ் மாய யாதார்த்தப் படம், எல்லாவற்றுக்கும் மேலாக தமிழீழ இன அழிப்பை இந்திய அரசியல் பின்புலத்தில் விசாரிக்கும் முதல் தமிழ் படம். தமிழில் இதுவரை இப்படியொரு படம் வந்ததில்லை என்று உறுதியாகச் சொல்லலாம்.

கதை இதுதான்: 1279இல் பாண்டியர்களுக்கு எதிரான போரில் சோழர்கள் தோற்கடிக்கப்படுவதுடன் சோழப் பேரரசு வீழ்கிறது. அப்போது சோழ மன்னன், தனது வம்சம் அழியாமல் இருக்க தன் வாரிசையும் பாண்டியர்களின் குலதெய்வச் சிலையையும் ராஜகுருவிடம் ஒப்படைத்து, அவர்களைத் தப்பிக்க வைக்கிறான். வாரிசை கண்காணா இடத்தில் பாதுகாப்பாய் வளர்க்குமாறு அரச குரு உள்ளிட்ட ஒரு படையினரிடம் சொல்கிறான். அந்த குழுவினர், சோழ மன்னனின் வாரிசைத் தேடி தங்களை பின்தொடர்ந்து வருபவர்களை தடுத்து அழிக்கும் வண்ணம் பல மாந்திரிக பொறிகளை ஏற்படுத்துகின்றனர். அது அவர்களுக்கு கை கொடுக்கவும் செய்கிறது. அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று எட்டு நூற்றாண்டுகளாகக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. அவர்களைத் தேடி வந்தவர்களும் திரும்பவே இல்லை. கடைசியாக பண்டைய சோழர்கள் இருந்த இடத்தைத் தேடிச் செல்லும் அகழ்வாராய்ச்சியாளர் பிரதாப் போத்தனையும் காணவில்லை. அவரைத் தேடும் குழுவின் தலைமையாய் ரீமாசென் பலத்த




- பிலிம் நியூஸ் கிருஷ்ணன் -

பாதுகாப்போடு கிளம்புகிறார். கூடவே பிரதாப் போத்தனின் மகள் ஆண்ட்ரியாவையும் (அவரும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையிலிருக்கிறார்) அழைத்துச் செல்கிறார். வியட்நாம் அருகே இருக்கும் ஒரு இடத்திற்கு கப்பலில் செல்லும் அவர்களுக்கு உதவியாக கார்த்தி தலைமையில-ான கோஷ்டி வருகிறது. கப்பலிலிருந்து மாறி, இவர்கள் செல்லும் படகு ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் படகோட்டிகள் எத்தனை கொடுத்தாலும் இதற்கு மேல் வரமுடியாது என்று போய்விட, இவர்களே படகைச் செலுத்தி கரை நோக்கி செல்கிறார்கள். கரையை அடையுமுன்னே, கடலிலிருந்து வரும் ஒரு ஐந்து இவர்களை சரமாரியாகத் தாக்க, பலர் மடிந்து விழ.. போகுமிடத்தின் விபரீதம் புரிய ஆரம்பிக்கிறது. ஓலைச் சுவடியின் செய்தி மூலம், அந்த இடத்தை அடையும் முன் இதுபோன்ற ஏழு தடங்கல்களை இவர்கள் கடக்க வேண்டும் என்றறிகிறார் ஆண்ட்ரியா. பலவித சிக்கல்களுக்குப் பிறகு, கடந்து சோழர்கள் இருந்த இடத்தை கார்த்தி, ரீமா, ஆண்ட்ரியா குழுவினர் அடைகிறார்கள்.

அங்கே சோழர்களின் கடைசி ராஜா பார்த்திபனையும் சோழர்களையும் காண்கிறார்கள். நரபலியை நம்பும் காட்டுமிராண்டிக் கூட்டமாக அவர்கள் வாழ்கிறார்கள். பார்த்தீபனை தனது கவர்ச்சியைக் காட்டி மயக்கி, தானே சோழர்களுக்காக தூது சொல்ல வந்த பெண் என்று நம்ப வைக்கிறார் ரீமாசென். பின்னர்தான், அவள் பாண்டிய மன்னன் வாரிசு என்றும், சோழர்கள் வசமிருக்கும் பாண்டியர்களின் குல தெய்வச் சிலையை மீட்டு, சோழர்களை பழிவாங்க வந்த வேடதாரி என்றும் சோழ மன்னனின் வாரிசுக்கு தெரிய வருகிறது. மீண்டும் பாண்டியர்களுடன் போரிடுகிறார்கள் சோழர்கள். போரின் முடிவில் சோழர்கள் பெரும்பாலானோர் கொல்லப்பட, எஞ்சியிருப்போர் சிறைப்பிடிக்கப்படுகின்றனர். அவர்களை வன்புணர்வுக்கு உள்ளாக்கி சிதைக்கிறது ரீமாவின் கூட்டம். சோழ மன்னன் தன் இயலாமையை எண்ணி வேதனைபட்டு உயிர் விடுகிறார். அந்த கொடுமைகளை பார்த்துக்கொண்டு இருக்கும் இளவரசன் தப்பித்து ஓட, அவனைப் பின்தொடரும் கார்த்தி, இளவரசனுக்குத் துணையாய் காட்டுக்குள் செல்கிறார். சோழன் பயணம் தொடர்வதாக படத்தை முடிக்கிறார்கள்.

பழம்சோழர்கள் தங்கள் பதுங்கிடம் நோக்கிய பாதையில் அமைத்துள்ள பொறிகள் கவித்துவம் மிக்க காட்சிகள். கடல், கிராமம், பாம்பு, புதைமணல், பசி, தாகம், படைவீரர் எனும் ஏழு மரணப்பொறிகள் குறியீட்டுப் பொருளில் மனித மனத்தின் பல்வேறு அடுக்குகள் தாம். இதைப் போன்றே மாந்திரிகம் சம்பந்தப்பட்ட அனைத்துக் காட்சிகளும் மிக கவித்துவமானவை. 'கிளாடியேட்டர்' திரைப்படத்தை நினைவுறுத்தும் பொது அரங்க கள மோதல் காட்சி ஒன்று வருகிறது. சோழபழங்குடி ராஜாங்கத்தில் அடிமை-கள் பொதுமக்கள் முன்னிலையில் திறந்து விடப்பட்டு, ஒரு ராட்சச உருவத்தினால் சங்கிலியில் பிணைக்கப்பட்ட இரும்பு குண்டு வீசி அடித்து கொல்லப்படுகிறார்கள். அங்கு பயந்து நடுங்கும் முத்துவின் மீது மூத்திரம் பீய்ச்சி அடித்து ஒரு சிறுவன் அசிங்கப்படுத்துகிறான். அஞ்சாமல் போரிட தூண்டுகிறான். அப்போது சட்டென்று முத்துவின் பிரக்ஞையில் பார்வையாளர்கள், அரங்கு யாவும் மறைகிறது. காலம் மிக மெதுவாக நகர்கிறது. தன் மீது வீசப்படும் குண்டை சமாளித்து தப்ப அவனுக்கு ஏகப்பட்ட அவகாசம் கிடைக்கிறது. ராட்சத உருவத்தை எளிதில் வீழ்த்துகிறான். பிறகு உடனே பழைய பிரக்ஞை மீள்கிறது, கூடவே அவனை முன்னர் அச்சுறுத்திய அனைத்தும்: அதே பார்வையாளர்கள், கரவொலி, கூச்சல், ரத்தம், நிணம், கோரம். மனவியல் ஆய்வாளர்கள் ஆபத்தின் போது காலம் மிக மெதுவாக இயங்கும் என்கிறார்கள். ஒரு விபத்தில் நீங்கள் தூக்கி வீசப்படும் போது அந்த சில நொடிகளை காற்றில் பறப்பது அரைமணி போல் துல்லியமாக உணரக்கூடும். பொதுவாக விளையாட்டில் சாதனைகள் காலம் உறையும் மனநிலையில் தான் செய்யப்படுகின்றன. ஆபத்தின் உச்சத்தில் முத்துவின் ஆழ்மனம் சட்டென்று தூண்டப்பெற்று, தற்காப்பு நடவடிக்கையாக காலத்தை மிக மெதுவாக பார்க்கத் தொடங்குகிறான். எதிரியை விஞ்ச இந்த அவகாசம் உதவுகிறது. மனித மனம் குறித்த செல்வராகவனின் இந்த அவதானிப்பு மிக சுவாரஸ்யமானது.

இறுதி கட்டம் தாய்மண்னை இழக்கும் தமிழ்மனம் பற்றியது. இது இலங்கைப் போர் குறித்த ஒரு உருவகக் கதை என்றுகூடச் சொல்லலாம். படம் நம்மை ஆழமாக சோகத்தில் ஆழ்த்துவது இதனாலே. வரலாற்று உண்மையை உணர்த்துவதற்காக திரைக்கதையில் பல்வேறு பொறிகளை செல்வராகவன் சற்று வெளிப்படையாகவே வைத்திருக்கிறார். தஞ்சை உள்ளிட்ட பகுதிகளை ஆண்ட சோழரின் மொழி ஈழத்தமிழை ஒத்துள்ளது. அது மட்டுமல்ல சோழரை தாக்கி அழிக்க இந்திய ராணுவ படையினர் வியட்நாம் காடுகளுக்கு வான்வழி வந்து இறங்குகிறார்கள். அவர்களுடன் ஒரு மத்திய மந்திரி வேறு துணை வருகிறார். இவர்கள் எல்லோரும் பாண்டிய வம்சாவழியினர், நூற்றாண்டுகளுக்கு முந்திய வரலாற்று கோபம் மாறாதவர்கள். இந்த போரில் சோழர்களின் இனம் ஏறத்தாழ அழித்தொழிக்கப்படுவதற்கு 'உள்ளே' இருப்பவர்களின் துரோகம் ஒரு முக்கிய காரணமாக அமைகிறது. இதில் ரெட்டை வேடதாரி தி.மு.க தலைமை என்பதும், மத்திய மந்திரி காங்கிரசின் உருவகம் என்பதும் வெளிப்படையானவை. மேலும் குறிப்பாக ராணுவத்தினரால் சோழப்பெண்கள் வன்புணரப்படும் காட்சிகள், ஈழ மண்ணில் இந்திய ராணுவத்தின் துணையுடன் நடந்த எண்ணற்ற வன்கொடுமைகளை சொல்ல விழைகிறது! அடுத்து கவனிக்க வேண்டியது முத்து ஒரு தீவிர எம்.ஜி.ஆர் ரசிகன் என்பது. அவனது ஆரம்ப காட்சிகளுக்கு பல எம்.ஜி.ஆர் பாடல்கள் பின்னணி ஆகின்றன. உடம்பில் அவர் பெயரை பச்சை குத்தி உள்ளான். எம்.ஜி.ஆருக்கும் ஈழ ஆதரவுக்கு உள்ள தொடர்பு குறித்து விவரிக்க வேண்டியதில்லை. சோழகுலத்தின் கடைசி இளங்குருத்தை முத்து காப்பாற்றி கொண்டு செல்லும் இறுதிக் காட்சி, இவ்வரலாறு தொடரும் என்பதான இயக்குனரின் அறிவிப்பும் ஏதோ ஒரு ரகசிய தகவலை நம்முடன் பரிமாறுகின்றன. 'ஆயிரத்தில் ஒருவனில்', இயக்குநர் செல்வாராகவன் ஒரு நம்பிக்கை சுடரை பொத்தி கொண்டுவந்து கைமாற்றுகிறார். சின்னச் சின்ன விடயங்கள், காட்சிகளின் அழகுக்காக பெரிய அளவு மெனக்கெட்டிருக்கிறார்.

தொடர்ச்சி 25ஆம் பக்கம்


## S.T Income Tax Services

Personal | Business | Small and Large Corporation | Truck Drivers | Rental Income Tax Returns | GST, PST Returns | Business Registration |

*Registered E-Filer*

***Over 17 years Canadian Experience***

Please contact us before you file your return



Theva

தனிப்பட்ட அல்லது வியாபாரத்துக்குரிய வரிக்கணக்கை சரியான முறையில் சட்டவிதிகளுக்கமைய பூர்த்தி செய்து மிகக் கூடிய (Refund) மீளப்பணத்தை பெற்றுக்கொள்ள 17 வருடங்கள் கனேடிய அனுபவமுள்ள என்னைத் தொடர்பு கொள்ளுங்கள். E - File செய்வதன் மூலம் 14 நாட்களுக்குள் Refund ஐப்பெற்றுக் கொள்ளலாம்.

**Tax Return** from **$20**

**Tel:** (416) 671 3789
**Fax:** (905) 828 6002 **Email:** theva57@sympatico.ca

**Scarborough:** G.T.A Square, 5215 Finch Ave. E. (Middlefield/ Finch Ave E)
**Etobicoke:** 900 Albion Road (Albion/Islington)
**Mississauga:** 3206 Respond Road (Winston Churchill/Eglinton West)

AUTHORIZED IRS e-file PROVIDER

# மாறுகின்ற அல்லது...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒப்பிடும்போது குறைவாகவே காணப்படும் என்பது உண்மையானது.

'மன நிம்மதியே மேல்' எனவே இதனை ஐந்து வருடக் கடனிலும் பெறமுடியும். ஆனால்.... ஐந்து வருட முடிவில் நிச்சயமாக வட்டிவீதம், மிக அதிகமாகவே காணப்படும். அப்பொழுது கடனை மீள்ப்பிக்கும் போது (Renewal) அதிக பணம் செலுத்த வேண்டி வரலாம். (வட்டிவீதம் அதிகமாக இருக்கலாம்)



**இதனை எவ்வாறு வேறுவழியில் சமாளிக்கலாம்?**

ஒரு வருட கடனைப் பெறுவதன் மூலம். இன்றைய காலகட்டத்தில் ஒரு வருட கடனும் ஓரளவு சிறந்ததாக கொள்ளலாம்?

ஒரு வருட கடன் 1.99% இற்கு பெறக்கூடியதாக உள்ளது. ஐந்து வருடம் 5.3% ஆகக் காணப்படுகின்றது.

கீழுள்ள நிலைமையை பார்ப்போம்.

2009 ஆண்டின் ஆரம்பத்தில் ஆதன வியாபாரம் மிகவும் இறுக்கமான நிலையிலும் கனடிய பொருளாதாரம் தேக்கத்தில் (Recession) இருந்தபோது, மாறுகின்ற வட்டிவீதம் முதன்மை வட்டி வீதத்துடன் 1% மேலதிகமாக நிதி நிறுவனங்களால் அறவிடப்பட்டது. (VRM = Prime rate + 1%) (Variable rate mortgage = VRM)

ஆனால் இன்று Variable Mortgage முதன்மை வட்டி வீதத்தை (Prime rate) விட 0.3% வரை குறைவாகவே பெறக்கூடியதாக உள்ளது. ஏற்கனவே இருக்கும் அடமானக் கடனை இல்லாமல் முறித்து (Break) புதிய கடனைப்பெற்றால் 1% இற்கு மேலான கழிவைப் பெறலாம்.

இதற்குரிய தண்டமாக (Penality) மூன்று மாத வட்டி மட்டும் செலுத்த வேண்டும் என்பது அனேகமான பெரிய நிதி நிறுவனங்களின் சட்டம். இதே நேரத்தில், Closed Mortgage ஐ Break பண்ணுவது என்றால் மூன்று மாத வட்டி அல்லது எஞ்சியுள்ள முழுக்காலத்திற்குமான வட்டி வித்தியாசத்தை செலுத்தவேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இன்றைய காலகட்டத்தில், ஏற்கனவே ஐந்து வருடத்திற்கு பெற்ற முழு கடனை (Closed Mortgage) இல்லாமல் செய்வதற்கு, மிகப்பெரிய தண்டத்தை செலுத்துவதனை காணக்கூடியதாக உள்ளது.

தனிப்பட்டவர்களின் நிலைமைக்கேற்ப, தகுந்த அடமானக்கடன் பெற்றுக் கொடுப்பவரின் ஆலோசனையை பெற்று கடனைப்பெறுங்கள்.

குறிப்பு -

கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் - 0.25%
முதன்மை வட்டிவீதம் - 2.25%
மாறுகின்ற வட்டிவீதம் - முதன்மை வட்டிவீதம் - (0.2 அல்லது 0.3)% = (1.95% - 2.15%)
ஐந்து வருட வட்டிவீதம் - (3.75% - 3.99%)
Source:canadamortgage.com

# அடுத்து அசத்த...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

மூன்றாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் வெற்றியீட்டியதன் மூலம் அவுஸ்திரேலியா தொடரைக் கைப்பற்றியது. அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட் ஓவல் மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இந்தப் போட்டி நடைபெற்றது. நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி, களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் ஆறு விக்கட் இழப்பிற்கு 286 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில், ஷோன் மார்ஷ் 83 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் 80 ஓட்டங்களையும், மைக்கல் ஹூசீ 49 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில், உமர் குல் மற்றும் நவிட் உல் ஹசன் ஆகியோர் தலா இரண்டு விக்கட்டுகளை வீழ்த்தினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 47.4 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 246 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. இதில், உமர் அக்மால் 59 ஓட்டங்களையும், சஹிட் அப்ரிடி 40 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் ரயன் ஹரிஸ் 43 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளையும், க்ளின்ட் மெக்கே மூன்று விக்கட்டுகளையும் வீழ்த்தியுள்ளனர்.

மிக அபாரமான பந்து வீச்சுத் திறமையை வெளிப்படுத்தி பாகிஸ்தான் வீரர்களை திணடித் ஹரிஸ் போட்டியின் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் அவுஸ்திரேலியா மூன்றுக்கு பூஜ்ஜியம் என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

# கனடாவின் கதை

03ஆம் பக்கத்தொடர்ச்சி

அதிகாரி நியமிக்கப்பட்டார். இவரே ஜீன் ரலோன் என்பவர் இவருக்கும் தேசாதிபதிக்குமிடையே நிர்வாகத்தில் பிரச்சனைகள் தோன்றின. ஜீன்ரலோன், விவசாயம், குடிவரவு, வியாபாரம், புதிய இடங்களின் ஆய்வு முதலியனவற்றை நிர்பந்திக்கப்பட்டனர். இவர் உள்நாடுகளுக்குச் சென்று ஆராயும் படி பல குழுக்களை அனுப்பினார். இவ்வாறான ஆய்வுக்குழுக்களை லூயி ஜொலியற் ஜாக்குஸ் மார்க்குவெற் பாதிரியார், சியோர்லாசலே ஆகியோர் மேற்கொண்டனர். 1682ஆம் ஆண்டில்



படம்1 சாமுவேல் டி சாம்ளெயினால் வரையப்பட்ட புதிய பிரான்சின் வரைபடம்

ஊக்குவித்தார். 1672 இல் லூயி டி புறொன் ரினெக் என்பவர் தேசாதிபதியாக வந்தார். இவர் கற்றார்றாக்கி (தற்போதைய கிங்ஸ்ரனுக்கு அருகில்) என்ற இடத்தில் கோட்டை ஒன்றைக் கட்டினார். இதனால் இறக்குவாவினர் சமாதானத்துக்கு தேசாதிபதி புறொன்ரெனக்கும் உயர் அதிகாரி ஜக்குஸ் டுச்செஸ்னோவுக்குமிடையில் பாரதூரமான பிரச்சனைகள் தலையெடுத்ததால் அரசன் இருவரையும் பிரான்சுக்கு மீளக் கூப்பிடுவித்தான்.

# எதிர்காலத்தைத்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

தொடர்ச்சியென்பதால் நிகழ்காலத்தைச் சொந்தமாக்குவதன் மூலமே அதன் தொடர்ச்சியையும் நாம் சொந்தமாக்கமுடியும். இங்கே சொந்தம் என்பது வாழ்க்கையை ஒரு வரப்பிரசாதமாகக் கருதி உண்மையில் மகிழ்வுடன் வாழ்பவர்கள். நாளை நமக்கு மகிழ்ச்சியாக அமையவேண்டும் என நாம் எதிர்பார்ப்பது நமக்குச் சாதகமாக அமைவதற்கு நமக்கு இருக்கும் ஒரே ஒருவாய்ப்பு இன்றை, இப்பொழுதை, இந்தக்கணத்தை நாம் மகிழ்வாக வாழ்வதற்குப் பயன்படுத்துவது தான். ஏனெனில் தரப்பட்ட இந்தக் கணத்தைத்தவிர வேறு எதுவும் எமக்கு இல்லை. தரப்படுகின்ற ஒவ்வொருகணமும், தான் நாம் வாழ்வதற்கான அங்கீகாரத்தைத் தருகின்றது.

தரப்பட்ட ஒவ்வொருகணமும் வாழ்வதற்கான வாய்ப்பைத் தருவதால் நிகழ்காலத்தில் வாழ்பவர்களுக்கே இந்த வாழ்க்கை அளப்பரிய வரப்பிரசாதமாக அமைகின்றது. அதுமட்டுமல்ல நிகழ்காலத்தின் தொடர்ச்சியாக அமையும் எதிர்காலம் கூட இவர்களால் சொந்தமாக்கப்படுகின்றது. ஆனால் அதிபெரும்பான்மையானவர்கள் இந்த நிகழ்காலத்தைத் தொலைத்து விடுகிறார்கள். அதாவது வாழ்வதற்கான வாய்ப்பைத்தரும் இந்தக் கணப்பொழுதை அந்தக் கணப்பொழுதில் வாழப்பயன்படுத்தாமல் நிகழ்வுகளாகிப் பின் நினைவுகளாகிவிட்ட எதிர்மறையான விடயங்களை இறுகக் கட்டிப்பிடித்துக் கொண்டு நிகழ்காலத்தை நிர்மூலமாக்கி விடுகிறார்கள். இவர்கள் நிகழ்ந்து முடிந்த ஒவ்வொன்றிலும் இரண்டு பக்கங்கள் உண்டு என்பதைப் புறக்கணித்து ஒருபக்கம் மட்டுமே உண்டு என்றும் அது பாதகமான நிகழ்வுகள் மட்டுமே எனவும் கருதிக் கொள்கிறார்கள். அதாவது இவர்கள் நிகழ்காலத்தில் அவர்களது இறந்தகால நிகழ்வுகளின் எதிர்மறையான தாக்கங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் வாழ்வது நிகழ்காலமாக இருந்தாலும் வாழ்வின் அடித்தளமாக வைத்திருப்பது கடந்த காலக் கசப்பான அனுபவங்கள் என்பதால் இவர்கள் நிகழ்காலத்தைச் தமக்குச் சொந்தமாக்க முடிவதில்லை. நிகழ்காலத்தைச் சொந்தமாக்காத எவரும் அதன் தொடர்ச்சியான எதிர்காலத்தைச் சொந்தமாக்க முடியாது என்பதால் நிகழ்காலத்தில் இறந்தகால எதிர்மறையான விடயங்களில் வாழ்பவர்கள் அனைவரும் எதிர்காலத்தைத் தொலைப்பவர்களே.

**ஆம் வாசகர்களே!**

நிகழ்காலம் மட்டுமே நமது வாழ்க்கைக்குத் தரப்படும் ஒரேயொரு வாய்ப்பு. இந்த நிகழ்காலத்தைச் சொந்தமாக்குவதால் மட்டுமே அதன் தொடர்ச்சியான எதிர்காலத்தையும் சொந்தமாக்கமுடியும். மாறாக தரப்படுகின்ற அரிய வாய்ப்பான நிகழ்காலத்தில் வாழ்வதற்குப் பதிலாக கடந்த கால கசப்பான அனுபவங்களில் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் நிகழ்காலத்தில் வாழாதவர்களாதலால் அவர்கள் நிகழ்காலத்தையும் தொலைத்துவிடுகிறார்கள். அதன்தொடர்ச்சியான எதிர்காலத்தையும் தொலைத்து விடுகிறார்கள். எனவே நிகழ்காலத்தில் வாழ்வோம்,
எதிர்காலம் தானகவே நமக்கு சொந்தமாகிவிடும்.

# Avatar இன் கதை

ரைரானிக் படம் வெளிவந்து சுமார் 12 வருடங்கள் கழித்து அதே இயக்குனரின் படம் வெளிவருகின்றது. இதற்கு முன்பு இவர் இயக்கிய குறிப்பிடத்தக்க படங்கள் True Lies. Terminator, Terminator 2, Judgment Day போன்றவை. ரைரானிக்குப் பின் சில விவரணத் திரைப்படங்களை இயக்கியுள்ளார். 12 வருடங்கள் என்பது நீண்ட காலமே. கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்தில் 1954ம் ஆண்டில் ஜேம்ஸ் கமரோன் பிறந்தார். இவர் இயக்கிய அனைத்து படங்களும் தொழில்நுட்பரீதியாக பிரசித்தி பெற்றவை.

அவற்றார் 2-D, 3-D- Real D 3D, Dolby 3D, IMAX 3D ஆகிய அமைப்பு முறைகளில் வெளியிடப்பட்டது. படத்தின் தயாரிப்புச் செலவான சுமார் 310 மில்லியனின் அரைவாசி அதாவது 150 மில்லியன் விளம்பரத்துக்காக செலவிடப்பட்டது. மொத்தச் செலவு 460 மில்லியனாகின்றது. இப் படத்துக்கான திட்டம் முதலில் 1996ல் உருவானது. இதில் பேசப்படும் நாவி மொழியை உருவாக்கியவர் பிரபல மொழியி லாளர் Dr. Paul Frommer. இவர் தென் கலிபோனியா பல்கலைக்கழக பேராசிரியர் ஆவார். சுமார் ஆயிரம் வார்த்தைகளை கொண்ட மொழியாக உருவாக்கப்பட்டது. இந்த மொழி உருவாக்கத்தில் எதியோப்பிய மொழியான Amharic ம் பாவிக்கப்பட்டது. இந்த Amharic, Semitic என்ற மொழிக் குடும்பத்தில் ஒன்று. இந்த மொழிக் குடும்பத்தில் அரபிக், Tigrinya, Hebrew ஆகிய மொழிகள் உள்ளன. கி.மு 2000 ஆண்டளவில் இந்த மொழிக் குடும்பம் மெசப்பத்தோமியா பிரதேசத்தில் பிரசித்தி பெற்றது. அத்துடன் நியுசிலாந்தின் பூர்வீகக் குடிகளின் மொழியான Maori ம் பாவிக்கப்பட்டது. www.naviblue.com என்ற இணையத்தளத்தில் நாவி மொழியின் அகராதியை காணலாம்.

## - நாவி -

அவதாரம் - விஷ்ணு பல அவதாரங்களில் தோன்றினார். கிருஸ்ணன், கல்கி, பரசுராமன், ராமன், நரசிம்மன் போன்றன இவரின் அவதாரங்கள் என கூறப்படுவதுண்டு. இதன் அடிப்படையில் தான் நாவி என்ற இனம் உருவாக்கப்பட்டதாக இயக்குனர் ஒரு பேட்டியில் தெரிவித்துள்ளார். இப் படத்தை இயக்குவதற்கு கமரோன் virtual camera system ஐ பயன்படுத்தினார். இது ஒரு திரையில் படமாக்கும் காட்சிகளை உடனுக்குடன் நெறியாக்க உதவும். இப்படம் படமாக்கும் பொழுது ஸ்பில்பேர்க், ஜோர்ஜ் லூக்காஸ் ஆகியோர் தளத்திற்கு சென்று இந்த தொழில் நுட்பத்தை பார்வையிட்டுள்ளனர். இதன் தொழில் நுட்பம் பற்றி தனி ஒரு கட்டுரையே எழுதலாம்.



படம் 144 வருடங்களின் பின்னர் அதாவது 2154ல் சூரியனில் இருந்து 4.37 ஒளி ஆண்டுகள் துாரத்தில் உள்ள Alpha Centauri நட்சத்திரக் குடும்பத்தில் உள்ள பன்டோராவில் கனிமங்களை ஆர்.டி.ஏ என்ற நிறுவனம் அகல்கின்றது. பன்டோராவில் unobtanium. என்ற கனிமம் அதிகளவில் உள்ளது. இதன் விலை மிக, மிக உயர்வு. இங்கு வாழ்பவர்கள் நாவிகள். பத்தடி உயரம், நீல நிறம் கொண்டவர்கள். இவர்களின் கடவுள், சக்தி Eywa என்ற பெண் கடவுள். பன்டோராவில் வாழ்வதற்கு விசேட வாயுக் கருவிகள் தேவை. எனவே விஞ்ஞானிகள் டி.என்.ஏ என்ற நிறமூர்த்தத்தைக் கொண்டு நாவியை போன்ற உடலைக் கொண்ட உடலை தயாரிக்கின்றனர். கூடு விட்டு கூடு பாயும் முறையே இங்கு பாவிக்கப்படுகின்றது. விஞ்ஞானக் குழுத் தலைவி Dr. Grace Augustine (Sigourney Weaver). மற்றொரு விஞ்ஞானி Norm Spellman (Joel David Moore). இவர்களுடன் இணையவருகின்றார் Jake Sully (Sam Worthington) இவர் ஒரு கால் இல்லாதவர். இவரை முதலில் தலைமை விஞ்ஞானி ஏற்றுக் கொள்ள மறுக்கின்றார். பின்னர் ஒன்றுமே செய்ய முடியாமல் ஏற்றுக் கொள்கின்றார். இவர்கள் மூவரும் நாவிகள் வாழும் கிரகத்தினுள் கூடுவிட்டு கூடு பாயும் வித்தையில் நாவிகள் உருவம் பெற்று செல்கின்றனர். அங்கு இவர்கள் மீது ஏற்படுத்தப்பட்ட தாக்குதலில் ஜேரி தனித்து விடப்படுகின்றார். ஜேரிக்கு பெண் நாவியான Neytiri (Zoe Saldana) உதவி செய்கின்றார். நாவிகளின் தலைமைப் பீடம் ஜேரிக்கு தங்களது முறைகளை கற்பிக்குமாறு நேரிக்கு உத்தரவிடுகின்றது. RDA ன் பாதுகாப்பு பிரிவு தலைவன் ஜேரி நாவியின் முறைகளை வெளிக்கொணர்ந்தால், ஜேரிக்கு மீள கால் பெற உதவி செய்வதாக கூறுகின்றார்.

ஜேரிக்கும், நேரிக்கும் நெருக்கம் அதிகமாகி ன்றது. நாவியினர் ஜேரியை தங்களில் ஒருவராக கருதுகின்றனர். இதற்கிடையில் ஆர்.டி.ஏ குழுவினர் தாய் மரத்தையும் நாவியினரையும் அழித்து கனிமங்களை கைப்பற்ற தயாராகின்றனர். ஜேரியுடனான விஞ்ஞானக் குழு இதனை எதிர்க்கின்றது. இந்த ஜேரிக் குழு எவ்வாறு நாவியினரை ஆர்.டி.ஏ குழுவினரிடமிருந்து காப்பாற்றுகின்றனர் என்பதே படத்தின் மிகுதிப் பகுதி.

இயற்கைக்கும் நாவியினருக்குமான நெருக்கம் அதிகம். புத்தரின் போதனையான "எல்லாவற்றிக்கும் தொடர்புண்டு" என்ற கருத்துப் பட வாழ்கின்றனர். நாவியினர் ஆல மரம் போன்று தோற்றமளிக்கும் மரங்களை கடவுளுக்கு சமானமாக கருதுகின்றார்கள். இதலிருந்து பல பயன்களை பெறலாம் என நம்புகின்றனர். தங்களது சுயநலன்களுக்காக இயற்கையை அளிக்கும் மனிதனின் பயணம் இங்கிருந்து ஆரம்பமாகின்றது.

இப்படத்தின் கரு பல படங்களை நினைவூட்டுகின்றது. இதனை கமரோனும் ஒத்துக் கொள்கின்றார். At Play in the Fields of the Lord , The Emerald Forest, Dances With Wolves, Cry Freedom, The Last Samurai, District 9, Battle for Terra போன்ற படங்களை நினைவூட்டுகின்றது. ஓணாய்களுடன் நடனம் (Dances With Wolves) என்ற படத்தில் இப்படத்தில் வருவதைப்போல் பூர்வீக இந்தியர்களை வெள்ளையர் ஒருவர் காப்பாற்றுகின்றார். அதேபோல் Cry Freedom என்ற படத்திலும் ஸ்ரீவ் பைக்கோ (Steve Biko) என்ற கறுப்பு நிற சுதந்திர வீரரின் சிறை மரணத்தை வெளி உலகிற்கு, தனது உயிரை துச்சமாக மதித்து Donald Woods என்ற வெள்ளையர் வெளிக் கொணர்கின்றார்.

இப்படத்திலும் நாவியினரை வெள்ளையரே காப்பாற்றுகின்றனர். இது வெள்ளை மேலாதிக்க மனோபாவத்தை தான் வெளிப்படுத்துகின்றது. பூர்வீக இந்தியரை பெருமளவில் கொன்று குவித்து அவர்களது கலாச்சாரத்தை அழித்த பெருமை இந்த வெள்ளையரைத்தான் சாரும். அங்கெல்லாம் பூர்வீக இந்தியரை காப்பாற்றியதாக, வெள்ளை இன கதாநாயகர்கள் பற்றிய எந்த பதிவுமே இல்லை. வெள்ளையர் ஒருவர், வெள்ளையரல்லாதவரின் முறைகளை நன்கு தெரிந்திருந்தால் அவரால் அவ் இனக்குழுவுக்கு தலைமை தாங்க முடியும். அவ் இனக்குழுவினரை விட இவரால் அவர்களுக்கு தலைமை தாங்கி சிறப்பாக செயல் படமுடியும் என்ற மாயையை இப்படம் தோற்றுவிக்கின்றது. இது இலகுவாக காலனி த்துவ மனோபாவத்தில் உள்ள மக்களிடம் சென்றடைகின்றது. அவர்களிடம் Middle Class fear (பயம்), முதலாளித்துவ சிந்தனை, வெள்ளை அடிமைத்தனம் நிரம்பி காணப்படுகின்றன. வெள்ளையர்களால் தான் உலகை காப்பாற்ற முடியும் என்ற மனோபாவத்தை பிரச்சாரம் செய்யும் நோக்கமே இங்கு வெளிப்படுகின்றது. (காந்தி படத்தில் காந்தியாக ஒரு வெள்ளையர் நடித்துள்ளார். இதனைத் தான் இந்தியர்களும், வெளிநாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன)

படத்தில் உள்ள மனித இனத்தில் ஒரு விஞ்ஞானியையும், ஒரு கறுப்பின இராணுவத்தினரையும் தவிர மற்றவர்கள் அனைவரும் வெள்ளையரே. அந்த கறுப்பின இராணுவ வீரனும் ஒரு தலையாட்டி பொம்மையை போல் தான் உள்ளார். மறுபுறம் நாவி இனத்தவர்கள் மனித மிருகங்கள் போல் தோற்றமளிக்கின்றனர். படம் இரு உலகத்தை காட்டுகின்றது. ஒன்று இந்த வெள்ளை உலகம். மற்றையது நாவிகளின் உலகம். இங்கு தான் நாங்கள் உள்ளோம். கமரோனின் இந்த வேறுபாடுக்கு காரணம் என்ன? நாவிகளின் மொழித்தோற்றம் ஆபிரிக்க, ஆசிய பூர்வீகக் குடிகளின் மொழிச் சொற்களில் இருந்தே தயாரிக்கப்படுகின்றது. நாவிகளின் நம்பிக்கைகள், வழக்கங்கள் அனைத்துக்கும் அடிப்படை இந்திய புராணங்கள். Neytiri ன் தோற்றம் நீல நிறம், சீன முகவாடையுடன் கூடிய அனுமானின் உடல். அடிப்படையில் நாவியினர் ஆசிய, ஆபிரிக்க மக்கள். நாவி யினர் கிருஸ்ணனின் நிறத்தை கொண்டவர்கள். படத்தின் ஆரம்பத்தில் இருந்தே நாங்கள் அந்நியப்படுகின்றோம்.

மறுபுறம் கமரோனின் வெள்ளை நிற காலனி த்துவ குற்ற உணர்வின் வெளிப்பாடே இப்படம் எனலாம். இப்படத்தை அமெரிக்காவின் கதை என சில விமர்சகர்கள் கூறுகின்றனர். அமெரிக்கா - ஈராக் கதையா? இல்லை அமெரிக்கா உருவாகிய கதையா? கொலம்பஸ் என்ற கொலை-கொள்ளைக்காரனின் குழுவினர் முதலடியும், முதல் கொலையும் செய்ய, தொடர்ந்து பிரித்தானியர். பிரென்ச்,

தொடர்ச்சி 34ஆம் பக்கம்




# HomeLife GTA Realty Inc., Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

## எமது நிறுவனம் பற்றிய சில தகவல்கள்

- *3 Brokers to Help*
- *2 Branches: Scarborough & Mississauga*
- *Open 7 days And After Hours Services Availlable*
- *Convenient Locations*
- *Regular Training Provided*
- *Private Room*
- *Exclusive Projects for HomeLife GTA Sales Agents Only (Better Prices And Deposit Structure for Buyers)*

எமது முகவர்களினூடாக ஆதனம் கொள்வனவு அல்லது விற்பனை செய்வதன் மூலம் BMW வாகனம் ஒன்றை பெற்றுக்கொள்ளும் அதிஷ்டசாலியாகலாம். *

* BMW some conditions may apply



Broker / Owner



Broker/Manager



Broker / Owner

**Pl. Call @ 416.321.6969 / 905.712.2666**

**1711 McCowan Rd. #206, Toronto / 145 Traders Blvd # 29, Mississauga**

# 'விளம்பரம்' பத்திரிகையின் வருடாந்த விருந்து மாலை

விளம்பரம் பத்திரிகையின் ஆசிரியர் பீடம் வருடா வருடம் நடத்தும் வருடாந்த சந்திப்பு இவ்வாண்டு கடந்த 2.1.2010 அன்று மாலை ஈஸ்ரவுண் விருந்துபசார மண்டபத்தில் நடைபெற்றது. விளம்பரம் பத்திரிகையில் எழுதிவரும் எழுத்தாளர்களும் அவர்களது குடும்பத்தவர்களும், நண்பர்களும் வழமைபோல் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

இவ்விழாவினை அப்பத்திரிகையில தொடர்ந்து எழுதிவரும் சிவ. பஞ்சலிங்கம் நெறிப்படுத்தினார். ஆரம்பத்தில் வரவேற்று உரை நிகழ்த்தியதோடு விளம்பரம் பத்திரிகை பற்றியும் அறிமுக உரையாற்றினார்.



இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைப்பேராசிரியர கரு. முத்தையா அவர்கள் உரையாற்றினார். அவர் உரையாற்றும்போது பெயரளவில் 'விளம்பரம்' என்ற பெயரைக் கொண்டாலும் அது நல்லதொரு செய்திப் பத்திரிகையாக மாதம் இருமுறை மலர்கின்றது. இந்தப்பத்திரிகை தொடர்ந்து நல்ல விடயங்களை உள்ளடக்கி வருகின்றது என குறிப்பிட்ட அவர், நல்ல செய்திகளைக் கொண்டுள்ள ஒரு செய்திப்பத்திரிகைக்கு 'விளம்பரம்' என்று பெயர் வைத்துள்ளார்களே என்ற ஒரு கேள்வி என்னுள்ளே எழுந்தது. இங்கு வந்தபின்னர் தான் இப்பத்திரிகை ஆரம்பத்தில் மக்களின் தேவையை கருத்தில் கொண்டு 100 வீதமும் விளம்பரங்களுடன் வந்தது என அறிந்து கொண்டேன். விளம்பரம் பத்திரிகயின் ஆசிரியர் திருமதி பாமா மகேந்திரனும் அவரது கணவர் ராஜா மகேந்திரனும் இப்பத்திரிகையினை சிரத்தையோடு நடத்திவருவதை நான் அறிவேன். நண்பர் பெரி. முத்துராமன் இப்பத்திரிகையில் எழுதிவருகின்றார். அது மட்டுமல்ல பல நல்ல எழுத்தாளர்களின் படைப்புக்களை இந்தப்பத்திரிகை தனதாக்கிக் கொண்டது. பல்வேறு துறைகள் சார்ந்தும் இப்பத்திரிகை செய்திகள், கட்டுரைகள், சிறுகதைகள் என்பனவற்றை உள்ளடக்கி வெளி வருவது பாராட்டத்தக்கது என்றார். நான் இப்பத்திரிகையை இணையத்தளத்தின் வாயிலாகப் படித்து வருகின்றேன். கவிநாயகர் கந்தவனம், குறமகள் வள்ளி நாயகி, துறையூரான், நா.க. சிவராமலிங்கம், கனி, பெரி. முத்துராமன், ராஜா மகேந்திரன், சிவ ஞானநாயகன், எஸ். கணேஷ், சிவ. பஞ்சலிங்கம், வைத்தியகலாநிதி கோபால், செல்வசோதி, கே.ஜி. மாஸ்ரர், தீசன், அன்ரனி மனோகரன், வழிப்போக்கன், வானரன், லலிதா புரூடி, பொ. கனகசபாபதி, அ. முத்துலிங்கம், துறவி, பிலிம் நியூஸ் கிருஷ்ணன், பாலு சத்தியா, புலவர் ஈழத்துச்சிவானந்தன், கிறிஸ்ரி போன்ற பலர் கனடாவில் இருந்தும் இந்தியாவிலிருந்தும் இந்தப்பத்திரிகையில் எழுதி வருகின்றார்கள். மிகச்சிறந்த எழுத்தாளர்களால் எழுதப்படும் விடயங்களை உள்ளடக்கிய ஒரு தரமான பத்திரிகையாக விளம்பரம் வெளி வருகின்றது. அதற்கு அதன் ஆசிரியர் குழுவின் தன்னலமில்லாப் பணியே காரணம் என்றார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இந்தப்பத்திரிகை சிறுவர்களுக்கு ஒரு இடத்தையும் கவிதை, இலக்கியத்திற்கும் போதியளவு இடத்தையும் ஒதுக்காதது ஒரு குறைபாடகா எனக்குப்படுகின்றது. அதனையும் எதிர்காலத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

இவ்விழாவில் விளம்பரம் பத்திரிகை எழுத்தாளர்களில் ஒருவரான 'குறமகள்' என அழைக்கப்படும் வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட 'கூதிர்காலக் குலாவல்கள்', அகணிதன் அல்லது நதியின் பிழையன்று' என்னும் இரு குறுநாவல்கள் கொண்ட நூலினை வெளியிட்டு உரை நிகழ்த்தினார் முன்னைநாள் சோமஸ்கந்தா, மகாஜனக் கல்லூரிகளின் அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள். இந்த நூலை விளம்பரம் நிறுவனம் வெளியீடு செய்துள்ளது. குறமகளைப் பற்றிக் குறிப்பிடும்போது குறமகள் அவர்கள் நாடறிந்தவர் மட்டுமல்ல உலகறிந்த ஒரு எழுத்தாளர். அவர் பல சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் எனப்பல துறைகளில் கால் பதித்தவர். அவரால் எழுதப்பட்ட 'ஈழத்தில் பெண்கல்வி' என்னும் ஆய்வு நூல் மிகச்சிறந்த ஒரு படைப்பாகும். இந்நூல் கனடிய மண்ணில் வெளியீடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. தனது அனுவம், அறிவு என்பனவற்றை அடிப்படையாக வைத்து எழுதியுள்ளார். அவர் சமுதாயப் பிரச்சினையை விளங்கிக் கொண்டு எழுதியிருக்கின்றார் என்பதனை இந்தக்குறுநாவல் வெளிக்காட்டுகின்றது. இந்தக் குறுநாவலை விளம்பரம் தனது வெளியீடாகச் செய்து எழுத்தாளர்களை ஊக்குவிக்கின்றது. அது பாராட்டத்தக்கது என்றதோடு இந்தப் பத்திரிகையை இலைமறை காயாக இருந்து இயக்கி வருபவர் ஆசிரியர். இந்தப் பத்திரிகையில் எழுத்துப்பிழைகள் இல்லாது வருவதற்கு பத்திரிகையின் ஆசிரியர் பீடம் பாராட்டப்பட வேண்டியது. அனைத்து எழுத்தாளர்களும் உழைத்து வருவது பாராட்டத்தக்கது என்றும் இந்த நூலை நான் வெளியீடு செய்து வைக்கின்றேன் என்ற அவர் இந்த குறுநாவல் உங்கள் அனைவரதும் கைகளில் தவழும். அதனை வாசித்துப் பார்க்கவேண்டியது உங்களின் பொறுப்பு என்றார்.

'குறமகள்' உரையாற்றும் போது 'இந்த நாவலை நான் பல ஆண்டுகளுக்கு முன்னரே எழுதிவிட்டேன். ஆனால் அதனை வெளியீடு செய்வதில் தடங்கல்கள் ஏற்பட்டன. நான் எழுதிய பல ஆக்கங்கள் ஊரிலேயே பாதுகாக்கப்படாமல் இல்லாது அழிந்து போயுள்ளன. இந்த குறுநாவலை மனித வாழ்வின் அந்திமத்திற்கு உருவகமாக கூதிர்காலத்தைத் தேர்ந்து பெயரிட்டேன்' என்ற அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் 'எம் ஒவ்வொருவர் வாழ்விலும் தவறுகள் தோல்விகள் வருகின்றன. அவை ஏன் வருகின்றன என்பது எனது மனதில் எழுந்த கேள்விகள். அது மட்டுமன்றி மாற்றானின் ஊடுருவலால் எமது பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாகி கற்புச்சூறையாடப்பட்டுள்ளார்கள். இவற்றை அடிப்படையாக வைத்தே இந்த குறுநாவலை நான் படைத்தேன். அது மட்டுமன்றி எனது கணவரின் நண்பர் ஒருவர் மாற்று இனத்தில் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர். அவரது வாழ்வியலே 'அகணிதன் அல்லது நதியின் பிழையன்று' என்ற நாவலின் உட்கருவாக அமைத்துள்ளேன்' என்றார்.

## த. சிவபாலு


முன்னைநாள் அதிபரும் விளம்பரம் பத்திரிகையின் எழுத்தாளருமான நா.க. சிவராமலிங்கம் அவர்கள் உரையாற்றுகையில் விளம்பரம் பத்திரிகை 20 ஆண்டில் காலடி வைக்கின்றது. நடு நிலையோடு காய்தல் உவத்தலின்றி செயலாற்றிவரும் ஒரு பத்திரிகைதான் 'விளம்பரம்'. அதில் சிறந்த பல எழுத்தாளர்கள் எழுதி வருகின்றார்கள். பல எழுத்தாளர்கள் தாமாக விரும்பியே எழுதி வருவதை நான் அறிவேன் என்றார்.

தொடர்ச்சி 24ஆம் பக்கம்




COTTAGE / CAMPGROUND FOR SALE
Property and Business

*10 River front cottages with 1-2-3 bedrooms fully equipped comfortable house keeping. 20 trailer homes. One bungalow house with double car garage. Big party hall. The property has own access to the front river. Motor boating, fishing and swimming, 3 boats. 1 Johndeer, 2 golf carts.* 1½ hours from Toronto



Sugu: 416.727.6525 www.hickorygrovecottages.com www.troutwatercamping.com

# 'பாடல்கள் இல்லாத தமிழ்சினிமாவுக்கு வாய்ப்பே இல்லை!"

## சந்திப்பு: பாடலாசிரியர் யுகபாரதி

தமிழ் திரைப்பட பாடலாசிரியர்களில் கவிஞர் யுகபாரதிக்குத் தனி இடம் உண்டு. 'பல்லாங்குழியின் வட்டம் பார்த்தேன்...', 'மன்மத ராசா!...', 'காதல் பிசாசே...' என்று இவர் எழுதிய பல பாடல்கள் இன்றும் பல தமிழர்களை அசைபோட வைத்தபடி இருக்கின்றன. இந்தப் பாடல்கள் மட்டுமல்லாமல், 'மனப்பத்தாயம்', 'பஞ்சாரம்', 'தெப்பக்கட்டை', 'தெருவாசகம்', 'நொண்டிக் காவடி', 'ஒரு மரத்துக் கல்' என்று ஆறு கவிதைத் தொகுப்புகளுக்கு சொந்தக்காரர் யுகபாரதி. ஆறு கட்டுரை நூல்களும் வெளிவந்துள்ளன. தமிழக அரசின் விருதை 'பஞ்சாரம்', 'மனப்பத்தாயம்' ஆகிய கவிதை நூல்களுக்காகப் பெற்றவர். திருப்பூர் தமிழ்ச் சங்க விருது, பாரத ஸ்டேட் வங்கி விருது, காசியூர் ரங்கம்மாள் இலக்கிய விருது... என்று பல பரிசுகளைப் பெற்றவர்.

இனி அவருடன்...

**நீங்கள் திரைப்படத்தில் எழுதிய முதல் பாடல் எது? அந்த வாய்ப்பு உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?**

"நான் எழுதிய முதல் பாடல் இயக்குநர் லிங்குசாமி இயக்கிய 'ஆனந்தம்' திரைப்படத்தில் இடம்பெற்ற 'பல்லாங்குழியின் வட்டம் பார்த்தேன், ஒற்றை நாணயம்...' உண்மையில் திரைப்படப் பாடல் எழுதுவது அப்போது எனக்கு நோக்கமாக இல்லை. ஒரு பத்திரிகையாளராக இருக்கவேண்டும் என்பதுதான் என் விருப்பமாக இருந்தது. அப்போது 'ராஜரிஷி' என்ற பத்திரிகையில் வேலை பார்த்துக்கொண்டு இருந்தேன். திடீரென்று அந்தப் பத்திரிகையை மூடிவிட்டார்கள். அடுத்த வேலையைத் தேடிக்கொண்டிருந்தேன். ஒரு நாள், கவிஞர் வித்யாஷங்கர், 'உங்க கவிதைகளை எல்லாம் தொகுத்து ஏன் புத்தகமாகப் போடக்கூடாது?' என்று கேட்டார். அடுத்த வேலை கிடைக்கும்வரை இதையாவது செய்யலாமே! என்று எனக்கும் தோன்றியது. கவிதைகளைத் தொகுக்க ஆரம்பித்தேன். 'மனப்பத்தாயம்' என்ற கவிதை நூலாக அந்தக் கவிதைகள் வெளிவந்தன.

## நேர்காணல்: பாலு சத்யா

நூல் வெளிவந்ததும் நிறையபேர் படித்துவிட்டுப் பாராட்டினார்கள். அவர்களில் ஒருவர், இயக்குநர் லிங்குசாமி. அந்த சமயத்தில், அவருடைய உதவி இயக்குநர் தியாகு எனக்கு அறிமுகமானார்.

ஒரு நாள், தியாகு கேட்டார்: 'நீ ஏன் சினிமாவுக்கு பாட்டு எழுதக்கூடாது?' நான், என்னால் முடியாது என்று மறுத்துவிட்டேன். தியாகு அத்தோடு விடவில்லை. லிங்குசாமியிடம் போய் சொல்லியிருக்கிறார். பிறகு லிங்குசாமியே என்னை கூப்பிட்டுப் பேசினார். நான் அவரிடம், 'சினிமாவுக்கு பாட்டெழுதும் பயிற்சி எனக்குக் கிடையாது. அதேபோல, சினிமா பாடல் மீது மரியாதையும் கிடையாது' என்று சொன்னேன். அப்போது நான் 'கணையாழி' பத்திரிகையில் வேலை பார்த்துக்கொண்டு இருந்தேன். ஜனரஞ்சகப் படைப்புகள் மீது இருந்த என் அபிப்ராயத்தைத்தான் நான் சொன்னேன். ஆனாலும் என்னை பாடல் எழுதித் தரும்படி கேட்டார் லிங்குசாமி.

'ஆனந்தம்' படத்துக்கான பாடல் தயாரிப்பில் இருந்தார்கள். லிங்குசாமி, தென்னிலவன் என்பவரி டம் ஒரு பாடல் எழுதச் சொல்லியிருந்தார். ஒரு ரூபாய் நாணயத்தை வைத்து பாடல் எழுதவேண்டும். அது சரியாக அமையாததால், என்னை எழுதிக் கொடுக்கச் சொன்னார்கள். நானும் எழுதிக் கொடுத்தேன். ஆனால், தியாகு உட்பட யாருக்குமே நான் எழுதிக் கொடுத்த பாடல்மீது திருப்தி இல்லை. கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் ஆன பிறகு தியாகு என்னை தொலைபேசியில் அழைத்தார். நான் அப்படி ஒரு பாடல் எழுதியதையே மறந்து போயிருந்தேன். அவர் 'உன் பாட்டு சூப்பர் டூப்பர் ஹிட் ஆயிடும் போல இருக்கு' என்று சொன்னார். ஏற்காட்டில் பாடல் உருவாக்கம் நடந்து கொண்டிருந்தது. இசையமைப்பாளர் எஸ்.ஏ. ராஜ்குமார், எழுதப்பட்ட பாடல்கள் மீதி திருப்தி இல்லாமல், 'யாராவது கவிதை எழுதியிருந்தால் கொடுங்கள்' என்று சொல்லியிருக்கிறார். நான் எழுதிய கவிதையை எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதைப் படித்துவிட்டு 'மிக நன்றாக இருக்கிறதே!' என்று அவர் மெட்டமைத்திருக்கிறார். எல்லோருக்கும் பிடித்துவிட்டது. நான் அன்றைக்கே இரவோடு, இரவாக சரணம் எழுதிக் கொடுத்தேன்.

பாடல் எழுதிக்கொடுத்துவிட்டேனே தவிர, அது படத்தில் இடம் பெறுமா என்பதே பெரிய கேள்விக்குறியாக இருந்தது. படத்தின் தயாரிப்பாளர், இயக்குநர் லிங்குசாமியிடம் சொல்லியிருக்கிறார், 'பாட்டு நல்லாத்தான் இருக்கு. ஆனா, படத்தோட ஒட்டாம இருக்கு. எடுத்துடலாமே!' என்று. ஆனால், அதை லிங்குசாமி ஏற்றுக்கொள்ளவில்லை. 'முதல் காட்சியில் இந்தப் பாடலைப் போடுவோம். யாராவது பாடல் பிடிக்காமல் எழுந்து போனால், படத்திலிருந்து பாடலை எடுத்துவிடுவோம்' என்று சொல்லியிருக்கிறார். இதை தயாரிப்பாளரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

தியேட்டரில், படம் பார்த்தபோது, பாட்டு போடும்போதெல்லாம் நான் எழுந்து, பின்னால் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தேன், யாராவது எழுந்து போகிறார்களா என்று. யாரும் எழுந்து போகவில்லை. அந்தப் பாடல் படத்தின் இடைவேளை முடிந்து ஐந்து நிமிடம் கழித்து வந்தது. அதனால் யாரும் எழுந்து போக வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இப்படித்தான் நான் சினிமாவுக்கு பாடல் எழுத வந்தேன்."

**மற்ற துறைகளில், சக கூட்டாளிகளை ஆதரிக்கும் போக்கு இருக்கிறது. அதாவது ஒரு பத்திரிகையாளர், தம் பத்திரிகையில் வேலை இருந்தால், தெரிந்த ஒருவரை சிபாரிசுகூடச் செய்வார். ஆனால், சினிமா பாடல் ஆசிரியர்கள் அப்படிச் செய்வதில்லையே ஏன்?**

"திரைப்படத்தில் பாடல் எழுதுவது என்பது பொருள்வயப்பட்ட துறைதான். பொருளும் புகழும் சார்ந்த துறை. ஒவ்வொரு படைப்பாளனுமே சக படைப்பாளியின் மேல் இருக்கும் அதிருப்தியினால்தான் எழுத வருகிறான். என்னைவிட சிறந்தவர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். அப்புறம் ஏன் நான் எழுதவர வேண்டும்? இன்னும் கொஞ்சம் புதிதாக, அழகாகச் சொல்லிவிட முடியாதா என்கிற எண்ணம்தான் காரணம். ஆனால், இந்தத் துறையிலும் முன்பைவிட இப்போது நிறைய மாற்றங்கள் வந்திருக்கின்றன. நான் பல சந்தர்ப்பங்களில், கவிஞர் கபிலனை வியக்கிறேன். கவிஞர் தாமரையை வியக்கிறேன். கவிஞர் நா. முத்துகுமாரை வியக்கிறேன். நான் குறிப்பிட்ட ஒவ்வொருவருக்குமே ஒவ்வொரு மொழி இருக்கிறது. நானே எனக்குக் கிடைத்த வாய்ப்பை கவிஞர். கபிலனுக்குக் கொடுத்திருக்கிறேன். கவிஞர் தாமரை தனக்குக் கிடைத்த வாய்ப்பை எனக்குக் கொடுத்திருக்கிறார். இது மிகவும் வெளிப்படையாக தெரியவேண்டிய அவசியம் இல்லை என்று நான் நினைக்கிறேன்."

**புதிதாக பாடல் எழுத வருபவர்களுக்கு திரைத்துறையில் வாய்ப்பு இருக்கிறது என்று நினைக்கிறீர்களா?**

"கண்டிப்பாக இருக்கிறது. நல்ல பாடல்கள் எழுதப்படும்போது மக்கள் வரவேற்கத்தான் செய்வார்கள். அப்படி அறிமுகமானவர்கள்தான் நாங்கள். நான் திரைப்படத்துக்குப் பாடல் எழுத வந்தபோதுதான் நா. முத்துகுமார், கபிலன், தாமரை போன்றவர்களும் அறிமுகமானார்கள். எனக்கு 'பல்லாங்குழியின் வட்டம்...' பாடல். தாமரைக்கு 'வசீகரா.' பா. விஜய்க்கு 'கறுப்புதான் எனக்குப் பிடிச்ச கலரு!' ஆனால், அவர் கொஞ்சம் முன்னாடியே திரைப்படத்துக்குப் பாடல் எழுத வந்துவிட்டார். அதுபோல் புதிதாக வருபவர்களும் ஒன்றுடன் வரவேண்டும்."


**திரைப்படப் பாடல்களில், முன்பு போல கவித்துவம் இப்போது இல்லை என்ற ஒரு கருத்து இருக்கிறது. ஏதோ இட்டு நிரப்பும் வேலை என்றுகூட பலர் நினைக்கிறார்கள். எதிர்காலத்தில் திரைப்படத்தில் பாடல்களே இல்லாமல் படம் வெளிவருகிற சூழ்நிலை இருக்குமா?**



"தமிழ் சினிமாவில் பாடல்கள் இல்லாமல் போக வாய்ப்பே இல்லை. தமிழ் மரபு என்பது இசை மரபு. அதனால்தான் நம் திரைப்படங்களில் பாடல்கள் இருக்கின்றன. வேறு எந்த மொழிக்கும், இனத்துக்கும் இல்லாத தனித்துவம் தமிழ் மொழிக்கு உண்டு. பிறந்ததும் பாடப்படும் 'தாலாட்டுப் பாட்டு', வண்டியில் போகும்போது 'வண்டிப் பாட்டு', கதிரை அறுக்கும்போது 'அறுப்புப் பாட்டு', ஏன் இறப்பின்போதுகூட 'ஒப்பாரிப் பாட்டு' என்று நம் பண்பாட்டில் இருக்கிறது. பாடல்கள் இல்லாமல் எடுக்கப்படும் படம் திரைப்படம், சிறந்த படமாக இருக்கும் என்று சொல்வார்கள். அது சிறந்த படமாக இருக்கும். ஆனால், தமிழ்ப் படமாக இருக்காது. தமிழ்த் திரைப்படங்களில் பாடல் என்பது, காட்சியை நகர்த்துவதற்கான ஓர் உத்தி. காட்சி சிறப்பானதாக இருந்தால், பாடல் சிறப்பாக இருக்கும். கதை நன்றாக இருந்தால்தான், காட்சி நன்றாக இருக்கும். ஆனால், கடந்த ஆறு, ஏழு ஆண்டுகளில் தமிழில் வெளி வந்த படங்களில் பெரும்பாலானவற்றில் கதாநாயகனாக வருபவர், சமூகத்துக்கு கேடு விளைவிக்கிற ஒரு கதாபாத்திரமாகவே சித்தரிக்கப்பட்டிருப்பார். அப்புறம் எப்படி அதில் கவித்துவம் இருக்கும்?"

**அப்படியென்றால் அந்தப் பாடல்கள் மக்களை மிக மோசமான விதத்தில் பாதிக்கும் என்கிறீர்களா?**

"நிச்சயமாக இல்லை. எம்.ஜி.ஆர். தான் நடித்த எந்தப் படத்திலும் மது அருந்த மாட்டார், சிகரெட் பிடிக்க மாட்டார். அவ்வளவு உதாரண புருஷராக நடித்திருந்தார். ஆனால், அவருடைய ரசிகர்கள் எல்லோருமே சிகரெட் பிடிக்காமலோ, மது அருந்தாமலுமா இருக்கிறார்கள். பலர் அதைச் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். நல்லவர்கள் சொன்னதையே கேட்டு நடக்காதவர்கள், கெட்டவர்கள் சொன்னதையா கேட்டு நடக்கப் போகிறார்கள்? ஒரு ரசிகனை, அந்த நேரத்தில் அவன் எப்படி ரசிக்கிறானோ அதை மட்டுமே நிகழ்த்துகிறது சினிமா. நூறாவது நாள் படத்தைப் பார்த்துவிட்டுத்தான் ஜெயபிரகாஷ் கொலை செய்ததாகச் சொல்வார்கள். இதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. திரைப்படம் என்பது அந்தந்த நேரத்தில் ரசிகனின் மனநிலைக்கேற்ப தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்று. அவ்வளவுதான். அதே நேரத்தில் திரைப்படத்தை நல்ல விஷயங்களைச் சொல்லும் ஊடகமாக மாற்றவும் முடியும். ஈரான் சினிமாவைப் போல. அதற்கான சூழல் இங்கே இல்லை. காரணம், இங்கே திரைப்படத் துறை என்பது வியாபாரத் துறையாக மட்டுமே பார்க்கப்படுகிறது."

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# புதிதாக ரொயோற்றா கம்பனியில் வாகனம் வாங்கியோருக்கு ஆபத்து! ஆபத்து!

கடந்த ஜனவரி 21, 2010 இல் "ரொயோற்றா" என்னும் பிரபல்யமான வாகனத்தினை உருவமைத்து கனடாவில் விற்பனை செய்யும் "ரொயோற்றா கனடா கம்பனி" (Toyota Canada Inc.) அவசரமான செய்தி ஒன்றினை எச்சரிக்கையுடன் தங்களின் வாடிக்கையாளருக்கு அறிவித்ததுடன் தங்கள் வாகன விற்பனையினையும் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது. கனடா, அமெரிக்காவில் அதன் உற்பத்தியையும் பல இடங்களில் நிறுத்தப்பட்டுள்ளது.

அதாவது அவர்களின் வாகன உருவமைப்பில் பொருத்தப்பட்ட உதிரிப் பாகம் ஒன்றினை உற்பத்திசெய்த கம்பனியின் தவறு என்பது வாகனம் ஓட்டுபவருக்கு ஆபத்தினை உருவாக்குகின்றது என்ற எச்சரிக்கை கனடாவில் சகல ஆங்கில ஊடகங்களில் பரபரப்பாக பிரபல்யப்படுத்தப்பட்டுள்ளது.

வேகத்தினை அதிகரிக்கும் போது வேகம் அதிகரிக்கும் பெடலை (Accelerator Pedal) மிதிக்கும் போது அது சிக்கும் நிலைமையினை உருவாக்குவதால் அது பல இடங்களிலும் ஆபத்தினை உருவாக்கியுள்ளது. இதன் காரணமாக கனடாவில் விற்பனை செய்யப்பட்ட சுமார் 2,70,000 வாகனங்களையும் தங்கள் செலவில் திருத்திக் கொடுப்பதற்காக கம்பனி அவசரமாக வாகனம் வாங்கிய வாடிக்கையாளர்களை அழைத்துள்ளது.

இதேபோல் அமெரிக்காவில் விற்பனை செய்யப்பட்ட இக்கம்பனியின் 1.1 மில்லியன் வாகனங்கள் திருப்பி அழைக்கப்பட்டுள்ளது. விற்பனை செய்யப்பட்ட வாகனங்களை திருப்பி எடுத்து கம்பனி செலவில் புதிய "வேகத்தினை மிதிக்கும் பெடல்" சுமார் இரு மணித்தியாலத்தில் மாற்றியமைத்து கொடுக்கப்படுகின்றது.

மேலதிக விபரங்களுக்கு ரொயோற்றா கம்பனி வாடிக்கையாளர் பிரிவு 1-888-869-6828 என்னும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைக்குமாறு கோரப்பட்டுள்ளது.



www.Toyota.ca என்னும் இணையத்தளத்திலும் இவ் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. கடந்த கிழமை முழுவதும் இதுவே மிகவும் பரபரப்பான செய்தியாக சகல செய்தி ஊடகங்களிலும் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

பின்வரும் ரொயோற்றா கம்பனியின் வாகனங்களை வாங்கியோருக்கே இவ் எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது.

1. 2009 - 2010 Rav - 4
2. 2009 - 2010 Corolla
3. 2009 - 2010 Matrix
4. 2005 - 2010 Avalon
5. 2010 - Highlander
6. 2007 - 2010 Tundra
7. 2008 - 2010 Sequoia
8. 2007 - 2010 Camry ( சில மட்டும்)

ஜப்பானை தளமாக கொண்டது இக்கம்பனி. இதன் இயந்திரம் ஜப்பானில் உருவாக்கப்படுகிறது. ஏனைய ஒவ்வொரு உதிரிபாகங்களும் வெவ்வேறு நாடுகளிலிருந்து உற்பத்திசெய்யப்பட்டு கனடாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டு கனடாவில் இவ்வாகனம் உருவமைக்கப்படுகின்றது. "மிதிப்பெடல்" என்ற உதிரிபாகத்தினை உற்பத்தி செய்த ஒரு வெளிநாட்டு கம்பனி மேற்கொண்ட தவறிலிருந்து உருவான முறைப்பாடு காரணமாகவே இன்று இப்பிரச்சினை இக்கம்பனிக்கு பெரும் தலையிடியாகவே போய்விட்டது.

*- சிவ. பஞ்சலிங்கம்*



# BASEMENT RENT

**KENNEDY & ELLESMERE**

தனி அறை ஒன்று BSMT இல் வாடகைக்கு உண்டு. Sep. kitchen, washroom. Close to Kennedy road. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.830.5560

***14th Ave. 9 th line - Markham***

one bed room bsmt apt. for rent. Kitchen, washroom, sep. entrance, parking, cable. Available any time.
தொடர்புகளுக்கு: 416 662 1418.

**NEILSON & FINCH**

1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. February 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.299.5566

**BRIMLEY & LAWRENCE**

2 Bedroom walkout bsmt for rent. 2 parking. All facilities available. Close to TTC, school & mall. Avail. immediately.
416.879.6801/416.293.6253

**BIRCHMOUNT & SHEPPARD**

2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Also 1 room available for rent. Parking, cable & laundry. Close to mall, school, TTC, bank. etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.298.4945

**NEILSON & SHEPPARD**

1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, University. Avail. immediately. Working ladies, Old people or couple preferred.
தொடர்புகளுக்கு: 416.278.0606

**MCCOWAN & STEELES**

2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to 24 hrs. bus service, school. Avail. May 01, 10.
தொடர்புகளுக்கு: 416.272.4921

**MORNINGSIDE & SHEPPARD**

1 bedroom walkout bsmt for rent. Laundry, cable. Close to TTC. Avail. immediately.
416.278.1132 / 416.624.6290

**WARDEN & FINCH**

1 bedroom bsmt. apt. for rent. Bachelor or students or ladies preferred. All bill inclusive. Close to Shopping mall, bus, schools, bank & all amenities. Avail. immediately.
416.492.6817 leave message

**MARKHAM & DENISON**

2 Bedroom brand new bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, walmart, bank, school. Avail. February 01, 2010.
416.908.3081 / 905.479.5599

**WARDEN & LAWRENCE**

சந்திக்கருகில் Clean, excellent condition bsmt வாடகைக்கு உண்டு. 1 bed room, living room, kitchen, full washroom, sep. entrance, parking. Close to TTC, hwy 401, DVP. பெண்கள், முதியோர்கள், couple விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.997.6575

**WARDEN & FINCH**

சந்திக்கருகில் சகல வசதிகளும் ஒருங்கமைந்த இடத்தில் bsmt வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.997.1289

**MCCOWAN & 14TH AVE.**

1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.315.5375

**WARDEN & FINCH**

1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, bank, school. Avail. immediately. வேலை செய்யும் ஆண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.829.7887

**NEILSON & SHEPPARD**

2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to mall, high-school, library, TTC, bank. Available immediately.
416.546.2937/647.402.2937

**BRICHMOUNT & FINCH**

2 Bedroom walkout-out bsmt. apt. for rent. Sep. entrance, laundry facilities. Close to TTC, tamil stores, school, etc. No smoking. Avail. immediately. தொடர்புகளுக்கு:
416.568.0686 / 647.864.7426

**KENNEDY & EGLINTON**

1 Room available for rent. Sep. entrance. Cooking facilities. Ideal for working ladies. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.930.1171

**OLDFINCH & MORNINGSIDE**

3 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to mall, TTC, school. Avail. immediately.
647.388.5295/416.724.7653

**FINCH & PHARMACY**

1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to ttc, school, Tamil stores, mall. Avail. Immediately. Non smokers preferred.
தொடர்புகளுக்கு: 416.759.2030

**MORNINGSIDE & OLD FINCH**

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.286.8450/416.459.3006

**BRIMLEY & STEELES**

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, 1 full bath, kitchen, high speed internet, cable. Close to TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.604.0690

**TAPSCOTT & McLEVIN**

2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry. Behind Malvern Mall. Doctors & TTC near by. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.754.8947

**MEDDLEFIELD & STEELES**

1 Bedroom bsmt apt. for rent. Sep.entrance, parking, laundry, cable. Close to TTC, YRT. Couple, old people or ladies preferred. Avail. March 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.399.5192

**MARKHAM & STEELES**

2 Bedroom bsmt apt. for rent. Sep.entrance. Close to TTC, YRT, Walmart, Nofrills. school. Very convenient location. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.566.2601 After 6:00pm

**BIRCHMOUNT & SHEPPARD**

1 Bedroom bsmt apt. for rent. Sep.entrance, parking, laundry, cable. Close to TTC, mall. Avail. February 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.873.0549

**MARKHAM & LAWRENCE**

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, library. Avail. immediately.
416.439.4054 / 416.899.4835

**MORNINGSIDE & SHEPPARD**

2 Bedroom walkout bsmt apt. for rent. Sep.entrance, parking, laundry, cable, internet, utilities. Close to TTC, mall, library, U.F.T Scar., centennial college Tamil stores. Students, Small families, working ladies preferred. Avail.immediately.
416.830.0643/416.533.0768

**MCCOWAN & 14TH AVE. IN MARKHAM**

2 Bedroom bsmt apt. for rent. Sep.entrance, laundry. Close to markville mall, 407hwy, TTC, both catholic & public schools. Avail.immediately. தொடர்புகளுக்கு:
416.571.7529 / ponna24@gmail.com

**WARDEN & FINCH**

1 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, bakery, mall, sneha college. Ladies preferred. Avail. February 03, 2010.
தொடர்புகளுக்கு: 416.894.1187

**SCAR. GOLF CLUB & ELLSEMERE**

1 Large bedroom bsmt for rent. Living room, kitchen, washroom, sep. entrance, parking, laundry. Avail. immediately. Close to school, ttc & all amenities.
416.431.9428 / 416.878.7231

**NEILSON & SHEPPARD**

1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, mall, school, hwy 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.866.9464

**BRIMLEY & MCNICOLL**

2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.866.9464

**KENNEDY & FINCH**

2 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, mall, school, temple. Avail. March 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.291.2796

**BELLAMY & BRIMORTON DR.**

3 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC. Avail. Anytime. அறைகள் தனித்தனியாகவும் வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:
416.938.6725 / 416.807.6977
416.289.7651

**MARKHAM & PAINTED POST DR.**

2 bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry, cable. Close to school, mall. Avail. immediately. Single family preferred.
தொடர்புகளுக்கு: 416.400.8125

**MIDDLEFIELD & DENISON**

1 Bedroom walkout bsmt for rent. Parking, cable, laundry. Close to TTC, mall.
தொடர்புகளுக்கு: 416.727.7550

**MORNINGSIDE & SEWELLS**

Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc. தொடர்புகளுக்கு: 416.551.8379

**McCOWAN & DENISON**

1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Washer, dryer, internet, cable & parking. Close to mall, TTC, tamil stores & hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.554.2496

**MORNINGSIDE & LAWRENCE**

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, shopping mall & other all facilities. Avail. Anytime.
416.902.1758 / 416.724.4752

# HOUSE FOR RENT

**STAINES & STEELES**

4 Bedroom house for rent. Single garage with all facilities. Close to TTC, mall, bank. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.786.2013

**NEILSON & SHEPPARD**

3 Bedroom bungalow house for rent. All facilities house. Close to TTC, mall, school. Avail. March 01, 2010.
தொடர்புகளுக்கு: 647.287.6810

**MIDLAND & EGLINTON**

3 Bedroom house. Main floor only. Close to TTC subway. Lot of parking big backyard, new kitchen, new washroom, washer, dryer. No smoking & No pets. Rent 1425 + hydro 50%.
416.629.7800/416.629.1256

**DONMILLS & SHEPPARD**

3 Bedrooms house for rent. Parking, laundry, cable, internet. Close to 5 நிமிட நடை தூரத்தில் பஸ் தரிப்பிடம், Donmills Subway, school, mall, DVP, hwy 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.502.8053

**MEDDLEFIELD & ELSON**

4 Bedroom house for rent. 2 Full washroom, indoor & outdoor parking, laundry. Close to TTC, school, mall & restaurants.
தொடர்புகளுக்கு: 647.822.7722

**NEILSON & FINCH**

3 Bedroom town house for rent. Parking, garage, laundry. Rent 1200 + utilities, including walkout bsmt . Close to TTC, Melvern mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.892.4474

**NEILSON & MCLEVIN**

4 Bedroom house for rent. Main floor 2½ washrooms, 4 parking. Close to TTC, school, mall etc. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவும் வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.724.7603

**MORNINGSIDE & SHEPPARD**

4 Bedroom house for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.575.5055

## வீடு வாடகைக்கு

இந்தியா தமிழ் நாடு சென்னையில் மிகவும் வசதியான 2 Bedroom கொண்ட furnished apt. வாடகைக்கு உண்டு. கனடாவில் இருந்து செல்பவர்கள் தங்குவதற்கான சகல வசதிகளும் கொண்டது. தண்ணீர் பிரச்சனையல்ல. மிகவும் பாதுகாப்பான இடம்.
தொடர்புகளுக்கு: 416.744.4357

# CARS FOR SALE

2002 Honda Accord Coupe - $4,700,
2005 Honda Accord - 2 door - $ 9,500,
2006 Ford fusion - $5,500,
2007 Acura CSX, 5 speed $15,900.
தொடர்புகளுக்கு: 416.575.5055

*விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு*
***www.vlambaram.com***

மேலும் பக்கங்கம் 23, 25

# ROOM RENT

**MARKHAM & STEELES**
2 Bedroom for rent. Close to TTC, YRT, walmart. வயதானவர்கள் விரும்பத்தக்கது. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.726.0897

**BIRCHMOUNT & MCNICOLL**
2 Bedroom upper level for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. February 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.335.8055

**PHARMACY & FINCH**
1 Bedroom for rent. Close to TTC, mall, college, school. Cable & internet free. Avail. immediately. Students preferred.
647.221.2252/416.496.8488

**MCCOWAN & FINCH SANDHURST CIRCLE EAST**
1 Room for rent. Close to tamil stores, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.298.3797

**MORNINGSIDE & FINCH**
3 rooms for rent. Parking, laundry, cable. Close to TTC, mall. Avail. Anytime. அறைகள் தனித் தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.351.0422

**KENNEDY & LAWRENCE**
1 Room for rent. Attached washroom, 3 min. walk to Lawrence RT. Meals optional. Available immediately.
416.994.9635/416.757.9456

**MIDDLEFIELD & ELSON**
Spacious rooms for rent. Sep. entrance. All amenities close by. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.300.4530

**WARDEN & FINCH**
Condo. இல் 1 அறை வாடகைக்கு உண்டு. Parking. Close to bus, Tamil stores, Tamil restaurant. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.499.6437
416.844.6437 / 416.855.9232

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom for rent. Sep.entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. immediately.
416.430.0097/647.280.7097

**McLEVIN & TAPSCOTT**
1 Master bedroom for rent. Attached washroom. Parking & cable.Close to TTC, mall, school. Backyard patio. Avail. immediately. 292 McLevin Avenue.
தொடர்புகளுக்கு: 905.640.0833

**2** நேரச் சாப்பாட்டுடன் (**2 meals)** நாலு அறைகள் கொண்ட **BSMT** இல் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. **Free internet.** தொலைபேசி குறைந்த கட்டணத்துடன் செய்துதரப்படும். ***Close to all*** facilities.
**PHARMACY & LAWRENCE**
தொடர்புகளுக்கு: 416.288.0303

**LAWRENCE & BELLAMY**
Main floor இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Everything included. Rent $350. Avail. immediately.
416.289.3459 / 416.433.0491

**McCOWAN & LAWRENCE**
Room for rent in bsmt. Sep. entrance.Parking. Close to hospital, tamil stores, 2 min. to bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.827.5529

**MIDLAND & LAWRENCE MARTINGROVE & REXDELE**
1 Room in an Aptartment for rent. Rent $ 400. Close to all facilities.
416.731.2833 / 416.615.0222

**MORNINGSIDE & McLEVIN**
2 அறைகள் உடன் வாடகைக்கு உண்டு. இணைந்த தனி குளியலறை. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. விபரங்களுக்கு:
416.732.6931/416.281.9888

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**FINCH & WARDEN**
One room for rent. Laundry, internet. Close to TTC, shopping mall. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.938.7510

**MARKHAM & ELSON**
1 Room for rent. Parking, laundry. Close to TTC, walmart, bank. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.703.1343

**MIDDLEFIELD & ELSON**
2 Rooms for rent. Attached washroom. Close to TTC, No Frills, school, tamil stores, Doctor. Avail. immediately. தொடர்புகளுக்கு:
905.471.5340 / 905.209.7359

**FINCH & MIDDLEFIELD**
Bsmt இல் 1 அறை தனித்தனியாக வாடகைக்கு உண்டு. Sep. entrance. Close to mall, ஐயப்பன் கோவில். No smoking. Ladies preffered. Avail. immediately.
416.493.0590/647.286.0590

**DANFORTH & EGLINTON**
Shared Room for rent in bsmt. Another room available for a lady in main floor. Close to bus, stores, 5 min. to Kennedy subway. Males only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.201.3111

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Attached washroom, Double garage. Close to everything.
Call: 416.335.8055/905.294.2674

தனிப்பட்டவர் ஆண், பெண், தங்குவதற்கான Room உண்டு. Norht York, Etobicoke பகுதிகளில் சகல வசதிகளும் கொண்டது. Bus Stopற்கு முன்னால் Shopping mallக்கு அருகில்.
தொடர்புகளுக்கு: 416.744.4357

# JOB JOB JOB

**KENNEDY & ELLESMERE** சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் சுப்பர் மார்கட் ஒன்றின் மீன் பகுதிக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. மேலதிக
தொடர்புகளுக்கு: 647.430.8238

***MARKHAM & STEELES***
பகுதியில் அமைந்திருக்கும் முடி திருத்தும் நிலையத்திற்கு வேலைக்கு ஆள் தேவை. நியாயமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.879.1476

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கம் 22, 25

# CONDO FOR RENT

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom condo. for rent. 3rd floor. New building. Washer & dryer, parking, gas, water, heater included. Avail. immediately.
416.904.0842 / 416.831.2550
416.728.7580

# TUTION CLASSES

Maths, English, Science, Art & Tamil.
(JK – Gr. 3) Preparation for next grade.
• Homework help • Flexible time.
1 to 1 or group classes.
Call: 905.554.2496

# தமிழ் வகுப்பு

பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தரம் 1 - தரம் 12 வரை உள்ள மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கப்படும். உங்கள் பிள்ளைகளும் தமிழில் எழுத வாசிக்க அழையுங்கள். 905.554.2496

# WANTED

Used Toyota Corolla 1993 - 1997 தேவை. AC, Airbag.
Raj - 647.269.6552

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட யாழ். பல்கலைகழகத்தில் Physical Science 4th year இல் படித்துக் கொண்டிருக்கும் 21.08.1984 ஆம் ஆண்டில் பிறந்த பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுகின்றோம். Sponsor செய்யக் கூடிய வரனாக இருக்க வேண்டும்.
தொடர்புகளுக்கு: 416.284.8757

# CONDO FOR SALE

**MIDDLEFIELD & FINCH**
1+den condo. for sale. 1 Washroom. 3 Years old. Low rise condo. Low Maintenance fees. For sale immediately. தொடர்புகளுக்கு:
416.894.1950 / 647.448.6464

# HOUSE FOR SALE

**EGLINTON & DANFORTH NEW TOWN HOUSE**
4 Bedrooms house for sale. 1St owner.
தொடர்புகளுக்கு: 647.201.3111

**THARANEE ELECTRICAL SERVICES**
அனைத்து மின் இணைப்பு தருத்த வேலைகளுக்கும், கனடிய அரசு அங்கீகாரம் பெற்றவர் மூலம் பாதுகாப்பான முறையில் உங்கள் அனைத்து மின்சார வேலைகளையும் செய்து கொள்ள அழையுங்கள்.
Big or Small Job
Licensed Electrician Bala : 647.284.6141

## மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த நன்கு படித்து பட்டதாரியான( M.A பொது நிர்வாகம்) தற்பொழுது நூலகராக பணிபுரியும் 1981 ஆம் ஆண்டு பிறந்த செவ்வாய் குற்றம் உள்ள அழகிய பெண்ணுக்கு தகுந்த நல்ல வரனை பெற்றோர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தேடுகின்றார்கள். (வெளிநாடு விரும்பத்தக்கது)
உள்நாட்டில் - 011.94.021.3214223
வெளிநாட்டில் - 416.710.2686

## மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த கொழும்பில் தொழில்புரியும் 36 வயதுடைய மணமகளுக்கு தாயார் தகுந்த வரனை தேடுகிறார்.
தொடர்புகளுக்கு: 416.562.1573

# Car for Sale



2005 - Honda Accord LX-G Sedan. Automatic, Black, $13500,00 negotiable. Legendary honda quality and reliability. Air conditioning, Alarm, AM/FM stereo, anti - lock brakes, CD player, grey cloth interior, cruise control, dual air bag, heated mirrors, intermittent wipers, keyless entry, power brakes, power locks, power mirrors, power trunk, power windows, rear defroster, tilt steering, Tinted glass, 4 cyl , VTEC automatic 2.4 L engine, accident free/dealer serviced and owned by a non - smoker.
***416.754.0953 - Evenings & Weekends / 416.638.6970 - Daytime***

# JOB JOB JOB



Roti செய்யத் தெரிந்தவர்கள் முழுநேர வேலைக்குத் தேவை.
***416.799.4528 /416.276.8168 / 289.400.3434***
Cook position also available.

# JOB AVAILABLE

Travel Agency நிறுவனத்தில் தொழில் புரிவதற்கு ஆள் தேவை. முன் அனுபவம் தேவையில்லை. பயிற்சி வழங்கப்படும். ஆங்கிலம், தமிழ் சரளமாக பேசக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.
Fax - 416.323.1316
E - mail - Mansukhvilla@hotmail.com.



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

**BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490**

**Tutorial 253**

## Questions

1. Beginning precisely at 6'0 clock it takes 5 seconds for a clock to strike 6'0 clock. If the strikings are uniformly spaced, the time in seconds to strike 12'0 clock is
   a. 9 1/5 b.10 c. 14 2/5 d. 12 e.11 (For grade 7 to 8)

2. Two men and two boys wish to cross a river. Their small canoe will carry the weight of only one man or two boys. The minimum number of times the canoe must cross the river to get all four people on the opposite shore is a. 5 b. 6 c. 7 d. 8 e. 9 (For grade 7 to 8)

3. Show that p(5,8) and q (17 - 22) are points on the line that passes through A (7,3) with direction vector (2, -5) (For grade 12 students)

4. Find the vector equations of the two lines that bisect the angles between the lines $r_1 = (5, 2) + t(-3, 6)$
   $y_2 = (5, 2) + u(11, 2)$ (For grade 12 students)

5. By using one sided limits determine whether the limit exists a. $\lim_{x \to 5} \frac{|x-5|}{x-5}$ b. $\lim \frac{|x-5|(x+1)}{2x-5}$ c. $\lim_{x \to -2} \frac{(x+2)^3}{|x+2|}$

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

MATH, SCIENCE & PHYSICS under taken for ALL Grades from Gr. 3 to University 1st year. Special classes in Functions, vector, Calculus & Data Management.

Individual & group classes available By an experience teacher: S.F. Xavier

**CONTACT: 647.340.9490 / 647.831.0070**

**Tutoring**



*Tutoring for students from grade 3 to 12.*

Courses include: Math, Science, Algebra and Geometry, Advance Function, Physics, Chemistry and English. Also tutoring available for University student.

*You will have a better chance of achieving your goals. Courses taught by experience University graduates. Cost for the courses areas the following:*

Grade 3 to 5 from $30.00/month
Grade 6 to 8 from $40.00/month
Grade 9 to 12 from $50.00/month
Location: Near **Birchmount & Sheppard.**

For more information contact *Kula* (B.Engineer McMaster University Canada, B.Sc Jaffna University SriLanka) at
**Home: (416) 850-9397 Cell: (416) 317-9413**




**Tutoring/Coaching**

*(Markham & Lawrence, Scarborough)*

*Grade 1-12, College & University*

*English, French, Math, Science*

**High School:** Physics, Chemistry, Math (Data Management, Calculus, Advanced Functions)

**College (all Years):** Math, Physics, Chemistry, & Engineering Subjects

**University (1st Year):** Math, Physics, Chemistry, & Engineering Subjects

**Coaching Services:** PPE Exam for Professional Engineers Ontario (PEO), PPE for Ontario Association of Technicians and Technologists (OACETT)

**Call Liz at: 416 997 2384**

# 'விளம்பரம்' பத்திரிகையின்...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

ஓடும் நீர் உறைவதில்லை என்னும் தொடர்கட்டுரையாளர் கே.ஜி. மாஸ்ரர் உரையாற்றும்போது எம்மத்தியில் உள்ள பிரச்சினைகளுக்கு நாமே தீர்வுகாண வேண்டும். நாம் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தை முன்வைத்து உரையாற்றினர்.

நிதியியல் தொடர்பான கட்டுரை எழுத்தாளர் பெரி. முத்துராமன் உரையாற்றும்போது விளம்பரம் பத்திரிகையில் எழுதும்படி என்னிடம் கேட்டக்கொண்டார் நண்பர் மகேந்திரன் அவர்கள். அதன்படி நாட்டின் நிதி தொடர்பாக எழுதி வருகின்றேன். இப்பத்திரிகை மிகச் சிறப்பான கட்டுரைகள், கதைகள் போன்றவற்றிற்கு இடம் ஒதுக்குகின்றன. பலராலும் விரும்பிப் பார்க்கப்படும் ஒரு பத்திரிகை யாக விளம்பரம் உள்ளது என்றார்.

வின்சர் பல்கலைக்கழகத்துப் பேராசிரியரும் கவிஞருமான சேரன் உரையாற்றும்போது ஊடகத்துறையில் பல நவீன முறைகள் கையாளப்படுகின்றன. ஊடகங்களுக்குத் தங்கள் படைப்புக்களைத் தருவோர் தாம்பெற்ற தகவல், திரட்டிய செய்திகள், மேற்கோள்கள் எங்கே பெறப்பட்டன என்பதனைப் பதியவேண்டியது பத்திரிகைத் தர்மமாகும். அல்லது அது திருட்டு எனக்கருதப்படும். நாம் தகவல்களைப் பெற்றுத்தான் எழுதுகின்றோம். அவற்றை எங்கே பெறுகின்றோம் என்பதனைக் குறிப்பிட வேண்டியது முக்கியமானது என்றார்.

கவிநாயகர் வி. கந்தவனம் அவர்கள் உரையாற்றும்போது சில பத்திரிகையா-ளர்கள் படைப்பாளிகளை நாடிப்போகின்றார்கள், சில பத்திரிகை களை நாடி எழுத்தாளர்கள் போகின்றார்கள். இராஜா மகேந்திரன் தம்பதியினர் நல்ல எழுத்தாளர்களைத் தேடிச்சென்று ஆக்கங்களைப் பெற்றுத் தருகின்றார்கள். இதனால் அவர்களது பத்திரிகை ஒரு தரத்தை உடையதாக வெளிவருகின்றது என்றார்.

மேலும் சபையில் இருந்தோரின் பாடல்களும், நகைச்சுவைகளும் இரவு விருந்துடன் வழங்கப்பட்டன.

இறுதியாக திரு. மகேந்திரன் அவர்கள் தங்கள் பத்திரிகை சில வரையறைகளோடு வெளிவருகின்றது. விளம்பரம் என்ற பெயரைத்தாங்கினாலும் விளம்பரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதிலும் கட்டுப்பாட்டோடுதான் இருக்கின்றது என்றார்.

# 'கொக்குவில் நம் ஊர்' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், கொக்குவில் கிராமம் பற்றிய 'கொக்குவில் நம் ஊர்' நூல் வெளியீட்டு விழா சென்ற 27-12-2009 ஞாயிற்றுக்கிழமை மாலை கனடா கந்தசுவாமி கோவில் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. விழா வைத் தலைமை தாங்கித் தொடக்கி வைத்தார் கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையக் காப்பாளர் திரு. சி. குகனேந்திரன்.



திருமதி நாமகள் சிவகுமாரின் இறை வணக்கத்தின் பின் தாயகத்தில் மரணித்த அனைத்து உறவுகளையும், போராளிகளையும் நினைவு கூர்ந்து சில நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. கனடா கந்தசுவாமி கோயில் சிவாச்சாரியார் சிவஸ்ரீ பரமானந்த வாசு தேவக்குருக்கள் (வாசு ஐயா) ஆசியுரை வழங்கினார். தலைவர் அவர்கள் தனது தலைமையுரையில் விழாவிற்கு வருகை தந்திருந்த அறிஞர் பெருமக்களையும், மற்றையோர்களையும் வரவேற்றுப் பேசி 'கொக்குவில் நம் ஊர்' என்ற நூல் இருவரால் ஆக்கப்பட்டிருப்பினும், பலரிடமிருந்தும் திரட்டிய தகவல்களே இந்நூலுக்கு மூலாதாரமானதால், மேலதிக தகவல்களும் இடம்பெற வேண்டும் எனக்கருதுவோர் அவற்றை தகுந்த ஆதாரங்களுடன் தெரிவித்தால் மறுபதிப்பில் சேர்த்துக்கொள்ள முயற்சிப்பதாகக் குறிப்பிட்டார்.

நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றிய பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் 'ஓர் இனத்தினதும் அந்த இனம் வாழ்ந்த இடத்தினதும் பூர்வீகத்தை அறிந்து கொள்வதற்கு ஊர்ப்பெயர் வரலாற்று நூல்கள் வெளிவருவது காலத்தின் கட்டாயம் எனவும் இந்நூல் பல்வேறுபட்ட தரவுகளைத் திரட்டி ஆவணமாகத் தந்துள்ளமை எதிர்காலச் சந்ததியினர் கொக்குவில் பற்றி அறிய வாய்ப்பளிப்பதாக உள்ளது. இது ஈழத் தமிழர் இல்லங்களில் இடம்பெற வேண்டிய ஒரு நூல்' எனக் கூறிப் பாராட்டினார்.

அடுத்து, நூலை ஆய்வுரை செய்த திரு. சாமி அப்பாத்துரை அவர்கள் 'பேராசிரியரின் உரையே ஓர் சிறந்த ஆய்வுரையாக அமைந்து விட்டதெனவும், கொக்குவில் ஓர் கிராமமும் அல்ல, நகரமுமல்ல. இரண்டும் கலந்த ஊர், அங்கு வசித்த, வசிக்கின்ற கல்விமான்கள், தொழில் அதிபர்கள் போல் கனடாவிலும் வாழ்ந்து வருவது கொக்குவிலுக்கு பெருமை அளிப்பதெனக்கூறி, நூலின் பொருட் சிறப்பிற்கேற்ற தகுதியுடன் நூலின் முகப்புப்படம் அமைந்திருப்பதையும்,' வெகுவாகப் போற்றினார்.

பேரறிஞர் திரு. முருக வே. பரமநாதன், திருமதி சுகிர்தலட்சுமி சுப்பிரமணியம் இருவரினதும் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

நிறைவாக நூலாசிரியர்களில் ஒருவரான த. செ. நடராசா நூல் உருவான வரலாற்றினை எடுத்துக்கூறி, தங்கள் அழைப்பை ஏற்று விழா விற்கு வந்திருந்து சிறப்பித்த அனைவருக்கும், நூலை இன்முகத்துடன் பெற்றுச் சென்றோருக்கும், மற்றும் சகல வழிகளிலும் உதவிபுரிந்த அன்பர்கள், ஆதரவாளர்கள் யாவருக்கும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இறுதி நிகழ்ச்சியாக நூலாசிரியர்கள் இருவரும் கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையக் கனடா கிளையினரால் 'வரலாறு வளர்க' என்ற கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் விழா 8:30 மணியளவில் இனிது நிறைவெய்தியது.

Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga -905.712.2666

## கனேடிய இத்தாலிய உணவகம் விற்பனைக்கு

விழா மண்டபம் (Banquet Hall) அடங்கிய Hotel உடன் இணைந்த 360 இருக்கைகள் கொண்ட 10,000 சதுர மீற்றருள்ள நல்ல வருமானம் கூடிய கனேடிய இத்தாலிய நாட்டு உணவு பரிமாறும் உணவகம் ஒன்று ரொறொன்ரோவில் இருந்து 500 கி.மீ. (Km) தொலைவில் நெடுஞ்சாலை 11 இல் விற்பனைக்கு உண்டு. மிகக் குறைந்த வாடகை (மாதத்திற்கு $1300) டொலர்கள் மாத்திரமே. வியாபாரம் இன்மையோ, வேறு காரணங்களோ இல்லை. தனிப்பட்ட காரணங்கள் ஆகும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

416.569.8456

# சினிமா விமர்சனம்...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

ராம்ஜியின் ஒளிப்பதிவு நன்றாக வந்திருக்கிறது. ஆனால் கிராபிக்ஸ் காட்சிகள் ஒட்டாமல் ஒட்டுப் போட்ட மாதிரி தனித்து தெரிகின்றன. பாடல்கள், இசை இரண்டும் சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை. வழக்கமாய் யுவனோடு கைகோர்க்கும் செல்வராகவன், இதில் ஜீ.வி.ப்ரகாஷ்குமாரோடு கைகோர்த்திருக்கிறார். 'நில்லாடிய சபையெங்கே' என்ற பாடல் பரவாயில்லை.

படத்தில் பாராட்டப்பட வேண்டிய இன்னொரு இருவர்: காஸ்ட்யூம் டிசைனர் இரம் அலி, கலை இயக்குநர் சந்தானம். பண்டைய காலம், பண்டைய காலத்தவர்கள் இன்று வாழும் இடம் எல்லாவற்றையும் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள்.

கொஞ்சம் சிக்கலான திரைக்கதையால் பலருக்கும் புரியாத வண்ணம் இருப்பதுதான் படத்தின் மிகப்பெரிய பலவீனம். இவ்வளவு



கஷ்டப்பட்டு படமெடுத்திருக்கும் செல்வராகவன், கிளைமாக்ஸையும் இன்னும் கவனமாக செதுக்கி இருக்கலாம். சினிமாத்தனமாக இருந்தாலும், குழப்பமில்லாமல், தெளிவாக முடித்திருக்கலாம்.

படத்தின் கதாநாயகன் ரீமா சென்தான்! ரீமா சென். ரம்யா கிருஷ்ணனுக்கு படையப்பா மாதிரி ரீமாவுக்கு ஆயிரத்தில் ஒருவன். எந்த நடிகையும் நடிக்கத் தயங்கும் பல காட்சிகளில் புகுந்து விளையாடியிருக்கிறார். ரீமா சென்னுடன் பார்த்திபனும் நடிப்பில் கலக்கியிருக்கிறார்.

ஆயிரத்தில் ஒருவன் - புதுமை. துணிச்சல். பிரமாண்டம் மூன்றும் இணைந்த இழப்பின் கொடுஞ்சித்திரம்.



## யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# ரஜினிகாந்த்: ஒன்றிலிருந்து அறுபது வரை

சென்ற இதழ் தொடர்ச்சி:



21. ரஜினியை அறிமுகப்படுத்தியவர் இயக்குனர் கே.பாலச்சந்தர் என்றால், அவரை ஒரு கதாநாயகனாக அறிமுகப்படுத்தியவர் கதாசிரியர் கலைஞானம். படம் 'பைரவி'. இந்தப் படத்துக்காக கலைஞானத்திடம் இருந்து ரஜினி வாங்கிய அட்வான்ஸ் தொகை 5,000. இதுதான் ரஜினிகாந்த் வாங்கிய முதல் பெரிய அட்வான்ஸ் தொகை. இந்தப் படத்தின் போஸ்டரில்தான் முதன்முதலாக, 'தி கிரேட் சூப்பர் ஸ்டார் ரஜினி' என்று அச்சிட்டு ஒட்டப்பட்டது.

22. 'சூப்பர் ஸ்டார்' என்ற அடைமொழியை ரஜினிக்கு வழங்கியவர் கலைப்புலி எஸ்.தாணு. 'பைரவி' படத்தின் விநியோகஸ்தரான இவர்தான் 'பைரவி' படத்தின் போஸ்டர்களில் 'சூப்பர் ஸ்டார்' என்பதை சேர்த்து சென்னை நகரின் சுவர்களில் ஒட்டினார். பின்னர் அதைப் பத்திரிகை விளம்பரங்களிலும் இடம்பெறச் செய்தார். இதன்பிறகே அடுத்து வந்த படங்களில் 'சூப்பர் ஸ்டார்' ரஜினிகாந்த் என்ற பெயர் இடம்பெற ஆரம்பித்தது.

23. சிவாஜிராவ் ஆக கர்நாடகாவில் பஸ் கண்டக்டர் பணியில் இருந்தபோது ரஜினியின் விதவிதமான ஸ்டைலை பார்ப்பதற்கே பஸ்சில் கூட்டம் அலைமோதுமாம். அதைப் பார்த்துவிட்டுதான் ரஜினி நடிப்பு தொழிலைப் படிக்க சென்னை வந்தார். அப்போது ரஜினியின் படிப்பு செலவுக்காக உதவிய பெங்களூர் பஸ் டிரைவர் ராஜ்பகதூர். ரஜினியை இப்போதும் உரிமையோடு 'டா' போட்டு அழைக்கும் நண்பர்களில் ஒருவர், ராஜ்பகதூர்.

24. தன் இளம் வயது நண்பர்களை தூக்கிவிட தன்னால் ஆனதை செய்துகொண்டே இருப்பார் ரஜினி. ஃபிலிம் இன்ஸ்டிட்யூட் நண்பரான நட்ராஜை தனது படங்களில் நடிக்க வைத்ததோடு, 'அன்புள்ள ரஜினிகாந்த்' மூலம் அவரை இயக்குனராக்கி அழகு பார்த்தார். ஆனால், தனக்கு எவ்வளவு நெருக்கமானவர்களாக இருந்தாலும் கூட 'பரிந்துரை' செய்வதை தவிர்ப்பார் ரஜினி.

25. ரஜினி, திரைப்படத் துறையில் நுழைந்து உழைத்து சம்பாதித்த பணத்தில் சென்னையில் சொந்தமாக ஒரு வீடு கட்டி முடிந்ததும், அந்தத் தன் முதல் சொந்த சொத்தை, தந்தையை அழைத்து வந்து காட்ட விரும்பினார். பெங்களூருக்குச் சென்றார். ஆனால், அவரது தந்தைக்கு ஏற்கெனவே கண்பார்வை போயிருந்தது. ரஜினியின் மாறாத சோகங்களில் இதுவும் ஒன்று. இப்பொழுதும் நண்பர்களிடம் இதை ரஜினி சொல்வார்.

26. ஆரம்பத்தில் தனது வரவு செலவு கணக்குகளை கர்நாடக வங்கியிலேயே செய்து வந்த ரஜினி, இப்போது இந்தியன் வங்கியிலும் வாடிக்கையாளராக இருக்கிறார். ஆனால், ரஜினிகாந்த் இதுவரை எந்த கிரெடிட் கார்டையும் வைத்திருந்தது கிடையாது. பர்ஸ் வைத்துக்கொள்ளும் பழக்கமும் ரஜினியிடம் கிடையாது. வெளியே புறப்படும்போது 500 ரூபாய் தாளை வைத்துக்கொள்வது பழக்கம்.

27. ரஜினியின் தனிப்பட்ட செலவுகளில் பெரும் அளவில் இடம்பிடிப்பது வெளிநாட்டுப் பயணங்களுக்கானது தான். செலவு அதிகமில்லாத பயணம், இமயமலை. இமய மலைக்கு போகும்போது வெட்கம், அகங்காரம், போட்டி, பொறாமைன்னு எதுவுமே இல்லாம மனசு லேசாகிடும் என்று கூறியிருக்கிறார் ரஜினி.

28. ரஜினிகாந்த் முதன்முதலாக மீசை இல்லாமல் நடித்த படம், 'தில்லு முல்லு'. முதன்முதலில் இரட்டை வேடத்தில் நடித்தது, 'பில்லா'. நடித்த முதல் வண்ணத் திரைப்படம் '16 வயதினிலே', 1977ஆம் ஆண்டு வெளியானது. முதன் முதலில் மூன்று வேடங்களில் நடித்தத் திரைப்படம், 'மூன்று முகம்'. 1982ஆம் ஆண்டு வெளியானது. முதன்முதலில் சிறந்த நடிகருக்கான தமிழக அரசின் விருதைப் பெற்றது 'முள்ளும் மலரும்' படத்துக்காக. முதன்முதலாக சொந்தமாக தயாரித்த படம், 'மாவீரன்'. முதன்முறையாக சொந்த குரலில் பாடியது, 'மன்னன்' படத்தில் 'அடிக்குது குளிரு..' என்ற பாடல்.

29. ரஜினிக்கு பிடித்தவை: நடிகர்களில் மார்லன் பிராண்டோ, நடிகைகளில் லட்சுமியும் ஷர்மிளா தாகூரும், இயக்குநர் கே.பாலசந்தரின் கோபம், சிவப்பு நிறம், கருப்பு உடைகள், டன்ஹில் சிகரெட், ஷீவாஸ், ரீகல், வாட் 69, ஷாம்பெய்ன் மது வகைகள். தி.ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்', 'மரப்பசு', கல்கியின் 'பொன்னியின் செல்வன்' நாவல்கள். அரசியல்வாதி சிங்கப்பூரின் லீ குவான் யு, சந்திரபாபு பாடல்கள் (சந்திரபாபு பாடல்கள் அடங்கிய கேஸட்டுகள் எல்லாவற்றையும் வாங்கி வைத்திருக்கிறார். அவற்றை அடிக்கடிப் போட்டு நடனமாடுவது ரஜினி வழக்கம்.)

30. ரஜினிகாந்த் நடித்த படங்களிலேயே அவரது மகள் ஐஸ்வர்யாவுக்கு மிகவும் பிடித்த படம், 'மூன்று முகம்'. இந்தப் படத்தில் வரும், "டிஎஸ்பி அலெக்ஸ் பாண்டியன் பேரைச் சொன்னால்..." என்று தொடங்கும் புகழ்பெற்ற வசனம் படப்பிடிப்பில் ரஜினியே சொந்தமாக சொன்னது.

31. தனது வீட்டிலுள்ள பெரிய கண்ணாடி முன்பு நின்று தனது அசைவுகளைப் பார்த்துக்கொண்டே வசனத்தைப் பேசி, ஸ்டைல் பண்ணி ஒத்திகை பார்ப்பது ரஜினி வழக்கம்.

32. 1975ஆம் ஆண்டு வெளியான 'அபூர்வ ராகங்கள்' தொடங்கி, கடைசியாக 2008இல் வெளியான 'குசேலன்' முடிய ரஜினி நடித்து வெளியான திரைப்படங்களின் எண்ணிக்கை 176. 'சிவாஜி' 175ஆவது படம், 100ஆவது தமிழ் படமும்கூட. 85 படங்கள் இதுவரை தமிழில் இருந்து வேறு மொழிகளுக்கு டப்பிங் செய்யப்பட்டுள்ளன. ரஜினி ஒரு ஆங்கிலப் படத்திலும் நடித்துள்ளார். படம், 'பிளட் ஸ்டோன்'. 1988ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் தேதி வெளியானது. ரஜினியை வைத்து அதிகமாக படங்கள் எடுத்த ஒரே இயக்குனர் எஸ்.பி.முத்துராமன். மொத்தம் 25 படங்கள்.

33. ரஜினிகாந்த தயாரித்தப் படங்கள்: 'மாவீரன்', 'பாபா', 'வள்ளி', 'அருணாசலம்', 'படையப்பா', 'மின்னல்' (டப்பிங்). இதில் 'மின்னல்' ரஜினிகாந்த் நடித்த படங்களில் பெண் இயக்குநர் இயக்கத்தில் ரஜினி நடித்த ஒரே படமும்கூட. அந்தப் பெண் இயக்குநர், விஜய் நிர்மலா, தெலுங்கு நடிகர் கிருஷ்ணாவின் மனைவி.

34. ரஜினி நடித்து சென்சார் செய்யப்பட்டும் கூட வெளிவராத படம் 'மனைவி உருவாகிறாள்'. இந்தப் படத்தில் ரஜினி கௌரவ வேடத்தில் நடித்திருந்தார்.

35. ரஜினி நடித்த 176 படங்களில் 70 படங்கள் 100 நாட்களுக்கு மேல் ஓடிய 'மெகாஹிட்' வெற்றிப் படங்கள். இதில் அதிக நாட்கள் ஓடியது, 'சந்திரமுகி', 715 நாட்கள். 'படையப்பா', 'பாட்ஷா', 'அருணாசலம்', 'மன்னன்' ஆகியவை 200 நாட்கள் ஓடிய படங்கள். 25 வாரங்கள் ஓடியது 18. 150 நாட்கள் ஓடியது 5. 100 நாட்கள் ஓடியது 36. ரஜினியின் 'முத்து' தமிழகத்தில் 100 நாட்கள் ஓடியதுடன், ஜப்பானில் அதிக நாட்கள் ஓடிய முதல் தமிழ் திரைப்படம் என்ற சாதனையையும் படைத்தது.

**- பிலிம் நியூஸ் கிருஷ்ணன் -**

36. 27. அதிக எண்ணிக்கையிலான ரஜினியின் படங்களுக்கு இசையமைத்தவர் இசைஞானி இளையராஜா. இளையராஜாவை "சாமி" என்றே மரியாதையுடன் அழைப்பார் ரஜினிகாந்த்.

37. ரஜினியை வைத்து படம் எடுக்க வேண்டும் என்ற ஆசை எல்லா பட அதிபர்களுக்கும் உண்டு. ரஜினிக்கு கலைஞர் கருணாநிதி கதை - வசனத்தில் நடிக்க வேண்டும் என்ற ஆசை உண்டு. அது இன்றுவரை நிறைவேறவில்லை. ஆனால், இன்றைய சூழ்நிலையில் இது தெரிந்தால் கருணாநிதி உடனே பேனாவுடன் உட்கார்ந்து விடுவார். ஆனால், ரஜினி விரும்புவாரா என்பது சந்தேகம்தான்.

38. ரஜினியின் அரசியல் பிரவேசம் பற்றி அவ்வப்போது பத்திரிகைகள் ஏதாவது செய்தி போடுவதும், அதை நினைத்து ரசிகர்கள் பரபரப்பாகி கனவு காண்பதும் அடிக்கடி நடக்கும் நிகழ்வுகள். தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியாவின் பிற மாநிலங்களிலும், ஏன் பிற நாடுகளிலும்கூட ரஜினியின் வெறித்தனமான ரசிகர்களுக்கு, ரஜினி அரசியலுக்கு வருவாரா, மாட்டாரா என்பது மில்லியன் டாலர் கேள்வியாகவே இன்றும் தொடர்கிறது.

39. ரஜினியின் அரசியல் பிரவேசம் போல், அவரது ரசிகர்களுக்கு ஒரு தொடரும் மர்மமாகவே இருப்பது அவரது ஆன்மீக ஈடுபாடு. "நான் ஆன்மீகவாதிதான். ஆனால், ஒரு கன்னத்தில் அறைந்தால், இன்னொரு கன்னத்தைக் காட்டும் அளவுக்கு ஆன்மீகத்தில் இன்னும் உயரவில்லை. அந்த மாதிரியான ஆன்மீகவாதியாக ஆவதற்கு எனக்கு விருப்பமும் இல்லை" என்று ஒரு சினிமா விழாவில் பேசினார் ரஜினி.

40. தனது குருநாதர் இந்திய மத்திய அரசு வழங்கும் உயரிய விருதான பத்மவிபூஷன் விருதை 2000 ஆண்டில் ரஜினிக்கு வழங்கப் பட்டது. 2000, ரஜினியின் சினிமா வாழ்வின் வெள்ளிவிழா ஆண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த இதழில் முடியும்.


**வீடு, மனை, நிலம், வியாபாரம், வியாபாரக்கட்டிடம் வாங்க, விற்க அழையுங்கள்**





**KESH DOSANJH** *M.A. ECON.*

Sales Representative

Cell: 416-836-9530 Office: 416 - 321-6969

Email: kdosanjh@trebnet.com

*HomeLife GTA Realty Inc.,* Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

*1711 McCowan Rd. #206, Toronto*

*145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666*

**Independently owned & operated*

**கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது**

# இலங்கையின் தேர்தலும் ஜனநாயகத்தின் வெற்றியும்

மாமன்னருக்கு மகுடம் சூட்டும் வரலாறு காணாத தேர்தல் நடந்து முடிந்து விட்டது. சர்வாதிகாரத்தின் அத்தனை அவலட்சணங்களும் மேடையேற்றப்பட்ட மிகக்கேவலமான இந்நாடகத்தை சற்று விபரமாக ஆராய்ந்து பார்ப்போம்.

நாட்டின் பொதுச் சட்டத்தையும், தேர்தல் சட்டத்தையும் பண்பாட்டையும் தூக்கியெறிந்த அரசாங்கம், தேர்தல் தினத்திலிருந்து கடைசி தேர்தல் முடிவை அறிவிக்கும் வரை கீழ்த்தரமான நாடகத்தை திட்டமிட்டு அரங்கேற்றி, மகிந்த ராஜபக்ஸவுக்கு 57சதவீத வாக்குகளை அள்ளிக்கொட்டி மீண்டும் அவரை ஜனாதிபதியாக்கியுள்ளது. தேர்தல் அறிவிக்கப்பட்ட உடனேயே களத்தில் குதித்த ஜெனரல் சரத் பொன்சேகா அவர்களின் வரவு பெரும்பாலானவர்களின் வரவேற்பைப் பெற்றது. ஜெனரல் பொன்சேகா நிச்சயமாக வெற்றி பெறுவாரென எல்லோருமே எதிர்பார்த்தனர். சரத் பொன்சேகா வெற்றி பெறுவாரென இந்திய உளவுச் சேவை நிறுவனம் இந்திய அரசுக்கு அறிவித்திருந்தது. ஆறு வருட காலத்துக்கு சரத் பொன்சேகாவோடு வேலை செய்யத் தயாராகுமாறும் அது அரசுக்கு ஆலோசனை வழங்கியருந்தது. தனக்கு தோல்வி நிச்சயம் என்பதை உணர்ந்த அரசாங்கம், என்ன விலை கொடுத்தாவது இத்தேர்தலை வெல்வோம் என மார்தட்டிக் கூறியது மட்டுமல்லாமல் காடைத் தனத்தையும், வன்முறையையும் கட்டவிழ்த்து விட்டிருந்தது. அதோடு, சரத் பொன்சேகாவின் வெற்றியை பலவந்தமாக கைப்பற்றிக் கொள்வதற்கான பயங்கர திட்டமொன்றையும் தேர்தலன்று அரங்கேற்றியது.

தமது உயிருக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாலும், தேர்தல் தினத்தன்று வன்செயல்கள் வெடிக்கக்கூடுமென்பதாலும் சரத் பொன்சேகா அவர்கள் தனது வீட்டில் தங்கியிருக்காமல் வேறு இடத்தில் தங்க முடிவு செய்தார். அதன்படி, தனது அலுவலர்கள் சகிதம், தனக்குத் தேவையான ஆவணங்களையும் எடுத்துக்கொண்டு கொழும்பிலுள்ள பிரபலமான ஹோட்டலொன்றில் தங்கினார். இதுதான் அந்த நாடகத்தின் உச்சக்கட்டம் அரங்கேறிய சினமன் லேக் ஹோட்டல். அவர் அங்கு தங்கியிருப்பது இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. தேர்தலன்று இரவு வரை ஊடகங்கள் இதனை அறிந்திருக்கவில்லை. என்றாலும் அரசாங்க அதிகாரிகளுக்கு இது தெரியும். வாக்குகள் எண்ணப்பட்டு உத்தியோகப் பற்றற்ற முடிவுகள் வெளிவந்துக் கொண்டிருந்த நேரம். இந்த முடிவுகள் சரத் பொன்சேகா அவர்கள் பெரும்பான்மை வாக்கு வித்தயாசத்தில் வெற்றி பெறுவதை பறைசாற்றிக் கொண்டிருந்தன. இந்த நேரத்தில் தான் திட்டமிட்ட அந்த பயங்கர நாடகம் அதிகாரிகளால் அரங்கேற்றப்பட்டது. ஊடகங்களினதும், எதிர்க்கட்சியினதும் கவனத்தை வேறு பக்கம் திருப்புவதற்கான திட்டமொன்றை அதிகாரிகள் வகுத்தனர்.

அதற்கேற்ப, சரத் பொன்சேகா உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் சினமன் லேக் ஹோட்டலில் தங்கியிருந்து அரசுக்கெதிராக சதித் திட்டம் தீட்டுவதாக தேசியத் தொலைக்காட்சி, நடு ராத்திரியில் செய்தியொன்றை வெளியிட்டது. இந்தச் செய்தி வெளியிடப்பட்ட ஒரு சில நொடிகளுக்குள் 400 படை வீரர்கள் சினமன் லேக் ஹோட்டலை சுற்றி வளைத்தனர். ராணுவத்தின் 6 டிரக் வண்டிகள் பாதையின் குறுக்கே நிறுத்தப்பட்டன. அரசாங்கம் எதிர்ப்பார்த்தவாறு ஊடகங்களின் கவனம் ஒரேயடியாக சினமன லேக் ஹோட்டலின் பக்கம் திரும்பியது.

ஜெனரலை கைது செய்யப் போகிறார்கள் 27ம் திகதி அதிகாலை 1.2 மணியாகும் போது ஊடகங்களுக்கு இது சூடான செய்தியாக இருந்நது. இருந்தாலும், 27ம் திகதி காலை 6.7 மணி வரை எதுவுமே நடந்ததாகத் தெரியவில்லை. மேலும் 600 ராணுவ வீரர்கள் ஹோட்டலைச் சுற்றி நிறுத்தப்பட்டனர். ராணுவ டிரக் வண்டிகளை பாதையின் குறுக்கே நிறுத்தி பாதையை மூடிய இராணுவம் ஹோட்டலுக்கு வருவோர் போவோரையும் வாகனங்களையும் கடுமையாக சோதனையிட்டது. அந்த ஹோட்டலில் தங்கியிருந்த பெரும்பாலான வெளிநாட்டவர்கள் இந்த நடவடிக்கைகளைப் பார்த்து பயத்துடன் இருந்தனர். சிலர் உடனடியாக அங்கிருந்து வெளியேற தீர்மானித்ததோடு, மேலும் சிலர், இந்த நிலைமை குறித்து தத்தமது நாடுகளுக்கு அறிவித்துக் கொண்டிருந்தனர்.

ஹோட்டலைச் சுற்றி நின்றிருந்த இராணுவ வீரர்கள் 27ம் திகதி காலை 10 மணியளவில் படிப்படியாக ஹோட்டலுக்குள் நுழைந்தனர். ஹோட்டலின் லொபி யிலிருந்த அனைவரையும் சோதனையிட்ட ராணுவ வீரர்கள் ஜெனரலின் பாதுகாப்புக்காக நின்றிருந்த சிலரை கைது செய்ய வேண்டுமெனக் கூறியதோடு பாதுகாப்புக்காக நின்றிருந்த படை வீரர்களை ஒவ்வொருவராகக் கைது செய்யத் துவங்கினர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட படை வீரர்கள் விலங்கிடப்பட்டு பாதையில் வரிசையாக அமர்த்தப்பட்டனர். ஜெனரலின் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்த படை வீரர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்பட்டுக்கொண்டிருந்தனர். இதற்கிடையில் ஹோட்டலில் கூடிய ஜெனரலுக்கு ஆதரவளித்த கட்சித் தலைவர்களும், பிரதிநிதிகளும் ஏற்பட்டிருக்கும் நிலைமை தொடர்ப்பில் ஊடகங்களை அறிவுறுத்தத் தீர்மானித்தனர். உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அழைப்பை ஏற்று ஹோட்டலுக்கு வந்த ஊடகவியலாளர்கள் கடுமையான சோதனை கெடுபிடிகளுக்குப் பின்னரே ஹோட்லுக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டனர். ஊடகச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர்கள் சரத் பொன்சேகா அவர்கள் துன்புறுத்தப்படுவது குறித்து ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தனர். பகல் 12 மணியளவில் வெளிநாட்டு ஊடகவியலாளர்களைச் சந்தித்த ஜெனரல் பொன்சேகா தான் கைது செய்யப்படவிருப்பதாகவும், தனது உயிருக்கு ஆபத்து நேர்ந்திருப்பதாகவும் கூறினார். இந்தச்செய்தி சர்வதேச வலைப் பின்னலூடாக வெளிவரத் துவங்கியவுடன் அரசாங்கம் குழப்பமடைந்தது. அந்தச் செய்தி பொய். பொன்சேகாவின் பாதுகாப்புக்காகவே நாம் இராணுவத்தை நிறுத்தியுள்ளோம் என அரசாங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டது. இதேநேரம் ஹோட்டலில் தங்கியருந்த வெளிநாட்வர்களை வெளியேற்றுவதில் இராணுவம் ஈடுபட்டிருந்தது. பிற்பகல் 1 மணிளயளவில் ஹோட்டலின் இரண்டாம் மாடிக்குள் பிரவேசித்த இராணுவம் ஜெனரலின் பாதுகாப்புக்காக நின்றிருந்த மேலும் சில படை வீரர்களை கைது செய்தது. இந்த அடாவடித்தனங்களுக்கு மத்தியில் மகிந்த ராஜபக்ஸ பாரிய வெற்றியைத் தழுவியதாக தேர்தல் முடிவுகள் வெளிவந்துக் கொண்டிருந்தன.

சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிக்கும் கட்சித் தலைவர்கள், மாலை 6 மணிக்கு ஊடகச் சந்திப்பொன்றை நடத்தி ஏற்பட்டிருக்கும் ஆபத்து தொடர்ப்பில் மீண்டும் விளக்கமளித்தனர். இந்த ஊடகச் சந்திப்பு நடந்து கொண்டிருக்கும் தருணத்தில் அரச ஊடகங்கள் புதுமையான செய்தியொன்றைத் தயாரித்து ஒலிபரப்பின. ஜெனரலுக்கு ஆதரவளிக்கும் அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், ஜெனரலுக்குமிடையில் மோதல் ஏற்பட்டிருப்பதாக அந்தச் செய்தி கூறியது. இதன் விளைவாக மங்கள சமரவீர அவர்களை ஜெனரல் தாக்கியதாகவும், அநுர குமார திசாநாயக அவர்களுக்கும் ஜெனரலுக்குமிடையில் கருத்து மோதல் ஏற்பட்டிருப்பதாகவும் கூறி சம்பந்தமில்லாத சில காட்சிகளையும் காட்சிப்படுத்தியது. ஆனால், இச்சம்பவம் நடைபெறும் தருணத்தில் மங்கள் சமரவீர அவர்கள் மாத்தறையில் தங்கியிருந்ததை செய்தி தயாரித்தவர்கள் அறிந்திராததுதான் வேடிக்கை. அநுர குமார திசாநாயக உள்ளிட்ட கட்சிப் பிரதிநிதிகள் நடத்திய ஊடகச் சந்திப்பின் சில காட்சிகள் தனியார் தொலைக்காட்சி ஊடாக காட்டப்பட்டவுடனேயே புனையப்பட்ட அவதூறு அம்பலத்துக்கு வந்தது. பொய்களுக்கும், புனைந்துரைகளுக்கும் நீண்ட ஆயுள் கிடையாது என்பது இதன் மூலம் தெளிவாகியது.

ஜெனரலை கைது செய்யும் நாடகம் இரவு 10 மணி வரை அரங்கேறிக் கொண்டிருந்தது. பாதுகாப்புக்காக இருந்த படை வீரர்கள் அவர்களது உபகரணங்களுடன் கைது செய்யப்பட்ட பின்னர் இந்நாடகம் முடிவுற்றது. பாதுகாப்பற்ற நிலையிலிருந்த ஜெனரலுக்குப் பக்கத்தில் சாதாரண நபர்களே நின்றிருந்தனர். இரவு 10 மணிக்கு ஹோட்டலிலிருந்து வெளியேறச் சரத் பொன்சேகா தீர்மானித்தார். ஹோட்டலிலிருந்து வெளியே வரும்போது படை வீரர்கள் அவரை நெருங்கி சோதனையிட வேண்டுமென கூறினர். ஜெனரலின் பாதுகாப்புக்காகவே படை வீரர்கள் நிறுத்தப்பட்டிருந்தால், அவரை சோதனையிட வேண்டிய தேவை என்ன என்பதுதான் ஆச்சரியம். ஒரு சில நொடிகளிலேயே மேலிடத்து உத்தரவுக்கு ஏற்ப சோதனை வாபஸ் பெறப்பட்டது. ஹோட்டலிலிருந்து வெளியேறிய பொன்சேகா நேரடியாக தனது வீட்டுக்குச் சென்றார். இதற்கிடையில் ஜெனரல் சரத் பொன்சேகா நாட்டை விட்டு வெளியேறப் போவதாக அரசாங்கம் வதந்தியொன்றை பரப்பி விட்டிருந்தது. நாட்டை விட்டு வெளியேற நான் எந்தத் தவறும் செய்யவில்லை. நாட்டை விட்டு வெளியேற வேண்டிய தேவை எனக்கு கிடையாது ஜெனரல் உறுதியாகக் கூறினார்.

இந்த அவல நாடகம் அரங்கேறிக் கொண்டிருக்கும்போதே தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் வேறொரு திட்டம் செயல்பட்டுக் கொண்டிருந்தது. அரசியல் விளக்கமுள்ள அனைவரும் தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்கும் திட்டமென இதனை வர்ணித்தனர். ஏனைய தேர்தல்களின் போது, தேர்தல் ஆணையாளர் அலுவலகமும், ஊடக மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சும் வேகமாக இயங்கிக் கொண்டிருப்பதைக் காண முடியும். இதற்குக் காரணம் தேர்தல் முடிவுகளை வெளியிடும் போராட்டம்தான். இதற்கு முன் நடந்த அனைத்து தேர்தல்களிலும் தேர்தல் முடிவுகளை வெளியிடும் ஒழுங்கு முறையொன்றிருந்தது.

அந்தந்த மாவட்டங்களின் வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களிலிருந்து கிடைக்கும் முடிவுகள் இறுதியாக தேர்தல் ஆணையாளரிடமே வந்து சேரும். தொகுதி மட்டத்தில் கிடைக்கும் முடிவுகள் தேர்தல் ஆணையாளரின் ஒப்பத்துடன் ஊடக மற்றும் தகவல்தொழில் நுட்ப அமைச்சுக்கு பெக்ஸ் மூலம் அறிவிக்கப்படும். ஊடக மற்றும் தகவல் அமைச்சின் செயலாளர் அதன் மீது ஒப்பமிடுவார். பின்னர் அது, அங்கு பிரசன்னமாகியருக்கும் ஊடகவியலாளர்களிடம் உத்தியோகபூர்வ இறுதி முடிவாக ஒப்படைக்கப்படும். பின்னர், இதோ இன்னொரு தேர்தல் முடிவு என ஊடகங்கள் அறிவிக்கும். 26ம் திகதி இரவு ஊடக அமைச்சும், தேர்தல் ஆணையாளர் அலுவலகமும் பாழடைந்து காணப்பட்டன. இம்முறை தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் தேர்தல் ஆணையாளர் வேறு முறையொன்றைக் கையாண்டிருந்தார். வழமையாக அமைச்சுக்கு வரும் ஊடகவியலாளர்கள் தடுக்கப்பட்டனர். இறுதி முடிவுகளை நேரடியாக ஒலிபரப்ப வேண்டுமாயின், 150000 ரூபா கட்டணமாக செலுத்தி விசேட வலைப் பின்னல் வசதிகளைப் பெற வேண்டிய நிலை ஊடகங்களுக்கு ஏற்பட்டது. அந்தந்த தொகுதி மட்டத்திலிருந்து தனது பிரதிநிதிகளின் ஊடாகக் கிடைக்கும் முடிவுகள் கணினியில் பதிவு செய்யப்பட்டு ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பப்படும். தேர்தல் இந்த வலைப் பின்னல் நடவடிக்கையின் காரணமாக, ஆணையாளரின் உத்தியோகபூர்வ ஒப்பத்துடனான பிரதி ஊடகங்களுக்கு கிடைக்க மாட்டாது. இதனால், ஊடகவியலாளர்கள் தத்தமது ஊடக நிறுவனங்களில் தங்கியிருந்தார் களேயன்றி, ஊடக அமைச்சுக்கோ தேர்தல் ஆணையாளர் அலுவலகத்துக்கோ செல்ல முயற்சிக்கவில்லை.

தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியரொருவரிடமிருந்து 26ம் திகதி இரவு தொலைபேசி மூலம் திடுக்கிடும் தகவலொன்று கிடைத்தது. எமது அலுவலகத்தைச் சுற்றி இராணுவம் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஜனாதிபதியின் பாதுகாவலர்கள் அலுவலகத்துக்குள் நுழைந்தனர். அவருடன்..........ராஜபக்ஸவும் இருக்கிறார். சில அமைச்சர்களும் இருக்கின்றனர். அவர்கள் என்ன செய்யப் போகிறார்களோ தெரியவில்லை.


ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளோடு வந்த இந்த ராஜபக்ஸ தேர்தல் ஆணையாளரை அச்சுறுத்தியதாக நாடு பூராவும் கதை அடிபடுகிறது. வலைப்பின்னல் ஊடாக ஊடகங்களுக்கு வெளியிடப்படும் இறுதி முடிவு, மேற்படி ராஜபக்ஸவின் தேவைக்கேற்ப மாற்றப்பட்டதாக பரவலாக செய்திகள் அடிபடுகின்றன. அந்தந்த தொகுதி மட்டத்தில் கிடைத்த இறுதி முடிவுகளை மாற்றியமைத்து ராஜபக்ஸவுக்கு நன்மையளிக்கும் விதத்தில் அதனை கணினியில் பதிவு செய்து வலைப்பின்னல் ஊடாக வெளியிட்டதாக பேசப்படுகிறது.

மேலும் அரசாங்கத்துக்கு ஆலவட்டம் வீசும் கண்காணிப்பாளர்கள் தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் என்ற பெயரில் இயங்கி அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயல்படுவது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. சுயாதீன கண்காணிப்பாளர்கள் என்ற போர்வையில் அரசாங்கத்தின் தேர்தல் மோசடிகளை இவர்கள் மூடி மறைத்து நியாயமான தேர்தல் நடந்ததாக அறிக்கைகள் வெளியிடுகின்றனர்.

# கருந்துளைகளை இனம் காணல் - 9

கருந்துளைகளின் இயல்புகளில் ஒன்று ஒளியுட்பட எதனையுமே தம்மை விட்டு வெளியிற் செல்லவிடாமை என்பது தெரிந்து கொண்டோம். இந்த ஒளிதான் ஒரு பொருள் பற்றிய விபரங்களை எமக்கு எடுத்து வருகின்றது. அப்படியான ஒளியே கருந்துளைகளில் இருந்து வெளியே வராத இடத்தில் அதைப் பற்றிய விபரங்களை நாம் அறியமுடியாது. அதுமாத்திரமல்லாது, அது இருப்பது கூடத் தெரியாது. கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருந்துளைகளை, இப்பரந்த விண்வெளியில் எப்படிக் கண்டு பிடிப்பது என்பது விஞ்ஞானிகளைப் பொறுத்தவரையில் ஒரு பெரும் சவாலாக இருந்தது, இருக்கின்றது. ஆனாலும் ஆய்வாளர்கள் சளைக்காது விடாமுயற்சியுடன் தேடிக் கண்டு கொண்டார்கள் அல்லது இனம் கண்டு கொண்டார்கள் என்றே கூறவேண்டும். அதனைத்தான் இனிப் பார்க்கப் போகின்றோம்.

Accretion disk – வெண்சேர்க்கைத் தட்டு



## பேரண்டம் - 57

எங்களுக்குத் தெரியும், பேரண்டத்தினுள் உள்ள எதுவுமே ஓய்வில் இல்லை. எல்லாமும் இயங்கியபடியேதான் உள்ளன. இந்தவகையில் கருந்துளைகளும் பேரண்டத்தினுள் இயங்கிய வண்ணமாகவே இருக்கின்றன. அவ்விதம் இயங்குகையில் அவை இன்னொரு வான்பொருளுக்கு அண்மையிலும் வரக்கூடிய நிலையானது வருகின்றது. சிறப்பாகப் பார்ப்போமாயின் சோடி விண்மீன்களில் இந்தநிலை அதிகம் ஏற்படுகின்றது. சோடிவிண்மீன்களில் ஒருவிண்மீன் இறந்து, அதன் எச்சம் கருந்துளையாக மாறியிருந்தால், அந்தக் கருந்துளையும் அதன் சோடி விண்மீனும் அருகருகே வரக்கூடிய சந்தர்பமானது அதிகம் உண்டு. அவ்விதம் அருகருகே அவையிரண்டும் வருகையில்தான் புதுச் சிக்கல் ஒன்று உருவாகின்றது.

தனது வலிமையான ஈர்ப்புப்புலத்தின் காரணமாக, தனது சோடிவிண்மீனின் சடங்களை கருந்துளையானது மெது மெதுவாக இழுத்து தன்னுடன் சேர்த்துக் கொள்ள முயலும். இந்த முயற்சியில் கருந்துளையானது வெற்றியும் பெற்றுவிட, ஈற்றில் தனது சோடி விண்மீனை அந்தக் கருந்துளையானது முற்றாகவே தன்னுள் இழுத்து விழுங்கி ஏப்பம் விடுகின்றது. ஆம் ஏப்பம் விடுகின்றது எனத்தான் கூறவேண்டும். இப்படியாக ஏப்பம் விடும் நிகழ்வுதான் கருந்துளையை எமக்கெல்லாம் இனம் காட்டுகின்றது. இந்த நிகழ்வினை நாமும் மெதுமெதுவாகவே அவதானிப்போம், எளிதாக விளங்கிக் கொள்வதற்காக.

கருந்துளையால் இழுக்கப்படும் சோடிவிண்மீனின் சடங்கள் நேரடியாகவே வந்து கருந்துளையினுள் விழுந்து விடுவதில்லை. கருந்துளையின் ஈர்ப்பினால் துணிக்கைகள், மற்ற விண்மீனில் இருந்து ஒன்றன் பின் ஒன்றாக கருந்துளையை நோக்கி படையெடுத்து வரத் தொடங்குகின்றன. அவ்விதம் வருகையில் கருந்துளையை அண்மிக்க, அண்மிக்க அவற்றின் கதிகளும் அதிகரிக்கின்றன. அதனால் கருந்துளையிக்கு அண்மையில் வந்து சேர்கையில் மிகவும் வேகமாக வருகின்றன. அத்துடன் அத்துணிக்கைகள் எல்லாம் கருந்துளையை சுற்றி வட்டவடிவில் வருகின்றன. இவ்விதம், சோடி விண்மீனின் துணிக்கைகள் (சடங்கள்) எல்லாம் மிகவும் வேகமாக, கருந்துளையைச் சுற்றிச் சுற்றி வந்து, இறுதில் ஒன்றன் பின் ஒன்றாக, ஆனால் படைபடையாக கருந்துளையின் நிகழ்வெல்லையை அடைந்து விடுகின்றன. நிகழ்வெல்லையை அடைந்ததும்தான் அவை கருந்துளையினுள் விழுந்து (அப்படித்தான் இதனைக் கூறவேண்டும்) கருந்துளையின் மத்தியில் உள்ள ஒருமத்துடன் இணைந்து கொள்கின்றன.

இவ்விதம்தான் கருந்துளை ஒன்று தனது சோடிவிண்மீனின் அருகில் வந்து தனது சோடியை முற்றாகவே தன்னுள் இணைத்துக் கொள்கின்றது. இங்கு பார்ப்போமேயாயின், கருந்துளையின் அருகில் சோடிவிண்மீனின் துணிக்கைகள் வருகையில் அவை மிகவும் வேகமாக இயங்குவதால் அவற்றின் சக்தி (இதனை இயக்கச் சக்தி என்போம்) மிகவும் கூடுதலாக இருக்கும். அதனால் அவை வெப்பமாகவும் வெண்ணிற ஒளிர்வுள்ளனவாகவும் காணப்படும். அத்துடன் அவை எல்லாம மிக நெருக்கமாகவும் கருந்துளையைச் சுற்றிப் பெரிய பட்டையாக, தட்டு வடிவிலும் தெரியும். இதனை ஆங்கிலத்தில் Accretion disk என்கின்றார்கள். நாம் வெண்சேர்க்கைத் தட்டு என்போமா. ஆயினும் இதனை 'அக்கிறேசன் தட்டு' என்றே வசதியாக அழைப்போம். அடுத்துப் பார்த்தோமேயாயின், கருந்துளையைச் சுற்றிக் காணப்படும் ஒளிர்வான அக்கிறேசன் தட்டின் துணிக்கைகள் மிகவும் சுடாகவும் வேகமாகவும் இயங்குவதால் அவற்றில் இருந்து சக்கியானது ஓ – கதிர்கள் வடிவில் வெளிவீசப்படும். இவ்விரண்டுமே கருந்துளைகளை இனம் காண்பதற்கு எமக்குப் போதுமானதாகும்.

எனவே, வான்பரப்பின், எந்தவொரு இடத்திலும் பிரகாசமான அக்கிறேசன் தட்டு எனப்படும் வெண்சேர்க்கைத் தட்டுக் காணப்பட்டு, அதில் இருந்தும் எக்ஸ் கதிர்களும் வெளியேறினால், அவ்விடத்தில் கருந்துளை ஒன்று இருக்கலாம் எனக் கருதிக் கொள்ளலாம். அத்துடன் இன்னொரு இயல்பும் கருந்துளைகளை எமக்குக் காட்டிக் கொடுக்கக் கூடியதாக உள்ளது.

கருந்துளைகள் வலிமையான காந்தப்புலத்தினைக் கொண்டுள்ளன. மேலும் வேகமாகச் சுற்றிவரும் அக்கிறேசன் தட்டின் துணிக்கைகளும் காந்தப்புலத்தின் வலிமையை அதிகரிக்கச் செய்கின்றன. இதன்விளைவாக, அக்கிறேசன் தட்டிற்குச் செங்குத்தாக, கருந்துளையானது தன்னைத்தானே சுற்றும் அச்சின் வழியே மேலும் கீழுமாகப் பெருமளவில் துணிக்கைகளை படையாக வீசப்படுகின்றன. இதனை ஆங்கிலத்தில் jet என்கின்றார்கள். எனவே வெண்மையான, ஒளிர்வான, அக்கிறேசன் தட்டு ஒன்று காணப்பட்டு, அதில் இருந்து எக்ஸ் கதிர்கள் வெளிவந்து, அக்கிறேசன் தட்டின் மத்தியில் இருந்து கருந்துளையின் மேலும் கீழுமாகப் பெரும் படையாக துணிக்கைகள் வீசப்பட்டுக் கொண்டும் இருந்தால் அவ்விடத்தில் ஒரு கருந்துளை உள்ளது என்பது வெளிப்படையாகின்றது, அல்லவா! பொதுவாக, எக்ஸ் கதிர்களை வெளிவீசம் அக்கிறேசன் தட்டினை வான் பரப்பில் அடையாளம் கண்டாலே அங்கு கருந்துளை உள்ளது எனத் துணியலாம். ஆனாலும் அதிலும் ஒரு சிக்கல் உள்ளது அதளைன அடுத்த தடவையில் பார்ப்போம்.

பார்த்தீர்களா, மனித மூளையின் வலுவை. கண்களுக்கே தெரியாத கருந்துளைகளைக் கூட அறிவியலின் துணை கொண்டு காண்டறியக் கூடியதாக உள்ளது. அடுத்த தடவை கருந்துளைகள் பற்றி இன்னமும் சில சுவாரசியமான விபரங்களைப் பார்ப்போம்.



**- கனி -**

# ஆன்மீகமும் விஞ்ஞானமும்

ஆன்மீகத்துக்கு அடிப்படை "நம்பிக்கை". விஞ்ஞானத்துக்கு அடிப்படை தரவும், அறிவும். அடிப்படை வெவ்வேறாயினும் இலக்கு ஒன்றே. அதாவது இப் பூவுலகிலும் பேரண்டத்திலும் காணப்படும் இயற்கையின் நியதிகளையும் இயக்கங்களையும் அறியவும் விளக்கவும் முற்படுகின்றன.

**- வள்ளிநாயகி இராமலிங்கம் -**

பூமியின் பிறப்பில் (பிக்பாங்) ஒரு பெரிய கோளம், வெடித்துச் சிதறி பூமி முதலியன தோன்றின எனக் கூறிய விஞ்ஞானம் என்ன? எப்படி? எப்போது? எங்கே? என்ற வினாக்களுக்கு விடை சொன்னாலும் ஏன்? என்ற வினாவுக்கு விடை இல்லை.


கடவுளை அடிப்படையாக வைத்து அனைத்தையும் விளக்குவது ஆன்மீகம். ஒவ்வொரு பொருளையும் தனித்தனியாக அவற்றின் அமைப்பு, இயக்கம், அவற்றினிடையே காணப்பெறும் தொடர்பு ஆகிய தரவுகளைத் திரட்டி ஆராய்ந்து முடிவு சொல்வது விஞ்ஞானம்.

ஆன்மீகம் இருக்கின்றது எனும் கருதுகோளை வைத்து விளக்க, விஞ்ஞானம் இல்லை என்ற கருதுகோளை வைத்து விடை தேடும். கடவுள் படைத்தார் என்பது மதங்கள் பேசுகின்ற விளக்கம். பரிணாம வளர்ச்சி என்கிறது விஞ்ஞானம். பொதுவில் இருந்து சிறப்புக்குபோவது மெஞ்ஞானம். சிறப்பில் இருந்து பொதுவுக்கு போவது விஞ்ஞானம்.

ஒரு மனிதனின் முழுமையான வளர்ச்சிக்கு தேவையானவை உடல், அறிவு, மனம், ஆன்மா. (Body, knowledge, mind, emotion, spirit) இதில் மெஞ்ஞானம் மனம் + மனஉணர்வு (ஆன்மா) என ஆன்ம நோக்கில் வளர்க்க, விஞ்ஞானம் உடலையும் அறிவையும் மேல் நோக்கி வளர்க்கின்றது. இது சமமற்றது.

புல்லாகிப் பூடாகிப் புழுவாகி மரமாகி பல்விருகமாகி பறவையாய் என்பது பரிணாம வளர்ச்சியைக் குறிப்பிடுகின்றது என்கிறார்கள். ஆனால் எல்லா வகையிலும் உயிர் இருக்கின்றது. எனவே ஆன்மாவும் இருக்கின்றது என்பது சைவசமயம்.

தன்னைப் படைத்த அதிஅற்புத சக்தியை நினைந்து நினைந்து போற்றினான், இது மனித ஒருமைப்பாட்டைத் தோற்றுவித்தது. மனதைக் கட்டுப்படுத்திப் பேராற்றலை வளர்த்துக்கொள்ளலாம். அதுதான் மாபெரும் சக்தி. அதன் விளைவே விஞ்ஞானம். மன ஒருமைபாட்டின் விளைவே இரண்டும் என்கிறார் விஞ்ஞானி அப்துல் கலாம்.



# பசி!


குதிக்காலிட்டு உட்கார்ந்தான். சப்பணமிட்டு அமர்ந்து பார்த்தான். ஒரு காலை சப்பணமிட்டு, ஒரு காலை நீட்டி, இப்படியும் அப்படியுமாய் உட்கார்ந்து பார்த்தான். இம்கூம், எப்படி உட்கார்ந்தாலும் - பசித்தது!

எழுத்தாளர் ச. தமிழ்ச்செல்வனின் இந்த வரி-களைப் படித்த பிறகு "பசியை" வேறு மாதிரி பார்க்கத் தோன்றும். எந்த ஆடம்பரமும் அற்ற அந்த "ஏழை" வரிகளைப் படித்த பின்பாடு 10 வினாடிகள் நிதானிக்க வேண்டி வரும்! ("பாழும் வயிறே நீ பசிக்காது இருந்தாலே, ஏழை எங்களுக்கு கவலை இருக்காதே"... என்ற (விஜய) T. ராஜேந்தரின் "தங்கைக்கோர் கீதம்" படப் பாடலும், கொஞ்சம் இதே ரகம்.) மறைந்த நடிகை ஷோபா நடித்த "பசி" படம் பார்த்தீர்களா? படத்தை piece, piece ஆகக் கிழித்திருப்பார் ஷோபா, அதாங்க, சூப்பர் ஆக act குடுத்திருப்பார் என்று சொல்ல வந்தேன்!

அதில் எனக்கு பிடித்த ஒரு காட்சி : பேப்பர் பொறுக்கும் ஏழைப் பெண் ஷோபாவின் புடவைக் கிளிசல்கள் வழியே(!) அவரை 'site' அடித்துக்கொண்டிருப்பார் ஒருவர். இது தொடர்ந்து நடக்க, வெறுத்துப்போன ஷோபா, அந்தக் கிளிசல்களை "சடக்கென்று" இன்னும் பெரிதாகக் கிழித்து விட்டு.. "இன்னும் நல்லாப் பாருப்பா" என்பார்! வறுமை தரும் துணிச்சலை அள்ளித் தந்த காட்சி அது!

"இதென்ன கஷ்ட காலம், எனக்கு இப்ப பசிக்குது", என்று நீங்க வேற பேப்பரை மூடி வைத்து விட்டுச் சாப்பிடப் போய் விடாதீர்கள்! இந்தக் கட்டுரை "பசி" பற்றியதல்ல! அண்மையில் நடந்த (கொஞ்ச மாசம் போய் விட்டது!), "வாழும் தமிழ்" புத்தகக் கண்காட்சியில் எனக்குக் கிடைத்த ஒரு சிறந்த சிறுகதைத் தொகுப்பு "வெயிலோடு போய்...".(கடன் வாங்கியாவது கட்டாயம் படியுங்கள்!) அதை வாங்கிய உண்மையான காரணத்தைச் சொல்லி விடுகிறேன். அது - "பூ" படத்தைப் பலர் பார்த்திருப்பீர்கள், அந்தத் திரைப்படம், இந்தச் சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்ற "வெயிலோடு போய்..." என்ற சிறுகதையை மையப்படுத்தியே (loosely based on..) தயாரிக்கப்பட்டுள்ளது என்று நான் படித்த செய்திதான். (ரொம்ப confuse பண்ணுகிறேனோ?, எல்லாம் Winter நேரம் "வெயிலோடு போய்" வந்த வினை தான்!)

அசோகவனங்கள், வெயிலோடு போய்... இந்த இரண்டு சிறுகதைகள் மட்டுமே, ஒரு முழு நீளத் திரைப்படத்திற்கு ("பூ") அச்சாணியாக இருந்திருக்கிறது என்பது ஒரு சுகமான ஆச்சரியம்! திரைப்படத்தை முதலில் பார்த்து விட்டு கதை படித்தால், கதை மற்றும் திரைப்படம் இரண்டையுமே பாராட்ட வேண்டி இருக்கிறது. ஏன் இப்படி சொல்கிறேன் என்றால், எழுத்தாளர் சுஜாதா ஒரு பேட்டியில் தனது ஒரு சில கதைகளைப் படமாகிய போது, (கவனிக்க, ஏற்கனவே புத்தகமாக வந்த அவர் கதைகளை) அந்தப் படங்களை பார்த்து தான் பெரும் ஏமாற்றம் அடைந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். இயக்குனர் சசி "சொல்லாமலே.." எல்லோர்




மனதுக்குள்ளும் வந்து போனவர். "பூ" திரைப்படத்தில், அதன் ஆதாரமான சிறுகதைகளைப் பொறுப்புடன் கையாண்டிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

திரைப்படத்தின் முடிவில் (பார்க்காதவர்கள், பயந்து கண்ணை மூடாதீர்கள் climax சொல்லமாட்டேன்!) நாயகியின் மாமனார் நாயகிக்கு, "உனக்கு ஒரு கனவிருந்திச்சு, எனக்கு ஒரு கனவிருந்திச்சு, ஆனா அவளுக்கும் (அவரின் நிகழ்கால மருமகள்) ஒரு கனவிருந்திருக்குமின்னு நான் நெனைச்சுப் பார்க்கலையே.. என்று சொல்லி அழுவதாக வரும் வரிகள் Million Dollars பெறும்! ஆனால் அந்த சம்பவம் சிறுகதையில் இல்லை.

புத்தகத்தில் மொத்தமாக 14 சிறுகதைகள் (நூல் வெளியான ஆண்டு 1985). பல கதைகள் வறுமை, பசி, அன்றாட ஏக்கங்கள், நிறைவேறாத ஆசைகள் பற்றித்தான் இருக்கின்றன. இவைதானே இன்னும் பலருடைய வாழ்வாக இருக்கிறது! (Avatar போன்ற மாயஜால சங்கதிகள் கனவிலும், வெள்ளித்திரைகளிலுமே சாத்தியமாகின்றன.) இத்தொகுப்பிலேயே என்னை ஆழம் பார்த்த சிறுகதை "பாவனைகள்"! இந்தக் கதையின் முதல் வரிகளையே கட்டுரையின் ஆரம்பத்தில் தந்திருந்தேன். கதையின் 'one liner' - தீப்பெட்டி ஒட்டிக்கொண்டு இருக்கும் சிறுவன், பசியுடன் அம்மாவின் வரவுக்காகக் காத்திருக்கிறான். அவன் காத்திருத்தாலும், அதன் போதும், பிறகும் நடக்கும் சில சாதாரண நிகழ்வுகளே கதை.


## - கிறிஸ்ரி-

அம்மா வீடு வந்து விட்டாள், எப்படியும் சாப்பாடு விழுந்து விடும் என்ற நம்பிக்கை வந்து விடுகிறது, அதற்குள் தெருவில் "மிக்சர்" வண்டி போகிறது (நம்ம "முட்டாசு" வண்டி போல!) தெருக் குழந்தைகள் வண்டியையே சுற்றிச் சுற்றி வருகிறார்கள். இரவுச் சாப்பாடே "கேள்விக் குறியாக" இருக்கும் அந்தப் பிள்ளைகள், "மிக்சர்" வண்டித் தின் பண்டங்களுக்கு எங்கே போவார்கள்? தமிழ்ச்செல்வனின் வரிகள் கீழே...

"கண்ணாடிக்கு வெளியே தெரிகிற லட்டுக்கு நேராய் ஒருத்தன் கையை நீட்டி, ஒரு லட்டை எடுப்பது போல பாவனை செய்து வாயைப் பெருசாகத் திறந்து லட்டை உள்ளே திணிப்பது போலக் காட்டி பாவனை செய்தான். எல்லோரும் உரக்கச் சிரித்தார்கள். அவ்வளவுதான் எல்லாப் பிள்ளைகளும் ஆள் ஆளுக்கு கையை நீட்டி அவரவருக்குப் பிரி யமான தின்பண்டங்களை எடுத்து வாயில் போடுவது போல பாவனை பண்ணி, மெல்ல ஆரம்பித்தார்கள்."

இது "இளமையில் வறுமையின்" உச்சம் என்றாலும், அதையே "குழந்தை விளையாட்டாக" மாற்றி இருக்கிறார் ஆசிரியர். என்ன செய்வது, இப்போதும் கோடிக்கணக்கான குழந்தைகள் உலகில், "அம்மா பசிக்குது" என்று கேட்கும் போது, பல சமயங்களில் பெற்றோர் கொடுக்கக் கூடியதாக இருப்பது, அவர்களின் கண்ணீர் மட்டும் தானே!

APARTMENTS FOR RENT



$250 Move In Bonus

*Best Building in Scarborough!*

*Clean, family building, FREE parking.*

*Close to schools, bus stop, Tamil store in building.*

Pl. Call: 416.264.2818

# தமிழ் வழிகாட்டி - 2010 இனை கனடிய தமிழ் வர்த்தக சம்மேளனத் தலைவர் வெளியிட்டு வைத்தார்




புலம் பெயர்ந்த கனடிய தமிழரின் ‘அடையாளம்’ எனக்கருதப்படும் செந்தியின் தமிழன் வழிகாட்டி-2010னை கனடிய தமிழ் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் திரு. கென் கிருபா அவர்கள் வெளியிட்டு வைத்தார். மேற்படி வைபவம் தமிழன் வழிகாட்டி அலுவலகத்தில் நடைபெற்றது.

கடந்த 15 ஆண்டுகளாக தை மாதம் வெளிவந்த தமிழன் வழிகாட்டி வழமைபோல இந்த ஆண்டும் தை மாதம் வெளிவந்து சிறப்பினை பெற்றிருக்கிறது. இந்த பணிக்கு வித்திட்ட அனைத்து உள்ளங்களிற்கும் தமிழன் வழிகாட்டி செந்தி நன்றி தெரிவிக்கின்றார்.

# நாவாந்துறை சென் மேரிஸ் கனடா கிளை

நாவாந்துறை சென் மேரிஸ் கனடா கிளையின் 15ம் ஆண்டு பொதுக்கூட்டமும் 2010ம் ஆண்டிற்கான புதிய நிர்வாக தெரிவும் 16-01-2010 சனிக்கிழமை மாலை 7 மணியளவில் தலைவர் திரு. சூ. மரியதாஸ் தலைமையில் தலைவர் இல்லத்தில் செபத்துடன் ஆரம்பமாகியது. இக்கூட்டத்திற்கு பெரும் பாலான அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர். தலைவர் தனது தலைமையுரையில் கடந்த 15 ஆண்டுகளாக எமது சங்கம் மிகவும் திறம்பட இயங்கியதாகவும், 2003ம் ஆண்டு சர்வதேச சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இப்பவரையும் பல சேவைகளை எம் மக்களுக்கு செய்துள்ளோம். கடந்த வருடங்களில் சர்வதேச சபையால் எமது மக்களுக்காக 80,0000 (எண்பது இலட்சம்) ரூபா செலவு செய்தமை குறிப்பிடத்தக்கது. இதற்காக சகல அங்கத்தவர்களின் ஒத்துழைப்பிற்கும் தன் பாராட்டினை தெரிவித்துக்கொண்டார். அடுத்தாக 2009ம் ஆண்டில் தனது நிர்வாகத்தில் இருந்த அனைத்து நிர்வாக உறுப்பினர்கள் அனைவரும் சிறப்பாக செயற்பட்டமைக்கும் பாராட்டுக்களை கூறியதோடு இனி வருகின்ற புதிய நிர்வாகம் இவற்றையும்விட சிறப்பாக இயங்க வேண்டு மென்றும் அதற்கொப்ப நல்ல துடிப்பானவர்களையும், தமது பொறுப்பறிந்து செயற்பட கூடியவர்களையும் சபை தெரிய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

வாழ்த்தும் நன்றிகளும் தெரிவித்ததோடு, மிக சிறப்பாக இந்த பொதுக்கூட்டத்தினை தலைவர் தனது இல்லத்தில் ஒழுங்கு படுத்தியமைக்கும், அங்கத்தவர்கள் அனைவரையும் மிக சிறப்பாக உபசரித்து இரவு விருந்து தந்தமைக்கும் சென்ற ஆண்டின் தலைவர் திரு. சூ. மரியதாஸ் திருமதி. மரியதாஸ் அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும் நன்றி கூறி செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

புதிய நிர்வாகம்

தலைவர்: திரு. யோ. ஆரோக்கியதாஸ் (எதிர்)
உப தலைவர்: திரு. ப. சிலுவைதாஸ் (ஆம்ஸ்ரோங்)
செயலாளர்: திரு. அ. ஸ்ரீபன்
உப செயலாளர்: திரு. அ. அன்ரனிராஜ்
பொருளாளர்: திரு. கூ. யூலியஸ் (விஜய்)
நிர்வாக உறுப்பினர்கள்
1. மை. செபஸ்ரியன் (அசோக்)
2. அ. பாலத்துரை (ஜே.ஆர்)
3. அ. சிசிலியா (மேரிராணி)
4. ப. பத்மாவதி (லதா)

எமது நாவாந்துறை சென் மேரிஸ் கனடா கிளையின் 2010ம் ஆண்டிற்கான போசகர் திரு. வ. பற்றிக் (சீனிமுத்து)

கணக்கு பரிசோதகர்: திரு. சூ. மரியதாஸ் (ஜேயன்)




புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.


இறுதியாக தலைவர் தனதுரையில் மிகச் சிறந்த இளைஞர்களை கொண்ட நிர்வாகம் தனக்கு அமைந்துள்ளாகவும் கடந்த ஆண்டுகளை விடவும் தனது நிர்வாகம் சிறப்பாக இயங்குமென்றும் உறுதியளித்து தன் மகிழ்ச்சியினை தெரிவித்தார். இறுதியாக செயலாளர் திரு. அ. ஸ்ரீபன் அவர்கள் தனது நன்றியுரையில் சென்ற நிர்வாகத்துக்கு

எமது கனடா கிளையின் நெய்தல் மலர் பிரதி நிதியாக திரு மை. செபஸ்ரியன் (அசோக்) அவர்கள் பொதுச்சபையால் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

தகவல்:
அ. ஸ்ரீபன்
செயலாளர்
நாவாந்துறை சென் மேரிஸ் கனடா கிளை

**விற்பனையாகின்றன!**
**கனி விமலநாதனின்**
**மூன்று நாவல்கள்**

1. வேற்றுக்கிரக மனிதர்கள்



யார் இந்த வேற்றுக்கிரக மனிதர்கள்? அவர்களின் பின்னணி என்ன? வேற்றுக்கிரக மனிதர்களை சந்தித்தவர்கள் உண்டா? வேற்றுக்கிரக மனிதர்களுக்கும் எங்களுக்கும் என்ன தொடர்பு?

2. பிரபஞ்சம் பற்றிய வியப்பான செய்திகள்

எமது பிரபஞ்சம் எப்போது தோன்றியது? தோன்றியபோது எப்படி இருந்தது? எவ்விதம் இவ்வளவு பெரிதாக ஆகியது? பிரபஞ்சத்தின் முதல் நட்சத்திரம் எவ்வாறு தோன்றியது?

3. இனம்தெரியாத பறக்கும் தட்டுகள்

பறக்கும் தட்டுகள் என்பது உண்மைதானா? அவை எங்கிருந்து வருகின்றன? பறக்கும் தட்டுகளை கண்டவர்கள் உண்டா?

பிரபஞ்ச இரகசியங்களை தெளிவு படுத்தும் நூல்கள்

**கிடைக்குமிடம்: முருகன் புத்தகசாலை**

***1241 Ellesmerer Road - Midland & Ellesmere***
***GTA Square - 5215 Finch Ave. E., Middlefield & Finch***

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

**வீடு விற்பனைக்கு**

நல்லூர், யாழ்ப்பாணத்தில் 4.5 பரப்புக்கொண்ட தென்னைமரங்கள் உள்ள காணி விற்பனைக்கு உண்டு. நல்லூர் கோயிலிற்கு ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இந்நிலம் பழைய கல்வித் திணைக்களத்திற்கு (Old Education Department) முன்பாக உள்ளது.
மேலதிக விவரங்களுக்கு: **416.315.9397**

# என்றென்றும் மக்களின் முதல்தெரிவு




தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது

**நிரு பிராண்ட் தயாரிப்புக்களே.**

# எப்பொழுதும் அழகாக இருப்பது எப்படி?

அழகாக இருக்கவேண்டும் என நினைப்பவர்கள் ஆண்களைவிடப் பெண்களே அதிகம். எப்பொழுதுமே அழகாக இருக்கவேண்டும் என அழகுக்கு அழகு செய்பவர்கள் பலவிதம். அழகைத் தொடர்ந்து பேணமுடியாமல் இருப்பவர்களும் பலர். உடல் அழகை, வசீகரத்தை, பார்ப்பவர்கள் வியப்புறும் வண்ணம் தங்களை ஆக்கிக்கொள்வது ஒரு கலை. அந்தக் கலைக்காக காலமெல்லாம் தங்கள் நேரத்தைச் செலவு செய்தவர்கள் பற்றிய வரலாறுகள் பல உண்டு. "உடலழகைப் பார்த்து" "பெண்ணழகைப் பார்த்து" "அவள் அழகைப் பார்த்து" பின்னழகைப்பார்த்து" முன்னழகைப்பார்த்து" கண்ணழகைப்பார்த்து" நடையழகைப்பார்த்து" இது "நடையா இது நடையா ஒரு நாடகமெல்லோ நடக்குது" எனப் பலவாறு பாடப்பட்டமைக்கு அழகினை பார்க்கும் கோணங்களே காரணம். இரசிப்பதற்குத்தான் கண்கள் ஆயிரம் உண்டே. "காணக் கண் கோடி வேண்டும்" என்பதில் உள்ள அழகின் அடக்கம் எத்தன்மையது. அழகு என்றால் கவர்ச்சி என்பது அதன் உட்பொருளாக அமைகின்றது. கண்டதும் மீண்டும் பார்க்கத் தூண்டுவது கவர்ச்சி. அந்தக் கவர்ச்சிக்கு உடல் உறுப்புக்கள் காரணமாக அமைந்தாலும் முழுமையே அதற்குக் காரணம் எனலாம்.

**- த. சிவபாலு-**

உடலழகைப் பேணுவதற்குப் பல்வேறு உடற்பயிற்சிகள், அழகுசாதனப் பொருட்கள் போன்றனவற்றை விடப் பெண்களாக இருந்தாலும் சரி ஆண்களாக இருந்தாலும் சரி உணவுக் கட்டுப்பாடு மிக முக்கியமானதாக அமைகின்றது. வயது வந்தாலும் தோலில் சுரக்கம் ஏற்படாத அழவிற்கு இருக்கின்றாரே என்று வியந்து பேசும் அழவிற்கு அந்த அழகின் இரகசியம் என்ன என்று பலர் யோசிப்பது உண்மை. அதற்கு உணவு மிக முக்கியமானது. முடி கொட்டுதல், சருமம் சுருங்குதல் அல்லது வழுவழுப்புத்தன்மை நீங்கி பொருக்கு வருதல் போன்றவற்றிற்கு உணவுப் பழக்கமே காரணம் எனப்படுகின்றது. உணவில் சேர்த்துக்கொள்ளப்படும் உயிர்ச்சத்து, கனிமச்சத்து, புரதச்சத்து என்பன போதியளவில் செறிந்திருத்தல் வேண்டும் என்பது முக்கியமானது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி அழகைப்பேணப் பயன்படுத்துப்படும் பொருட்கள் பெருந்தொகையாக வெளிவந்துள்ளன, வெளிவந்துகொண்டே இருக்கின்றன. உடல் பருமனைக்குறைப்பதற்காக பெருந்தொகையான மாத்திரைகள், மருந்துக்கலவைகள் உள்ளன. இவற்றுள் Acai Berry Detox மற்றும் Life Cleanse என்பவை உடல் நிறையைக் குறைத்து உடலுக்கு அழகுதருவன என ஸ்ரிபெனி வின்சோர் (Stephanie Windsor) 2009இல் மேற்கொண்ட ஆய்வின்படி அகாய் பெரி டெரொக்ஸ், லைப் கிளீன்ஸ் என்னும் இரு மாத்திரைகளும் உடலுக்கு ஆரோக்கியத்தையும் அழகையும் கொடுப்பதாகத் தான்மேற்காண்ட 175 வெளியீட்டுப் பொருட்களை ஆய்ந்ததிலிருந்து கண்டறிந்துள்ளார். (Canada News) இந்த மாத்திரைகளில் ஒமேகா எண்ணை, என் அசிற்றில் ரைரோசின் ஆகியன உடலில் உள்ள மதுசாரத்தை வெளியேற்றுகின்றது. அதிகளவு நாற்சத்து,..19 வகையான அமினோ அமிலம், பார்பெரி வேர் சமிபாட்டை அதிகரிப்பதோடு உடலுக்குத் தீங்குவிளைக்கும் கிருமிகளையும் அழிக்கவல்லது, செறோமியம் குருதியில் உள்ள சர்க்கரைத் தன்மையை மீதப்படுத்துகின்றது, உடலில் உள்ள நரம்புத்தொகுதியை ஒழுங்காக இயங்கவைப்பதால் உடலின் எல்லாப்பாகங்களுக்கும் குருதிச் சுற்றோட்டம் இடம்பெறுகின்றது. இவற்றால் தோலை மென்மையாகவும், வழுவழுப்பாகவும் வைத்திருப்பதால் அழகு எப்பொழுதுமே நிலைத்திருக்கின்றது என்கின்றார்கள். இந்த இரகசியத்தை பெரும்பாலான பெண்கள் விரும்பி உபயோகிக்கின்றார்கள். இதனால் தங்கள் இளமையை நீடிக்க முடியும் என எண்ணுவதே இதற்குக் காரணமாகும். அழகுக்கு அழகு செய்வதில் சருமத்தை கடினமாக்குவது மது, போதைப் பொருட்கள், புகைத்தல் என்பன என வைத்திய ஆய்வுகள் வெளிக்காட்டகின்றன. எனவே அழகை நாடும் நங்கையர் என்ன காரணம் கொண்டும் மது, போதைப் பொருட்கள், புகைத்தல் என்பனவற்றைத் திரும்பியும் பார்க்கக்கூடாது. புகைப்பவர்களுக்கு அண்மையிலும் செல்லுதல் கூடாது.



குழந்தைப் பருவத்து அழகைத் தொடர்ந்து இடம்பெற வைப்பதற்கு பெரும்பாலானவர்கள் விரும்புகின்றார்கள். ஆனால் அவர்களது பழக்கவழக்கமே அழகிற்கு அழகு செய்கின்றது. மனவெழுச்சி, பழக்கவழக்கங்கள், சூழல், செய்யும் தொழில் என்பன அழகு தொடர்ந்து பேணப்பட அடிப்படையாக உள்ளன. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பார்களே குழந்தைப்பருவத்து அழகுக்கும் வளர்ந்து பெரியவராக ஆனதன்பின்னரும் உள்ள அழகுக்கும் அழகில் வேறுபாடு உண்டா இல்லையா என்பதனை முன்னர் கூறிய காரணிகள் எடுத்துக் காட்டுகின்றதோடு மட்டுமன்றி யெசிக்கா பேக்கரின் குழந்தமைப்பருவமும் அவரது இன்றைய தோற்றத்தையும் பார்த்தால் வியப்பாக இல்லையா? அடிக்கடி கோபம் கொள்பவர்களின் அழகு கெட்டிவிடும். 'சிரித்து வாழவேண்டும். பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே' என்பது கண்ணதாசனின் அருமையான கருத்து. சிரிப்பே அழகின் இரகசியம் என்பதை உணர்ந்தால் போதும்.

---

210

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்

அவர் வருவார! அவர் வருவாரா!
நித்தம் நித்தம் மாறுகின்றதெத்தனையோ? நெஞ்சில் நினைப்பதிலே நடந்ததுதான் எத்தனையோ?
அவர் வருவாரா!
காத்திருந்து காத்திருந்து காலமும் போனதடி!
என்னதான் நடக்கும் நடக்கட்டுமே...

உலகர் மனதில் ரீமிக்ஸ் பாடல்போல் எல்லாம் மாறி மாறி வந்துகொண்டிருந்தது..

போர் ஓய்ந்த பின்னும் தேர்தல் அமளியில் சில இடங்களில் வெடித்த கைக்குண்டுபோல் அமைதியைக் கிழித்துக்கொண்டு செக்கண்ட்புளோ செல்லம்மா சொன்னா எப்பிடி நான் சொன்னன் அவர்தானெண்டு? என தனது கணிப்பைச் சொன்னா.

செல்லம்மா நான் ரிக்கற்றும் எடுத்துப்போட்டன் போறதோ இல்லையோ எண்டிருக்கிறன்.



கொதியைக் கிளப்பாதை!
ஒருநாள் சொன்னது ஞாபகமிருக்கே? உன்ரை பெறாமேன் பொலிரிக்கல் சயன்ஸ் படிக்கிறான். அவர் வாறது நிச்சயமெண்டாய்.
இப்ப.. அப்ப அவராண்டாலென்ன? இவராண்டாலென்ன?
அண்மையில் வெளிவந்த சினிமாப்பாடல் ஞாபகம் வந்தது.
ராமன் ஆண்டாலும் ராவணன் ஆண்டாலும் எமக்கதில் கவலையில்லை.
இந்தப்பாடல் கேட்கச்சுவைதான். ஆனால் பாதிக்கப்பட்டவர்களும் இனி வரப்போகும் பாதிப்புக்களையும் அனுபவிக்கவேண்டியவர்களின் கதி?

மேலும் தேர்தலில் வெற்றிபெறாத அபேட்சகர் நாட்டைவிட்டு வெளியேறத் திட்டமிட்டிருக்கிறா-ரென்ற வானொலிச்செய்தியைக்கேட்ட செக்கண்ட்புளோர் செல்லம்மா சன்னதம் கொள்ளத்தொடங்கினா. எங்கடையாக்கள் அங்கை கூட்டுக்கிள்ளாலை வெளியிலை வந்தும் வீடுவாசலுக்குப் போகேலாமலிருக்கினம். அவர் நாட்டைவிட்டு வெளியிலை போப்போறாராமோ?..



வெளிக்கிடட்டும் பாப்பம். அப்பிடி வெளிக்கிட்டாலும் இஞ்சைதானே வருவர். அப்ப பாப்பம். எண்டு மூச்சுவிடாமல் இடைவெளி யில்லாமல் பேசி முடித்தா.



அன்னம்மாக்கா எயர்போட்டிலை போய் இறங்கி இங்கிலீசிலை கதையாதை.
தமிழிலை கதை என்று சொல்ல உலகர் மனதுக்குள் சிரித்தார்.
செக்கண்ட்புளோர் செல்லம்மா ஈ.எஸ்.எல் கிளாசுக்கே ஒழுங்காப் போகேல்லை..
எயப்போட்டிலை என்னண்டு இங்கிலீசு.

கதை அமளி துமளியுடனும் உலகர் பட்டுவேட்டி சால்வையுடன் புறப்படவும் தாமோதரத்தின் ரெலிபோன் வரவும் சரியாக இருந்தது. ஓம் நான் றெடி.
வெளியிலை நில்! வாறனெண்டபடி பட்டுச்சால்வை மடிப்புக் கலையாமல் இன்றைய யுவதிகள் சுரிதாரின் சால்வை அதாவது சோல் போடுவதுபோல..

தாமோதரம் தைப்பூசத்திற்கு கோவிலுக்குப்போறன் என ரெலிபோன் செய்தது உலகருக்கு பெரிய சந்தோசம். இண்டைக்கு முருகேசரும் கோவிலுக்கு வருவர்.
பல கனவுகளுடன்.. எத்தனையோ நண்பர்களைச்சந்திக்கலாம்.
சிலர் றெஸ்ற் எடுக்கிறார்கள். கொலஸ்ரோல், சுகர், பிளட் பிரசர், பை பாஸ்.... வருத்தத்திற்கு வயதில்லை. ஆறிலும் வரும் அறுபதிலும் வரும்.

கூன்குருடு நீங்கிப்பிறத்தலரிது..
மீண்டும் பிறவாமை வேண்டும். என்றோ எங்கோ படித்தது - கேட்டது.
இப்போ உலகர் மனதில் ரீங்காரமிட்டது.

தாமோதரத்தின் காரில் ஏறியதும் காரில் கிடந்த 2010 நாட்காட்டியை புரட்டிக்கொண்டிருந்தார் உலகர்.



எத்தனையோ..மறக்கமுடியாத தலைவர்களின் நினைவு தினங்கள்.


யாழ். நாதஸ்வர வித்துவான் பி.எஸ். ஆறுமுகம்பிள்ளை பெப்ரவரி 07.
சட்டமேதை ஜி.ஜி. பொன்னம்பலம் பெப்ரவரி 09.
அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம் பெப்ரவரி 11.

'தோன்றிற் புகளொடு தோன்றுக' குறள் உலகர் மனதில் எழுந்தது.

அத்தோடு காதலர் தினம் பெப்ரவரி 14.
அடுத்த பக்கம் திருப்புமுன் உலகண்ணை இறங்குங்கோ காரைப்பாக் பண்ணிப்போட்டுவாறன் என்று சொல்ல..காரால் இறங்கி காதலர் தினத்தைப்பற்றி நினைத்துக்கொண்டே நடந்தார் உலகர்.



# உண்டிகொடுத்தவளும், உண்டியலில் போட்டவரும்




**என் இனிய நண்பர்களே!**
**வாழ்த்துக்கள்**

நலம்பெறப் பிரார்த்திக்கிறேன்.

ஈழத்துக்கலை இலக்கியங்களும் பண்பாட்டு நடைமுறைகளும் தனித்தன்மையோடு மிளிர்ந்தகாலம் ஒரு பொற்றகாலமாகும். பேச்சில் அழகுதமிழ். எழுத்தில் அழகியல் தமிழ் என்று வித்தியாசமான போக்கும் நோக்கும் இருந்தமையால் ஈழத்தமிழர்கள் உயர்வாக எண்ணப்பட்டார்கள், கணிக்கப்பட்டார்கள். வாழ்க்கை நிலைகளில் ஈழத்தமிழர்கள் கடைப்பிடித்த ஒழுங்கும், செம்மையும் ஈழத்தமிழ் வீட்டார் இயல்பு என வடிவங்கொண்டது. தமிழ் வீட்டார் இயல் என்பது அன்பு - ஒற்றுமை - கட்டுப்பாடு என்ற படிமுறைகளைக் கொண்டது. இதுவே ஈழத்தமிழ் தேசியத்திற்கு விதையாக விளங்கியது. இந்த விதையின் வளர்ச்சியே ஈழத்தமிழர் தாயகக் கோட்பாடு என்ற இலட்சியதாகத்திற்கும் தண்ணீர் வார்த்தது.

ஈழத்தமிழர் இருப்பும் வாழ்வும் எந்தக் கலாச்சாரக் கலப்பாலும் பங்கமுறவில்லை. இந்தியச் தமிழர்களுக்கு இப்படியான சூழல் கிடைக்கவில்லை. ஈழத்தில் திராவிடக் கலப்பில்லாத தனித்தன்மை சுயம் இருந்தமை கவனிக்கத்தக்கது. இந்த சுயத்தை தனித்தன்மையை பாராட்டிக்கொண்டாடிய இந்திய எழுத்தாளர்களும் பேராசிரியர்களும் அறிஞர்களும் பலராவர். சமயத்துறைசார்ந்த ஆதீனங்கள் ஈழத்தமிழ் வல்லாரை வரவேற்று வாழ்த்தியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்து தமிழ் வித்தகரான ஆறுமுகத்துக்கு திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் பட்டம் வழங்கியது. குன்றக்குடி ஆதீனம் ஆறுமுகநாவலரைப் பல்லக்கில் ஏற்றி பவனி வந்தது. தமிழ் நாட்டுத் தேசியத்தையும் ஈழத்தேசியத்தையும் வேறுபடுத்திக்காணப்பதற்கு ஈழத்தமிழ் இயம் என்ற கருதுகோள் உதவுகின்றது. இந்தக் கருத்துநிலை தமிழ் மொழித் தூய்மைக்கும் வளத்துக்கும் உதவியது. தொல்காப்பியர் என்ற இலக்கண வகுப்பாளருக்கு ஈழத்தமிழ் ஊட்டச்சக்தியாய் உதவியது. தொல்காப்பியரின் தமிழையே ஈழத்தமிழர்கள் பேசினார்கள் என்று பலமொழி நூல் வல்லார்கள் முன் மொழித்திருக்கிறார் கள். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தமிழக முதல் அமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி சிங்கப்பூரிலே வைத்து பகிரங்கமாக ஈழத்தமிழர் பேசுவது தொல்காப்பியத்தமிழ் என்று கூறியமை உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

நண்பா! தொல்காப்பியம் ஒரு இலக்கண நூல். இதனைப்படிப்பதற்கு தமிழறிஞரின் துணை தேவை. ஈழத்தமிழர் எல்லோரும் தமிழறிஞரின் துணையோடு தொல்காப்பியம் படித்திருப்பார் களா? இல்லை. என்ன நடந்திருக்கும்? ஈழத்தமிழர்களின் வாயிலும் மனத்திலும் மருவி நின்று அகலாத தமிழ். தூயதமிழ் உள்ளத்தின் உண்மை ஒளியாய் உயிரோடு கலந்த பிரகாசமாய் விளங்கியதாலும், எந்தவித குறுக்கீடுகளும் கலப்பும் இல்லாத தூய்மையான சூழ்நிலை இறைவன் அருளால் இயற்கையின் கொடை யாய் அமைந்ததாலும் ஈழத்தமிழருக்கு தனித்தன்மைகள் பொருந்தின. இந்திய தமிழகத்திற்கு திராவிடமொழிகள் என்ற கலப்புத்தமிழை தனியே தலைதூக்க விடவில்லை. திராவிடமொழிகளின் மும்மூர்த்திகள் என்று திருவள்ளுவர் (தமிழ்) சர்வக்ஞர் (கன்னடம்) வேமண்ணா (தெலுங்கு) என மூவரையும் இணைத்தே இயங்க வேண்டியிருந்தது. வாழ வேண்டியிருந்தது. ஈழத்தில் தமிழுக்கெனப்பல மூர்த்திகள் எழுந்தனர். மக்களும் அவர்களை அடியொற்றி பின்பற்றி ஈழத்தமிழியம் படைத்தனர். இது வரலாறு காட்டுகின்ற உண்மைகள். தந்தை பெரியார் சமுதாய சீர்திருத்தம் கொண்டுவந்த சிந்தனைவாதி. ஆயினும் தனது தெலுங்கு மொழியின் மேல் கொண்ட பற்றினால் தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று பேசியவர், எழுதியவர். இதனைக் கண்டித்த குன்றக்குடி அடிகளாரிடம் அறிஞர் அண்ணா 'அவரைக்கண்டிக்காதீர்கள், சும்மா விடுங்கள், கண்டனக்குரல் கொடுத்தால் அவர் அழுங்குப்பிடியில் நிற்பார். நாம் அமைதியானால் பெரியாரும் பேசாமல் இருப்பார்' என்ற ராஜதந்திர நடவடிக்கையில் அந்தக் குரலை அடக்கினார்.

தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக்கழகம் என்ற சமுதாய சீர்திருத்த அமைப்பு அறிஞர் அண்ணாவின் தலைமையில் மக்கள் மத்தியில் வளர்ந்தது. செல்வாக்குப்பெற்ற காலத்தில் திராவிடம் என்ற கலப்பு நிலை தேசியத்திலிருந்து தமிழ் தேசியத்தைப் பிரித்துக்கொண்டுவர வேண்டும் என்று அன்றைய சொல்லின் செல்வரும் தந்தை ஈ.வெ.ரா பெரியாரின் பெறாமகனுமான ஈ.வெ.கி. சம்பத் வேலூரிலே நடந்த தி.மு.க. பொதுச்சபையிலே ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இது கட்சிக்குள் பெரிய பிரச்சினை ஆகியது. பலர் பிரிந்தனர். ஈ.வெ.கி சம்பத் தலைமையில் கவிஞர் கண்ணதாசன் மதுரைத் திருமாறன் எனப் பலர் சேர்ந்து தமிழ் தேசிய கட்சி என்ற புதிய அமைப்பொன்றை உருவாக்கினார்கள். அக்கட்சி வளர முடியவில்லை. கன்னடம் தெலுங்கு மலையாளம் என்ற மொழிகளின் இனக்கலப்பினால் ஒருதனி இன எழுச்சிக்கு வாய்ப்பில்லாது போனது. ஆனால் ஈழத்தமிழ் தேசியம், ஈழத்தமிழ்த்துவம், ஈழத்தமிழியல் காரணமாகத்தானே தனித்து வளர்ந்து சுயமான ஒரு அமைப்பானது. தான்தோன்றி ஈஸ்வரன் சுயம்புலிங்கம் பற்றி அறிந்திருப்பீர்கள். எந்த தயாரிப்பும் வளர்ப்பும் இல்லாது தானாகவே தோன்றி அதிசயிக்க வைத்தது. ஆராதனைகள் பெற்று பெருமை யடையும் இலிங்கேஸ்வரர் போன்று ஈழத்தமிழுக்கும் ஒரு தான்தோன்றித் தன்மை இருந்திருக்கிறது. புறப்பொருள் வெண்பாமாலை பாடிய ஐயனார் இதனார் கூறிய 'கல் தோன்றி மண் தோன்றாக்காலத்தே முன்தோன்றி மூத்த தமிழ்' என்ற கூற்று ஈழத்தமிழ் குறித்ததாக இருக்க வேண்டும்.

தான்தோன்றி ஈஸ்வரனை ஆன்மீகத்துறை யினர் கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்து, திருவிழாக்களை உருவாக்கி பக்தி, பாடல்கள், படித்தரம், பத்ததி, பஞ்சாமிர்தம், பஞ்சமுக அர்ச்சனை, பஞ்சாலாத்தி, பஞ்சரதம் (ஐந்து தேர்) என்று ஒழுங்கு முறைமைகள் மூலம் வளர்த்து உலகுக்குத் தெரியவைப்பது போன்றே ஈழத்தமிழியத்தை அரசியல் துறையினர் தனிமொழி, தன்மொழி, தன்மானம், தன்ஆட்சி, தன்அடக்கம் சுயநிர்ணயம், சுயாதிபத்தியம், சுயாட்சி என்று முன்னெடுத்து முனைப்பாக்கினர். இந்த முனைப்பு தன்னடக்கமானது. ஆதிக்க ஆணவமோ பிறர் மண்ணை அபகரிக்கும் ஆசையோ இல்லாதது. பிறஇனத்தோடும் சனத்தோடும் நட்புப்பாராட்டியது. நயமாக வாழ்ந்தது. அடிமைப்படுத்தவும் இல்லை. அடிமையாக இருக்கவும் இல்லை. இந்திய தமிழ் அகத்தில் கலைத்துறையிலே தமிழிசை - கர்னாடக இசை என்று வடிவங்கள் தோன்றினாலும் தமிழின் தனிக்கட்டுமானம் எடுபடவில்லை. இதற்கு சூழலே காரணமாகியது.

ஈழத்தமிழ் தேசியத்தை அடிப்படையாக வைத்து தமிழ் காங்கிரஸ் கட்சி தமிழ் அரசுக்கட்சி, அடங்காத்தமிழர் முன்னணி, தமிழர் சுயாட்சிக்கழகம் எனப்பல அமைப்புகள் தோன்றின. பின்னர் எல்லோரும் ஒன்றுபட்டு தமிழர் கூட்டணி என்று உருவெடுத்தார்கள். இனத்திற்கு இன்னல்கள் படிப்படியாகக் கூடியதால் 'விடுதலை' என்ற சொல்லை இணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்றானது. மாக்சிய சிந்தனையாளரும் இனப்பிரச்சினை முற்றி மனித அவலங்கள் தலைதூக்கியதும் தம்முள் முரண்பட்டு 'செந்தமிழர் ஆகிடுவோம்' என ஒரு அமைப்பை உருவாக்கி பின்னர் தமிழர் விடுதலை கூட்டணியினருடன் இணைந்து கொண்டனர்.

இந்திய தமிழகத்தில் தமிழருசுக்கழகம், நாம் தமிழர் இயக்கம் என்று சிலம்புச்செல்வர் ம.பொ.சிவஞானகிராமணியாரும் தினத்தந்தி நிறுவனர். சி.பா. ஆதித்தனாரும் தொடங்கிய இயக்கங்கள் இறுதியில் திராவிட இயக்கத்துடனேயே இணையவேண்டி வந்தது. வாழ்க்கைப்போக்கில் இருந்த பண்பாட்டு நிலைகள் ஈழத்தமிழியமாய் மலர்ந்து மக்கள் மத்தியில் நடைமுறை வாழ்க்கையில் இரண்டறக்கலந்திருந்தமையே இதற்கெல்லாம் காரணமாகியது. வாழ்க்கை வளத்தில் பண்பாட்டுக் கூறுகளாயிருந்த இரு அம்சங்களை இரண்டு எழுத்தாளர்கள் சிறுகதைகளாக எழுதியமை இங்கு நினைவு கூரத்தக்கது. ஒருவர் பழம்பெரும் எழுத்தாளர். க.தி.சம்பந்தன் மற்றவர் இளம்வயதிலேயே காலமான முனியப்பதாசன் என்ற சண்முகநாதன்.

இளைஞர் முனியப்பதாசன் வேலணையூரைச் சேர்ந்தவர். யாழ். இந்துக்கல்லூரியில் படித்தவர். என் நண்பருமாவார். யாழ். கோட்டைக்கருகில் அமைந்துள்ள முனியப்பர் கோயிலுக்கு வெள்ளிக்கிழமை தோறும் யாழ். இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள வீட்டிலிருந்து நடந்தே சென்று வழிபாடு செய்து திரும்புவார். பக்தி மேலீட்டால் தமிழியல் சார்ந்த சிந்தனைகளால் தனது புனைபெயராக 'முனியப்பதாசன்' என்று வைத்துக்கொண்டார். அக்காலப்பகுதியில் சுப்புரத்தினதாசன், பாரதிதாசன், கம்பதாசன், கண்ணதாசன் என்ற பெயர்களும் இலக்கிய உலகில் பிரபலமடைந்திருந்தன.

சிற்பி சரவணபவனை ஆசிரியராகக் கொண்டு 'கலைச்செல்வி' என்ற மாத இதழ் ஈழத்தில் வெளியாகிக் கொண்டிருந்தது. முனியப்பதாசன் 'கலைச்செல்வி'யில் ஈழத்தமிழியலுக்கான சிறுகதை ஒன்றை எழுதினார். இக்கதை வெளிவந்த காலத்தில் ஈழம் இயல்பாய் அமைதிப் பூங்காவாய் இயங்கிக் கொண்டிருந்தது. தமிழ் தேசியம், தமிழர் தாயகம், தமிழர் பாரம்பரியம், தமிழர் சுயநிர்ணயம், தமிழர் விடுதலை என்ற எந்த உணர்வும் மேற்கிளம்பாத காலம். 1955ஆண்டு என்று நினைவு. இயல்பு வாழ்க்கையில் ஈழத்தமிழியம் எப்படி இருந்தது என்பதற்கு முனியப்பதாசனின் கதையும் சம்பந்தனின் கதையும் உதாரணங்களாகும்.

அண்ணர் மகனுக்கு வயது வாலிபத்தைத் தொட்டும் கல்யாண விருப்பம் வரவில்லை. கல்யாணப் பேச்செடுத்தால் இடத்தைவிட்டு எழுந்து போகும் மனநிலையில் இருந்தான். எந்த உடல் வியாதியோ மனவியாதியோ அவனுக்கு இல்லை. Gay, Koy என்ற இந்தக் காலத்து விந்தை மனப்பிறழ்வும் அன்று இல்லை. இவனுக்கு காதல் உணர்வு வரவேண்டும் என்பதற்காய் அண்ணன் தனது தங்கை வீட்டில் இருந்த அவள் மகளான இளம்பெண்ணுடன் தன் மகனைத் தனியாக விட்டுவிட்டு தங்கையையும் கணவனையும் கூட்டிக் கொண்டு வேறு ஊருக்குப் போய்விட்டார். அடுத்த நாள் வருவதாக ஏற்பாடு. வீட்டில் இருவரும் தனியே விடப்பட்டார்கள். இளம்பெண் சமைத்தாள். இளைஞன் சமைந்துபோய் இருக்கையில் இருந்தான். சமையல் முடிந்ததும் அவள் அவனைச் சாப்பிடக்கூப்பிட்டாள். போனான். சாப்பாட்டை வாழை யிலையில் போட்டாள். பக்கத்தில் குந்தி இருந்தாள். அவன் அவளைப் பார்த்து நீ சாப்பிடவில்லையா? என்று கேட்டான். 'அப்பா சாப்பிடாமல் அம்மா சாப்பிடுவதில்லை' என்றாள் அவள். இந்தக் கடைசி வசனத்தோடு கதை முடிகிறது.


ஈழத்து யாழ்ப்பாணத் தமிழியலுக்கு இந்தக்கதை காட்டிய பண்பு நிலையை அன்று பலர் சிலாகித்துப்பேசினர். யதார்த்தம் மண்வாசனை என்ற காலத்தில் இக்கதை அவ்விரு இலக்கியக்கோட்பாடுகளையும் கொண்டிருந்தாக தேசிய இலக்கியம் பேசிய முற்போக்கு எழுத்தாளர்களும் முனியப்பதாசனின் முதுகு தட்டினர். 'கற்புகள்' என்று கதைக்கிறீர்களே இதுதான் ஐயா 'பொன்னகரம்' என்ற புதுமைப்பித்தனின் பொன்னகரம் கதையின் கடைசி வரியோடு, முனியப்பதாசனின் 'அப்பா சாப்பிடாமல், அம்மா சாப்பிடுவதில்லை' என்ற கடைசிவரியை இணைத்து இலக்கிய இரசனைகாட்டிய பண்டிதர்களும் பலர்.

பழம்பெரும் எழுத்தாளர் க.தி.சம்பந்தனுடைய கதை உண்டியல் என்று நினைக்கிறேன். சம்பந்தன் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் மாணவன், யாழ். திருநெல்வேலியைச் சேர்ந்தவர். காளிதாசரின் சாகுந்தலம் நாடகத்தை புதிய கோணத்தில் படைத்தவர்.

வழியில் ஒருவர் நடந்துபோகிறார். அவர் கண்ணில் நிலத்தில் கிடந்த ஐந்து ரூபாய் நோட்டுத் தெரிகிறது. குனிந்து எடுக்கிறார். அதனைத் தவறவிட்டவர்கள் யாராவது தேடி வருகிறார்களா? விசாரிக்கிறார்களா? என்று பொறுமையாக நின்று கவனிக்கிறார். நீண்ட நேரமாகியும் யாரும் வரவில்லை. மெல்ல நடந்து எதிரில் இருந்த கோயில் உண்டியலில் அப்பணத்தைப் போட்டுவிட்டுச் செல்கிறார். அப்பொழுதான் அவன் மனம் சாந்தியடைகிறது.

நண்பா!
உண்டியலை உடைத்து பணம் திருடும் இந்தக்காலத்துக்கும், வழியில் கிடந்த பணத்தை தனது சொத்தில்லை என்று நினைத்து கோயில் உண்டியலுக்குள் போட்ட அந்தக்காலத்துக்கும் இடையில் என் நடந்தது? எண்ணிப்பார்க்க வேண்டாமா?

வேற என்ன?
பிறபின்பு



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

# வியாபார நிறுவனம்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

தரக்கட்டுப்பாடு அச்சுறுத்தல் (Threats) எனும் போது போட்டி நிறுவனங்கள், புதிய நிறுவனங்கள் உருவாதல் வாய்ப்புக்கள் (Opportunities) எனும் போது அரசாங்க வரிச்சலுகை, சிறந்த பொருளாதாரக் கொள்கை. இவ் வுதாரணத்தின் மூலம் SWOT ஆய்வின் முக்கியத்துவம் புலனாகின்றது.

எனவே இன்று சூழல் காரணிகள் அடிக்கடி மாறுகின்றன. நிறுவனங்கள் பல்வேறு நிறுவனங்களுடன் போட்டியிட வேண்டியுள்ளது. நிறுவனம் தனது வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் பலவீனங்களை விலக்கிக் கொள்ளவும், பொருத்தமான திட்டங்களைத் தயாரித்து சந்தையில் நிலைத்து நிற்கவும் SWOT ஆய்வு மிக முக்கியமானதாகும்.

முடிவாக எந்தவொரு நிறுவனமும் சூழல் காரணிகளைக் கருத்தில் கொண்டே தனது செயற்பாடுகளை திட்டமிடல் வேண்டும். பொருத்தமான பலங்களைக் கொண்டுள்ளனவா என்பது பற்றிய மதிப்பீட்டினை மேற்கொள்ள வேண்டும். வாய்ப்புக்களையும், அச்சுறுத்தல்களையும் மதிப்பிட்டு வாய்ப்புக்களை கையகப்படுத்தி அச்சுறுத்தல்களை முறியடிக்கும் பொருட்டு பலங்களை விருத்தி செய்யும் போது இலாபத்தை ஈட்டுவதுடன் நிறுவனச் சந்தையில் நிலைத்திருக்கவும் முடியும்.

அடுத்ததாக நிறுவனம் சரியான திட்டமிடலை மேற்கொள்ளும்போது இலாபத்தினை உழைப்பதுடன் நிலைத் திருக்கவும் செய்கின்றது. சாதாரணமாக தனிநபர்கள் கூட எதிர்காலத்தில் மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகளை முன்கூட்டியே திட்டமிடுகின்றனர். முதலில் ஒரு நிறுவனம் தனது நோக்கத்தினை வரையறுத்து அதனை அடையும் பொருட்டு செற்பாடுகளைத் தீர்மானித்து அவற்றினை ஒன்றிணைத்துக் கொள்வத னூடாக திட்டமிடலை மேற்கொள் வேண்டும். எதிர்காலத்தில் என்ன செய்யப்பட வேண்டும்? அதை எப்போது செய்யவேண்டும்? எங்கு செய்யவேண்டும்? யாரால், எவ்வாறு செய்யப்பட வேண்டும்? என்பன போன்ற விடயங்களில் கவனத்தினை செலுத்துவதன் மூலம் சரியான திட்டமிடலை இலகுவாக மேற்கொள்ளமுடியும்.

அதாவது நிறுவனத்தின் நோக்கத்தினை வரையறுத்து, அந்த நோக்கத்தை அடையும் பொருட்டு செற்பாடுகளைத் தீர்மானித்து, தேவையான வளங்களை ஒதுக்கீடு செய்து, செய்யவேண்டிய செயற்பாட்டினை அமல்படுத்துவதில் நிறவனத்தின் வெற்றி தங்கியுள்ளது. சரியான திட்டமிடல் மூலம் ஒரு நிறுவனம் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்வதால் திட்டமிடல் செயற்பாடு மிகமுக்கியமான-தாகக் காணப்படுகின்றது. திட்டமிடலின் மூலம் வளவிரயத்தை குறைத்துக்கொள்ள முடிகின்றது. முக்கியமாக நேர விரயத்தினைக் குறைத்துக் கொள்வதற்கு திட்டமிடல் மிக அவசிய மாகப்படுகின்றது.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிச்சயமற்ற தன்மைகளை மதிப்பீடு செய்வதற்கும், எதிர்காலத்திற்குத் தேவையான வளங்களை முன்கூட்டியே ஒதுக்கீடு செய்வதற்கும், சிக்கலான செயற்பாடு களைக்கூட இலகுவாக தீர்த்துக் கொள்வதற்கு திட்டமிடல் மிகவும் அவசி யமாகப்படுகின்றது. இவை மாத்திரமன்றி நிறுவனத்தின் நியமத்தரம், நிறுவனத்தின் நடத்தை என்பனவும் திட்டமிடல் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது.

இன்று நிறுவனங்கள் போட்டிமிக்க சூழலில் தொழிற்படுகின்றன. உள்ளூர் நிறுவனங்களினால் மட்டுமின்றி சர்வதேச நிறுவனங்களின் போட்டியினையும் எதிர்கொள்கின்றன. இவையனைத்தையும் கருத்தில் கொண்டு போட்டியினை எதிர்வு கொள்ளக்கூடிய நிறுவனங்களே சந்தையில் நிலைத்திருக்கமுடிகின்றது. தொடர்ந்து நிலைத்திருப்பதற்கு தந்திரோபாயரீதியான திட்டமிடல் மிகவும் அவசியமாகின்றது.

திட்டமிடும் போது அத்திட்டமிடலானது சுலபமாக அமல்படுத்தப்படக்கூடியதாக இருக்கவேண்டும். ஒவ்வொரு திட்டமிடலின்போதும் அத்திட்டமிடலானது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது உயர்மட்ட முகாமையாளரின் ஆதரவினைக் கொண்டிருப்பதுடன் அமல்படுத்தும் போது அதில் ஈடுபடும் சகல ஊழியர்களின் ஆதரவினையும் பெற்றிருப்பது அவசியமாகும். திட்டமிடலில் கட்டுப்படுத்தல் வசதியி னைக் கொண்டிருத்தல் அவசியமான தாகும். கட்டுப்படுத்தும் வசதியினால் செயற்திறனை மதிப்பீடு செய்யவும், அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் திட்டமிடல் தொடர்பாக தேவையான மாற்றங்களை மேற்கொள்ளவும் உதவியாகவிருக்கும். அத்துடன் திட்டமிடலானது சூழலுடன் இணைந்ததாக உள்ளதால் தீர்மானிக்கப்பட்ட நோக்கத்தினை இலகுவாக அடையக் கூடியதாக இருக்கும்.

இன்று குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகளில் வசிக்கும் நம்மவர்கள் பல்வேறு போட்டிமிக்க வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டியுள்ளது. பல்கலாச்சார மற்றும் பன்மைத் தன்மையுடைய கனடா நாட்டில் மிகப்பெரும் சவால்மிக்கதான வர்த்தக நடவடிக்கைகளில் நம்மவர்கள் ஈடுபட்டிருப்பதால் அவர்கள் நீண்டு நிலைத்திருப்பதற்கும், பெருஇலாப மீட்டுவதற்கும் பல்வேறு வியாபாரத் தந்திரோபாயங்களை கடைப்பிடிக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்.

இவ்வாறான பல்வேறு தந்திரோபாயங்களில் நிறுவனத்தின் சூழலும், சரியான திட்டமிடலும் முக்கியமான காரணிகளாக உள்ளதை நிறுவனங்கள் சரியாக இனம் கண்டு நிறுவனத்தின் தரத்தினை உயர்த்திக் கொள்வதற்கு முயற்சிக்கவேண்டும். இவ்வாறான செயற்பாடுகளினூடாக சிறு முதலீட்டாளர்களும், சிறுவர்த்தக நிறுவனங்களும் பல்வேறு வர்த்தகப் போட்டிமிக்க கனடா நாட்டின் நிறுவனச்சந்தையில் நிலைத்திருந்து பெருஇலாபமீட்டமுடியும்.

# Avatar இன்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

போர்த்துக்கீசர், வட-லத்தீன் அமெரிக்காவை முழுமையாக கைப்பற்றி விட்டனர். இப்பிரதேசத்தில் எந்த ஒரு பூர்வீக குடியினது, கலாச்சாரத்தையும், அவர்களை யும் காணமுடியாதளவிற்கு கொலை செய்து விட்டனர். எனக்கு இது இலங்கையின் கதை போல் தோன்றியது. எங்களை ஆண்டு, எங்களை சுரண்டிவிட்டு, எங்களுக்குள் தங்களை புகுத்தி விட்டு சென்று விட்டார்கள். இன்றுவரை அவர்கள் புகுத்திய மேலாதிக்க மனோபாவத்தால் அவர்களது அடிமை போல் செயற்படுகின்றோம். மற்றொருபுறம் எங்களை விஞ்ஞானிகளும், வியாபாரிகளும் சமூகத்தை வெவ்வேறு கோணங்களில் பார்க்கின்றார்கள். விஞ்ஞானியைப் பொறுத்தவரை புதிய கண்டுபிடிப்பு என்பது மனித இனத்தின் அடுத்தபடிக்கான மற்றொரு அத்தியாயம். வியாபாரிக்கு அடுத்த முதலீட்டிற்கான புதிய கதவு. விஞ்ஞானம் ஆக்க பூர்வமானது. பல புதிய கண்டு பிடிப்புக்கள். பல நன்மைகள் உண்டு. இதனை அழிவுக்கும் பயன்படுத்தலாம். கூடு விட்டு கூடு பாயும் விஞ்ஞான விந்தையால் நன்மைகள் உண்டு. அதனையே இந்த கூட்டுத்தாபனங்களும், அரசுகளும் அழிவுக்கும், சுய நலத்துக்கும் பாவிக்கின்றன. அணு குண்டைப் போல். இயக்குனர் ஒரு பேட்டியில்



இதனை உறுதிப்படுத்தியுள்ளார். (technology in and of itself is not evil, but there is a great potential for evil in the human misapplication of technology)

ஆண்ட அரசுகளும், அவை அமைந்த விதத்தையும் பார்க்கும் பொழுது அவர்களும் இதனையே செய்துள்ளார்கள். ரோம, கிரேக்க, இந்து, மொகாலய, அக்பர் சாம்ராச்சியங்கள் இவ்வாறே அமைந்துள்ளன.

மேற்கூறிய விமர்சனங்களுக்கு அப்பால் கமரோன் சுரண்டலை சிறப்பாகவே வெளிப்படுத்தியுள்ளார். பயங்கரவாதம் என்ற பெயரிலும், உலகமயமாதல், தேசிய இனப்பிரச்சினையின் சமாதான தூதர் என்ற பெயரிலும் மூன்றாம் உலக நாடுகளை சுரண்டுகின்றன. அப்படிக் கூறுவதை விட குறையாடுகின்றன. இன்று உலகில் ஆங்கிலத்தை தலைமையாகக் கொண்ட ஸ்பானிஸ் உட்பட்ட மொழிகளே ஆட்சி மொழியாக உள்ளன. ஆங்கிலம் தெரியாத நாடு உலகில் எதுவுமில்லை எனலாம். இவர்களது கலாச்சாரம் உலகெங்கும் உள்ளன. படத்தில் காட்டப்படும் கிரகம் ஓர் மூன்றாம் உலக நாடு. இவர்களிடம் சண்டை பிடிக்க பராம்பரிய ஆயுதங்களை தவிர வேறெதுவும் இல்லை.

சமூகத்துக்கும், கூட்டுத்தாபனத்துக்குமான வேறுபாடுகளை இப்படம் சிறப்பாக பதிவு செய்துள்ளது. தனியார் கூட்டுத்தாபனங்களின் சுய நல, லாப நோக்கின் அரக்கத்தனத்தை இங்கு காணலாம். இவர்களை பாதுகாக்க உள்ள முன்னாள் படை வீரர்களும் இதனையே செய்கின்றார்கள். படத்தின் இறுதிக் காட்சியில் RDA நிறுவனத்தின் கொலை வெறி சிறப்பாக வெளிப்படுகின்றது. இதனை அரசுடனும் ஒப்பிடலாம். பூமி வாழ் மக்கள் நிறுவனவயப்படுத்தப்பட்டுள்ளார்கள். கூட்டுத்தாபனங்கள் என்ன செய்கின்றதோ அதனைத் தான் பெரும்பாலான அரசுகள் செய்கின்றன. அரசுகளை தீர்மானிக்கும் சக்தியாக கூட்டுத்தாபனங்கள் உள்ளன.

படத்தின் சிறப்பம்சம் சமூகம், கூட்டுத்தாபனம், தொழில்நுட்பத்துக்குமான வேறுபாட்டை காட்டுவதே. இயக்குனரின் ஆரம்பத்தில் இருந்தே படத்தின் அரசியலை மறுத்துள்ளார். இவரது அனைத்து படங்களும் தொழில்நுட்பம் மிகுந்தவை. இவர் Digital Domain என்ற நிறுவனத்தின் முன்னாள் தலைமை அதிகாரி.

யதார்த்தமற்ற சூழலுக்கு யதார்த்த வடிவம் கொடுக்க சினிமாவால் தான் முடியும். கவிதையில், கதையில் சம்பவங்களை கற்பனை செய்து பார்ப்பது போலல்லாது நேரில் எம் கண்முன்னே நடக்கின்றன. படம் இரு பாத்திரங்களிடையே பயணிக்கின்றது. ஒன்று தொழில் நுட்பம், இரண்டாவது கதை. காலனித்துவத்திற்கு எதிரான கதை புதிய தொழில் நுட்பம் மீது பயணிக்கின்றது. பார்வையாளனுக்கு தொழில் நுட்பத்தின் மீது ஏற்படுத்தும் ஈர்ப்பு, கதையின் மேல் ஏற்படாது. இயக்குனரின் நோக்கமும் இதுவே.

அவரின் வார்த்தைகள் இவை " People need to be reminded from every direction. May be people want to go see a film for pure entertainment, and not want to think about it and not have to feel guilty – I'm not trying to make people feel guilty" (இது இயக்குனரின் ஒரு பேட்டிக் குறிப்பு.)

இதனால் தான் வெட்கப்படவேண்டிய பார்வையாளன் புன்னகைத்தபடி வெளியேறுகின்றான்.

# நல்ல தருணம் இது... நழுவ விடலாமோ?

மிகக்குறைந்த வட்டி வீதம்
கட்டுபடியாகும் அடமானக் கட்டணங்கள்
புதிய வீடு வாங்கவும்,
ஏற்கனவே வீடு வைத்திருப்பவர்கள் கடன் பழுவைக் குறைத்துக் கொள்ளவும்
**நல்ல தருணம் இது... நழுவ விடாதீர்கள்...**



- digi Media -

**Veriable Rate • Fixed Rate • Closed Mortgage • Open Mortgage • Short Term • Long Term • Cash Back Mortgage**
எதைத் தேர்ந்தெடுப்பது என்று குழப்பமாக இருக்கிறதா?

ஒவ்வோருவருடைய அடமானத் தேவைகளும், சூழ்நிலைகளும் வேறுபட்டவை. தனித்துவமானவை. உங்களுக்குப் பொருத்தமான அடமான வகையைத் தேர்ந்தெடுக்க அனுபவமும், நம்பிக்கையும் நிறைந்த ஒரு முகவரை நாடுங்கள்

## Das Narayanasamy

Mortgage Broker

**416-543-6614**

Fax: 1-888-511-8960
E-mail: das@centumoptima.com

Lic# M08007147



CENTUM™
Optima Mortgages Inc.
Lic# 10894

என் பணி கடன் செய்து கொடுப்பதே!

# மனப்புண்ணைக் குணமாக்கிட எனது நிலையை வெளிப்படுத்த வேண்டும்

எனது புண்பட்ட உணர்வுகளைக் குணமாக்கிட இதயத்தைத் திறந்து எனது உண்மை நிலையைப் பிறருக்குக் காட்ட வேண்டும் என்பதை நான் விளங்கிக் கொண்டதும் எனக்குப் புரிந்துணர்வுடன் கூடிய உடன்பாடு உண்டாகும்.

வழக்கமாக, எமது உடல் உள்ளம் புண்படுவதைத் தவிர்ப்பதற்காக எமது இதயத்தை நாம் இறுக மூடி பிறரை எம்மிடமிருந்து அப்புறப்படுத்தி விடுகிறோம். மேலும் எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நாம் தற்காப்புக் கவசங்களை உபயோகிப்போம். ஒருவரையுமே எம்மை நெருங்க அணுக விடமாட்டோம். சகல சம்பவங்களிலும் யாவரும் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஏதோ காரணத்திற்காகத்தான் செயல்படுகிறார்கள் என நினைத்து ஒருவரையுமே நம்பமாட்டோம். அது உண்மையில்லாவிடினும் ஏதோ காரணத்திற்காக பிறரின் இத்தகைய செயல்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள தனிமைப்படுத்தப்பட்டு வாடி வதங்குவோம். புண்பட்டு, காயப்பட இவ்விரண்டையும் தவிர்த்துக் கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும் என்பதும் எமக்குப் புரிவதில்லை.

பிரியமானவரே! வழக்கமாக பிறர் உங்களைப் புண்படுத்த விரும்புவதில்லை. அவர்கள் உங்களைத் துன்புறுத்த வேண்டும் என நீங்கள் எதிர்பார்ப்பதால் தான் அவர்கள் உங்களைப் புண்படுத்துகிறார்கள். உங்கள் தற்காப்புக் கவசங்களைக் கிழித்தெறிந்திட முயற்சிப்பதாலேயே அவர்கள் உங்களைப் புண்படுத்துகின்றனர். தங்களின் தற்காப்புக் கவசங்களைப் போலவே உங்களது முகமூடிகளும் இருப்பதாக உணர்வதால் தான் அவர்கள் இவ்வாறு உங்களைத் தாக்குகிறார்கள். தங்களது பிரச்சனைகளின் பிரதிபலிப்பை உங்களிடம் அவர்கள் காணும்போது, அது அவர்களைப் பயப்படுத்தும். இவ்வாறு பயப்படுத்திய நீங்கள் தங்களைத் தாக்குவதற்கு முன்பு, பதிலடியாக தாங்களே உங்களைத் துன்புறுத்த முற்படுவார்கள். இதனால் தான் நீங்கள் இவ்வாறு தாக்கப்பட்டுக் காயப்படுகிறீர்கள். மற்றவர்கள் உங்களைக் காயப்படுத்த விரும்பவில்லை என்பதை நீங்கள் உணர வேண்டும். என்ன விதத்தில் தமது செயல்பாடு உங்களைப் புண்படுத்துகிறது என்பதை அவர்கள் உணர்ந்து புரிந்து கொள்வதில்லை.


தற்காப்பு முகமூடியைக் கொஞ்ச நேரமென்றாலும் அகற்றி அவர்களின் செய்கை எவ்வாறு உங்களைத் துயரப்படுத்துகின்றது என்பதை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளாவிட்டால், எப்படி உங்களின் மனவேதனை அவர்களுக்குத் தெரியவரும்? உங்கள் காயங்களை வெளிப்படுத்தினால் நீங்கள் பலவீனமான கோழை என நினைப்பார்கள் என நம்புவதாலேயே இவ்வாறு உங்கள் உண்மை மனநிலையை நீங்கள் வெளிப்படுத்துவதில்லை. தற்காப்பு முகமூடிக் கவசங்களுடன் உனது இதயத்தை நீ இறுக்கி மூடி விட்டால் குணம் தரும் அன்பும் ஒளியும் உனக்கு ஒருபோதும் கிடைக்காது. இப்படி இறுக மூடிக் கொண்டிருந்தால் உனது மனப்புண் மாறாமல் தொடர்ந்தும் வலித்துக் கொண்டேயிருக்கும்.

உன்னைப் புண்படுத்த பிறர் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என இன்றுவரை நீ நம்பி வந்திருக்கலாம். இன்று யாரேனும் ஒருவரையாவது உனது இதயத்திற்குள் நுழையவிடு. குணமாக்கிடும் சக்தியாகிய அன்பை உனக்குள் நுழைய அனுமதித்து அதை ஏற்றுக்கொள். உனக்கு நல்லவையே நடக்கும் என முற்று முழுதாய் நம்பு! அதன்பிறகு நடப்பது உன்னை நிச்சயம் ஆச்சரியத்தில் முற்றுமுழுதாய் ஆழ்த்தும்.

**எனது தற்காப்புக் கவசங்களைக் களைந்து எனது இதயத்தை திறந்து அன்புடன் வாழ இன்றுமுதல் ஆரம்பிக்கப்போகிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 163


*மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214*



லலிதா புருடி

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
Virus Removal
Internet Sharing
Computer Tune Up
Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES



வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க
எந்தவித அடமானக் கடன்களும் பெற
Direct - 416.575.5055
Anton Jeeva
Real Estate / Principal Mortgage Broker
* எனது சேவையைப் பெற்றவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள் *
RE/MAX
FOR SALE $358,000

• 27 Brimstone Cres
• Middlefiels & Finch
• 3+1 bedroom
• 3 washrooms
• 1 kitchen
• Detached house 2-Storey
For Sale $284,900

• Markham/ Lawrence
• Semi-Detached Bungalow
• 4 bedrooms • 3 washrooms
•2 Stoves, Fridge, All Window Coverings, All Electric Light Fixtures. Gas Burner ...
FOR SALE $569,900

• 2411 Canal Rd E
• Simcoe Rd To Canal E
• 2 + 2 Bedrooms
• 2 Washrooms
• 2 Fridges, 2 Stoves, Washer, Dryer, All Elf, All Window Coverings. Farm Equipments Are Available At Reduced Cost.
Condo. for Sale $334,900

• Midland & Lawrence
• Bedroom : 3+1
• Washroom : 3
• All Elfs, Fridge, Stove, Washer&Dryer, B/I Dishwasher, All Window Coverings.
FOR SALE $6.5 Million

• HWY 401& Markham
• Height #189-16' To Joists , #195-14' To Joists , Truck Loading Docks And Grade Level Docks Available. Tons Of Parkings Available.
For Sale $654,900

• Islington & Rutherford
• Detached, 2-Storey
• Bedroom : 4 + 1
• Washroom : 5 • All Window Coverings , Gas Stove, Fridge , Washer , Dryer , B/I Dishwasher
NEW TORONTO ICE CONDO. PHASE II

VIP access before Public
For Sale $327,500

• Markham/Eglinton
• 3-Storey
• Att/ Row/ Twnhouse
• Bedroom : 3
• Washroom :3
• Finished Walk-Out Basment With Full Fenced Backyard.Fridge & Stove, Dishwasher, Washer/Dryer
Mortgages & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO
REMAX VISION REALTY INC.
Specialllized in Power of Sale Homes

AVM MAX 2000
Bus & Tour Company
5215 Finch Ave. E #250 (GTA Square Mall)
For More Information Please Contact Paddy at:
(416) 609-2542 • paddy-avmmax2000@hotmail.com
Florida Tour
March Break (12th-21st)
9 Days Trip Starting From: $550.00/Person
• Virginia (Luray Caverns - Largest in the East)
• Georgia (Georgia Aquarium - World's Largest)
• Florida (Disney World, Universal Studios, Kennedy Space Center, Sea World, etc.) Orlando Premium Outlets - Shopping
⇒ These prices include bus fair, 8 nights hotel accommodations, and continental breakfast for 8 days
⇒ Individuals are responsible for entrance fees for all attractions, driver's and tour guide's tip, all lunches, dinners, and any other expenses
